அறிவு, மனப்பாங்கு மற்றும் பழக்கங்கள் பற்றி தேடிப் பார்த்தல்

பெண்களும் மோதலும்

போரினால் பாதிக்கப்பட்ட
பெண்களின் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு, மனப்பாங்கு மற்றும் பழக்கங்கள் பற்றி தேடிப் பார்த்தல்

பெண்களும் மோதலும்



போரினால் பாதிக்கப்பட்ட
பெண்களின் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

~~~~~~~

1. அறிமுகம்

2. பங்குபற்றுனர்களைத் தெரிவு செய்தவற்கான ஒரு நாள் செயலமர்வு

3. இலகுவாக்கப்பட்ட கலந்துரையாடல் - இரண்டு நாள் செயலமர்வு

   - செயற்திறன் மிக்க செவிமடுத்தலும் தலைமைத்துவமும்

4. நோக்கமும் புரிந்துணர்வும். - இரண்டு நாள் செயலமர்வு

   - மோதல் தீர்வுக்கான அடிப்படை தேர்ச்சிகள் - அன்றாட நடவடிக்கைகளின் போது பயன்படுத்தக் கூடிய உபகரணங்களும் முறைமைகளும்

5. மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய சக்தியைக் கண்டறிதல் - இரண்டு நாள் செயலமர்வு

   - சமாதானத்தை உருவாக்கும் போது பெண்கள் என்ற ரீதியில் நீங்கள் முகம் கொடுக்கும் சவால்கள்.

   - அனர்த்த நிவாரணப் பணிகளின் போது மனிதாபிமானத்தைக் கண்டறிதல்

6. வலையமைப்புக்களை உருவாக்குதல் – ஒரு நாள் செயலமர்வு

   - வலையமைப்புக்களையும், கூட்டணிகளையும் உருவாக்குதல்

7. கருத்துப் பரிமாற்றப் பயணங்கள்

   - புத்தளம் மாவட்டம்
   - திருகோணமலை மாவட்டம்
   - அம்பாறை மாவட்டம்

8. மதிப்பீட்டுக் கூட்டம்

9. முடிவுரையும் கற்றுக் கொண்ட படிப்பினைகளும்

10. பின்னிணைப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~~~~

அறிவு, மனப்பாங்கு மற்றும் பழக்கங்கள் பற்றி தேடிப் பார்த்தல்
பெண்களும் மோதலும்

அறிமுகம்

கனேடிய WUSC நிறுவனத்தின் "பெண்கள் சமாதானத்தை அர்த்தமுள்ளதாக்குவார்கள்" வேலைத்திட்டம் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சங்கத்துடன் இணைந்து சமாதானத்திற்காக கிராமிய பெண்களிடம் உள்ள திறமைகளை ஆராயும் ஓர் பரீட்சார்த்த வேலைத்திட்டமாக இதனை ஆறு மாத குறுகிய காலப் பகுதிற்குள் வெற்றிகரமாக நிறைவேற்றியது. இத்திட்டத்திற்கு கனோடிய சர்வதேச அபிவிருத்தி முகவரகம் நிதியுதவியை வழங்கியதுடன், அது WUSC அமைப்பு, Cowater International மற்றும் Match International Centre என்பவற்றால் கூட்டாக அமுல்படுத்தப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்திற்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட தென் மாகாணத்தின் காலி, மாத்தறை, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலிருந்து ஆறு பெண்கள் அமைப்புகளைத் தெரிவு செய்து, ஓர் அமைப்புக்கு 10 பேர் வீதம் 60 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலமர்வில் முதலாவது நாளில் வேலைதிட்டத்தின் விடயங்களையும், இனி வரும் செயற்பாடுகளையும் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. இரண்டாவதாக தலைமைத்துவமும் செயற்திறன் மிக்க செவிமடுத்தலும் பற்றி இரண்டு நாள் செயலமர்வின் ஊடாக தெளிவு பெறப்பட்டது. இரண்டாவது இரண்டு நாள் கொண்ட செயலமர்வின் போது முரண்பாடு ஒன்றை இனம்காணல் மற்றும் அதைத் தீர்த்தலின் போது நோக்கும் கண்ணோட்டமும் அறிவும் பற்றி தெளிவினை பெறப்பட்டது. மாற்றத்தை ஏற்படுத்த உள்ள வல்லமையை உரசிப்பார்க்கவும், பெண்கள் என்ற ரீதியில் தேசிய பிரச்சினையை நோக்குவதற்கும், சுனாமி பேரழிவு நேரத்தில் மக்களின் மனிதாபிமான செயற்பாடுகள் பற்றியும் மூன்றாவது இரண்டு நாள் கொண்ட செயலமர்வின் போது அறிவூட்டப்பட்டது. அதன்பின் ஒரு அமைப்பில் இருந்து 05 பேர் விகிதம் 30 பெண்கள் காலியில் ஒன்று கூடி கூட்டமைப்புகளையும் வலைப்பின்னலையும் உருவாக்குவது பற்றி பரிசீலனை செய்தனர். அறிவு மற்றும் அனுபவங்கள் என்பவற்றைப் பகிர்ந்து கொள்வது குறித்தும் அவர்கள் உரையாடினார்கள்.

வேலைதிட்டத்தின் அடுத்தபடியாக அறிவை பெற்றுக் கொடுக்கும் கற்றலுக்கான பயணம் செல்லல் நடைபெற்றது. அனுபவ பகிர்தல் பயணத்திற்காக புத்தளம், அம்பாறை, கந்தளாய் மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டன. இப்பிரதேசங்கள் அனைத்திலும் மூன்று சமூகத்தினரும் பல சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள் என்பவற்றுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். மோதல் இப்பிரதேசங்களில் இனங்களுக்கிடையிலான பிணக்கினை தீவிரப்படுத்தியிருப்பதுடன் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் தீவிரப்படுத்தியிருக்கிறது.

இந்தச் செயற்பாடுகளின் போது ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றை வழங்கிய "பெண்கள் சமாதானத்தை அர்த்தமுள்ளதாக்குவார்கள்" எனும் வேலைத்திட்டத்தின் களப் பணிப்பாளர் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும், வளப் பகிர்வாளர்களாக பங்களித்த திருமதி திலகா வீரக்கோன், திருமதி யு.எம்.ஜி. சந்திரா, திரு. நவாஸ் முஹமட் மற்றும் திருமதி மொனிக்கா அல்பிரட் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த வேலைதிட்டத்தில் பங்கு பற்றிய மாத்தறை மாவட்டத்தின் ருஹுணு சிசில சமூக சேவை அமைப்பு மற்றும் சமகி பெண்கள் அமைப்பு, களுத்துறை மாவட்டத்தின் திரிய பெண்கள் அமைப்பு மற்றும் முன்பள்ளி அபிவிருத்தி மன்றம், காலி லக் காந்தா மற்றும் பெண்கள் விவசாய அமைப்பு என்பன தமது அங்கத்தவர்களை இவ்வேலைதிட்டத்திற்கு பங்களிக்கச் செய்ததன் மூலம் பெரும் ஒத்துழைப்பை வழங்கியுள்ளன. செயலமர்வுகளை நடாத்துவதற்காக ஒத்துழைப்பு வழங்கிய பொல்ஹேன ரீப் கார்டன், அஹங்கம இன்சைட், களுத்துறை டென்ஜரின், ஹிக்கடுவை அமாயா ரீப் மற்றும் காலி லேடி ஹில் ஹோட்டல்களின் முகாமையாளர்கள் உட்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். புத்தளம் பிரஜா திரிய மன்றத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும், அம்பாறை சேவா லங்கா மன்றத்தின் செல்வி சீதா உட்பட பங்குபற்றிய அனைத்து பெண்களுக்கும், கந்தளாய் கிராமிய சிங்கள, தமிழ், முஸ்லிம் பெண்கள் அமைப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட வீரநகர் கிராம அபிவிருத்தி மன்றத்தின் மோகனா வீரையா அவர்களை உள்ளடக்கிய பெண்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது நிறுவனத்திலிருந்து பங்குபற்றி பல விதத்தில் உதவி செய்த எமது நிறுவன ஆலோசகர் திரு. சோம்நாத் பருவா அவர்களுக்கும், செயலமர்வை நடத்த உதவி செய்த திரு. சரத் வீரசேகர ஆகியோருக்கும், அறிக்கை தயாரித்து உதவி செய்த திருமதி வசந்தி வீரசேகர மற்றும் செல்வி வீரக்கோன், அடுத்ததாக இந்தக் கையேட்டை வெளியிட கணணியில் பிரதி செய்யவும், மொழிபெயர்ப்பு செய்யவும் கடுமையாக உழைத்த எமது காரியாலயத்தில் பணி புரியும் செல்வி ரஞ்சனி பிரேமரத்ன, சாயா ரணவீர, வாசனா ரத்னாயக்க, யமுனா ஹர்ஷனி ஆகியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இந்த வேலைத்திட்டத்தின் நோக்கங்கள்

- பெண் பங்கேற்பாளர்களின் தலைமைத்துவம், உரையாடல் மற்றும் செவிமடுப்புத் திறன்கள் என்பவற்றைக் கட்டியெழுப்புதல்.
- தென்னிலங்கையில் பெரும்பான்மையினராக வாழ்ந்து வரும் சிங்களப் பெண்களுக்கு மத்தியில் மோதலின் இயல்பு மற்றும் அதற்கான மூல காரணங்கள் என்பன குறித்த உயர் அளவிலான புரிந்துணர்வை ஏற்படுத்தல்.
- மோதலின் தாக்கங்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகள் என்பன குறித்த அறிவை அதிகரித்தல்.
- கிழக்கில் தொடர்ந்து இடம்பெற்று வரும் மோதலை தென்னிலங்கை பெண்களின் அன்றாட வாழ்வுடன் தொடர்புபடுத்துதல்.
- சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் அல்லது மனித உரிமைகள் என்பவற்றில் பாரம்பரியமாக சம்பந்தப்பட்டிராத துறைகளைச் சேர்ந்த பெண்களை அணிதிரட்டுதல்.

பங்காளர்களாக தெரிவு செய்யப்பட்ட அமைப்புகள்

மாத்தறை மாவட்டம் - ருஹுணு சிசில சமூக சேவை அமைப்பு
சமகி பெண்கள் அமைப்பு.

காலி மாவட்டம் - நவோதயா தென்னிலங்கை பெண்கள் மன்றம்.
லக் பெண்கள் விவசாய அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறை மாவட்டம். - முன்பள்ளி மன்றம்
திரிய பெண்கள் அமைப்பு.

1. பங்கேற்பாளர்களை சேர்த்துக் கொள்ளல் - ஒரு நாள் செயலமர்வு

முதலில் ஒரு அமைப்பிலிருந்து 20 பேர் கலந்து கொண்டனர். நேர்முகக் கலந்துரையாடல் மற்றும் கேள்விக்கொத்து என்பவற்றின் அடிப்படையில் 20 பெண்களிலிருந்து 10 பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்தச் செயலமர்வில் எதிர்கால வேலைத்திட்டம் பற்றி நீண்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டதுடன், எதிர்காலச் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டன.

2. நெறிப்படுத்தப்பட்ட உரையாடல் - இரண்டு நாள் செயலமர்வு

மாத்தறை மாவட்டம்

முதலாவது செயலமர்வு போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சங்கத்தின் தலைவி விசாகா தர்மதாச அவர்களின் தலைமையில் 2008 ஆகஸ்ட் மாதம் 8, 9 ஆம் திகதிகளில் மாத்தறை பொல்ஹேன ரீப் கார்டன் ஹோட்டலில் நடாத்தப்பட்டது.

அவர் நோக்கத்தை விளக்கி கூறியதாவது, "இன்று எங்கள் நாட்டில் நடைமுறையில் இருக்கும் பல முரண்பாடு நிலைகளுக்கு முக்கிய காரணம் மற்றவர்களுக்கு செவிமடுக்காமையாகும். ஒவ்வொருவரும் எல்லாவிடயத்திலும் குறைகளை தேடிக் கொண்டிருப்பதுடன், அதில் உள்ள நன்மைகளை கவனத்தில் எடுக்காதது ஒரு பிரச்சினை என்பதை விளக்கினார்.

மாத்தறை மாவட்டம் ருஹுணு சிசில அமைப்பின் தலைவி திருமதி திலகா வீரக்கோன் மற்றும் காலி மாவட்டத்தின் வியாபார மற்றும் தொழில் அபிவிருத்தி நிறுவனத்தின் முகாமையாளர் திருமதி யு. எம். பீ. சந்திரா ஆகியோர் வளப் பகிர்வாளர்களாக பங்குபற்றினார்கள்

களுத்துறை மாவட்டம்

இச்செயலமர்வு 2008 ஆகஸ்ட் 13 மற்றும் 14 ஆகிய திகதிகளில் களுத்துறை போமலுவ விவசாயத் திணைக்கள பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டதுடன், அதே வளப் பகிர்வாளர்கள் செயலமர்வை நெறிப்படுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலி மாவட்டம்

இரு நாள் செயலமர்வு காலி லேடி ஹில் ஹோட்டலில் 2008 ஆகஸ்ட் 15 மற்றும் 16 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்டது. இச்செயலமர்வு முன்னைய தலைப்புக்களில் அதே வளப் பகிர்வாளர்களினால் நெறிப்படுத்தப்பட்டது.

செயலமர்வின் உள்ளடக்கம்

முதலாவது நாள்

எனது மலர் அனுபவம் - திறமைகளை இனங்காணுதல்

- தனிநபர் வெற்றிக்காக 4H
- திடீர் அனர்த்த சந்தர்ப்பங்களில் பெண்கள் முகம் கொடுக்கும் நிலமைகள்
- பெண்களின் வெற்றிகரமான தலைமைத்துவத்தை நோக்கி
- தலைமைத்துவமும் தொடர்பாடலும்

இரண்டாவது நாள்

- முனைப்பான செவிமடுத்தல் மற்றும் முனைப்பற்ற செவிமடுத்தல் சம்பந்தமான கலந்துரையாடல்.
- வளப் பகிர்வாளர்களினால் முன்வைக்கப்படும் பாத்திரமேற்று நடித்தல்.
- பங்குபற்றுபவர்களினால் முன்வைக்கப்படும் பாத்திரமேற்று நடித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 வது அமர்வு

எனது மலர் பயிற்சி



அமர்வின் நோக்கங்கள்

- இன்று பெண்கள் என்ற ரீதியில் தாம் இருக்கும் நிலைமையைப் பற்றிச் சிந்திக்கவும் பகுப்பாய்வு செய்யவும் சந்தர்ப்பம் வழங்குதல்.
- நிறுவனத்தின் தனிநபருக்குள் இருக்கும் பல்வேறுப்பட்ட திறமைகளையும் ஆற்றல்களையும் இனம்காணல்.
- சமூக சேவையில் பெண்களின் எதிர்கால குறிக்கோள் சம்பந்தமான எண்ணக்கருக்களை உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- செயலமர்வுகளிலிருந்து எதிர்பார்ப்புக்களை இனங்காணுதல்.

மலரின் ஐந்து இதழ்களையும் பூர்த்தி செய்வதற்காக பங்கேற்பாளர்களால் வழங்கப்பட்ட தகவல்கள் எமது செயற்திட்டத்தின் வெற்றியின் மட்டத்தை அறிந்து கொள்வதற்கு உதவின.

களுத்துறை மாவட்டம்

திரிய காந்தா சிறுவர் அபிவிருத்தி மன்றத்தின் பங்கேற்பாளர்கள் பின்வரும் திறன்களை இனங்கண்டனர்:

- பாடல், நடன, வாத்திய திறன்
- திட்டங்களைத் தீட்டல்
- நோக்கத்துடன் செயல்படல்
- மக்களை ஒன்று திரட்டும் திறன்
- மற்றவர்களை செவிமடுக்க வைக்கும் திறன்
- ஒன்றை உணர வைக்கும் திறன்
- அர்ப்பணிப்பு, விடாமுயற்சி, ஆர்வம்
- செவிமடுத்தலும் கிரகித்துக் கொள்ளும் திறனும்.
- நடுவராக செயலாற்றும் திறன்
- கணக்கு வைத்தல் திறன் (சங்கங்களில்)
- நம்பிக்கையை பெறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அமைப்பில் இணையும் திறன்
- மற்றவர் முன்னிலையில் எதையும் முன்வைக்கும் திறன்
- வீட்டில் மனைவி, தாய் என்ற ரீதியில் ஆக்கபூர்வமாகச் செயற்படும் திறன்
- முன்னோடியாக வாழும் திறன்
- சேமிக்க உள்ள விருப்பம்
- சுயதொழிலில் ஈடுபடல்
- சிறந்த வகையில் விற்பனை செய்யும் திறன்
- மற்றவர்களின் அன்பையும் வரவேற்பையும் பெற்றுக்கொள்ளும் திறன்
- சந்தர்ப்பம் மற்றும் நபர்களுக்கு ஏற்ற வகையில் பேசும் திறன்

தேசிய முன்பள்ளி மன்றத்தின் பங்கேற்பாளர்கள் பின்வரும் திறன்களை எங்கண்டிருந்தனர்:

- குழுக்களை உருவாக்கி, செயற்படுத்தல்.
- பாடல், வாத்தியம், மேடையில் பேசுதல்.
- ஆக்கத் திறன்கள்.
- பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் ஆற்றல்.
- செயலமர்வுகளை ஏற்பாடு செய்யும் திறன். (சிறு குழுக்களுக்குப் பொருத்தமான செயலமர்வுகள்)
- கடன் அறவிடல் அளவை 95மூ இல் பராமரித்து வரும் ஆற்றல்.
- டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருக்கும் முன்ப ளி ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- பங்கேற்பாளர்கள் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தும் ஆற்றல்.
- அர்ப்பணிப்புணர்வு.
- உரிய நேரத்தில் வேலைகளைச் செய்தல்.
- ஒரு கட்டமைப்பின் பிரகாரம் வேலை செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலமர்வின் போது இரு அமைப்புக்களையும் சேர்ந்த பங்கேற்பாளர்கள் பின்வரும் எதிர்கால குறிக்கோள்களையும், செயலமர்வின் எதிர்பார்ப்புக்களையும் இனங்கண்டிருந்தனர்:

எதிர்கால குறிக்கோள்கள்	செயலமர்வின் எதிர்பார்ப்புக்கள்
• சமூகத்திறகு சிறந்த சேவையை செய்தல் • சிறந்த நடுவராக செயலாற்றல் • மற்றவர்களுடன் அறிவைப் பகிர்ந்து கொள்ளல் • மற்றவர்களின் கௌரவத்தை பெறல் • அமைப்பை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லல். • அமைப்பின் அங்கத்துவத்தை அதிகரித்தல் • ஒரு சிறந்த மனைவியாக, தாயாக, மகளாக இருந்து வருதல் • ஒரு வெற்றிகரமான பெண்மணியாக சமூகத்தில் முன்னிலை வகித்தல் • சமாதானத்திற்கான அர்ப்பணித்துக் கொள்ளல் • அயலவர்களுடன் நட்புடன் வாழுதல் • போரில் தமது கணவர்களைப் பறிகொடுத்த பெண்களுக்கு உதவுதல் • கிராமத்தின் அபிவிருத்திக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் ஆதரவளித்தல் • ஓர் ஆரோக்கியமான வாழ்க்கையை நடத்துதல் • ஒரு வளர்ச்சியடைந்த நபராக வருவதற்கு செயற்படுதல் • சமூக வேலைகளுக்கூடாக சிறந்த பெறுபேறுகளைப் பெறல் • ஏனையவர்களின் நலனுக்காக உழைக்கும் ஆற்றல் வாய்ந்த ஒரு பெண்மணியாக உருவாகுதல் • சமாதானத்துக்கான கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்தல்	• அறிவை முழுமையாக பெறல் • நிறுவனத்தை அபிவிருத்தி செய்வதற்கு மற்றவர்களின் ஆதவைப் பெறுதல் • அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளல் • அனைத்துப் பணிகளிலும் நேரத்தை உச்ச மட்டத்தில் பயன்படுத்திக் கொள்ளல் • தனிப்பட்ட சக்தியைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்காக பெற்றிருக்கும் அறிவைப் பயன்படுத்துதல் • சமாதானம் மற்றும் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் என்பவற்றுக்குத் தேவையான அறிவைப் பெற்றுக் கொள்ளல் • தெரியாத விடயங்களை மற்றவர்களிடம் இருந்து கற்றுக் கொள்ளல் • நாளாந்தப் பங்கேற்பிற்கான அர்ப்பணிப்பு • சமாதானத்தை அர்த்தமுள்ளதாக்குவதற்கு ஒரு பெண் என்ற முறையில் என்ன செய்ய முடியும் என்பதனை கண்டறிதல் • கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளல் • புதிய ஆட்களைத் தெரிந்து கொள்வதும் புதிய இடங்களுக்குச் செல்வதன் மூலம் அனுபவங்களைத் திரட்டிக் கொள்ளலும் • ஏனைய மாவட்டங்களுடன் கூட்டாக இணைந்து செயற்படுதல்

காலி மாவட்டம்

காலி உடுகம லக் காந்தா விவசாய அமைப்பைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் பின்வரும் திறன்களையும், தேர்ச்சிகளையும் இனங்கண்டிருந்தினர்:

- விளையாட்டு திறமைகள்
- செவிமடுக்கும் திறமை
- மற்றவர்களைப் பாதுகாக்கும் திறமை
- சவால்களுக்கு முகம் கொடுத்தல்
- சிறு குழந்தைகளை கீழ்படிய வைத்துக்கொள்ளல்
- வீட்டுத்தோட்டம் / மலர் செய்கை / தீன்பண்டத் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அனைவரையும் மகிழ்ச்சியோடு வைத்துக்கொள்ள உள்ள திறமை
- எந்த ஒரு பொருளையும் சீக்கிரம் சந்தைப்படுத்தக் கூடிய திறமை
- குழுக்களுடன் வேலை செய்தல்
- பாட்டுப் பாடுதல்
- ஒரு கட்டமைப்பின் பிரகாரம் வேலை செய்தல்.
- நேரத்தில் கூடிய பயனை பெறுதல்
- பெண்களை ஊக்குவித்தல் மற்றும் ஒன்றுதிரட்டல்
- சேமிப்பு திறன்
- சமூக சேவை வேலைகளில் மற்றவர்களுக்கு அறிவை பெற்றுக் கொடுக்கும் ஆற்றல்
- அனைவரையும் விரைவில் ஒன்றுதிரட்டக் கூடிய திறமை• தலைமைத்துவம் வகித்தல்
- மற்றவர்களை புரிந்துகொள்ளும் திறமை
- பங்குபற்றும் திறமை
- சுய சக்தியில் முன்னேறிச் செல்லும் திறமை
- கொடுத்த வேலைகளை உச்ச மட்ட அர்ப்பணிப்புடன் செய்தல்
- செயற்திறன்

காலி தென்னிலங்கை நவோதயா பெண்கள் மன்றத்தின் பங்கேற்பாளர்கள் பின்வரும் ஆற்றல்களையும் திறன்களையும் இனங்கண்டிருந்தனர்:

பங்கேற்பாளர்களின் திறன்கள்

- எழுதும் திறன் மற்றும் ஞாபக சக்தி
  - பார்த்த மாத்திரத்தில் எதையும் செய்யும் திறன்
  - சவால்களுக்கு முகம் கொடுக்க உள்ள திறன்
  - குழுவாக இணைந்து செயல்பட உள்ள திறன்.
  - எதையும் கவரக்கூடிய திறன்.
  - நபர்களை கீழ்படியவைக்கவும் கட்டுப்படுத்தவும் உள்ள திறன்.
  - கொடுத்த பொறுப்புக்களை சிறப்பாக செய்யும் திறன்.
  - பேச்சுத்திறன்
  - ஆக்கபூர்வ சமரப்பணங்கள்
  - நேரத்திற்கு வேலைசெய்தல்.
  - **சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வேலை செய்தல்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு நிறுவனங்களையும் சேர்ந்த பங்கேற்பாளர்கள் பின்வரும் எதிர்காலக் குறிக்கோள்களையும், செயலமர்வின் எதிர்பார்ப்புக்களையும் இனங்கண்டிருந்தனர்:

எதிர்காலக் குறிக்கோள்கள்	செயலமர்வின் எதிர்பார்ப்புக்கள்
• பெற்றுக் கொள்ளும் அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளல். • பெற்றுக் கொண்டிருக்கும் தலைமைத்துவ அறிவை எதிர்கால நலனுக்காகப் பயன்படுத்துதல். • போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காக உழைத்தல். • ஒன்றாக இணைந்து செயற்படும் பெண்களுக்கு போரின் மோசமான தாக்கங்கள் குறித்த அறிவை வழங்குவதன் மூலம் சமாதானத்தை எடுத்து வருதல் • இச்செயலமர்விலிருந்து பெற்றுக் கொண்ட அறிவை சமாதானத்தை எடுத்து வருவதற்காகவும் பெண்களின் மேம்பாட்டுக்காகவும் பயன்படுத்துதல் • ஒரு சிறந்த சமூக சேவகியாக வருதல். • கிராம மட்ட அமைப்புக்களில் தலைமைத்துவத்தை ஏற்றல் • சமாதானம் நிலவும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக உச்ச மட்டப் பங்களிப்பை வழங்குதல் • போரில்லாத சமாதான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவது எப்படி என்பது குறித்து சமூகத்துக்கு அறிவூட்டுதல் • பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் • ஒருவர் தன்னை முழுமையாக அறிந்து கொள்வதன் மூலம் சமூகத்தை அறிந்து கொள்வதற்கு உதவுதல் சமாதானத்துக்காகச் செயற்படும் வாய்ப்பை தென்னிலங்கைப் பெண்களுக்கு வழங்குதல்	• சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காக பெண்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல் • அறிவைப் பெற்றுக் கொள்ளல் • பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுதல் • அறிவை விரிவாக்குதல் • சமூகத்துக்குப் பயனுள்ள ஒரு திட்டத்தில் பணியாற்றுதல் • பலம்வாய்ந்த பெண்கள் வலையமைப்பொன்றை உருவாக்குதல் • வாழ்க்கைக்குப் புதிய அனுபவங்களைச் சேர்த்தல் • போர் குறித்து அறிவூட்டுதல் • சமாதானத்தை எவ்வாறு உருவாக்க முடியும் என்பது குறித்த அறிவையும் புரிந்துணர்வையும் பெண்களுக்கு வழங்குதல், சமாதானத்துக்கான தேவையை மக்கள் உணரக் கூடிய ஒரு செயன்முறையை உருவாக்குதல் • தலைமைத்துவம் குறித்த புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ளல

மாத்தறை மாவட்டம் - ஹுணு சிசில சமூக சேவை அமைப்பு சமகி பெண்கள் அமைப்பு

பங்கேற்பாளர்களின் பொதுவான திறன்கள்

- தமிழ் மொழியைக் கற்பித்தல்
- தரை விரிப்புக்களைத் தயாரித்தல்
- கைப்பணிப் பொருட்களைத் தயாரித்தல்
- பேக்கரித் தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு நிறுவனங்களையும் சேர்ந்த பங்கேற்பாளர்கள் பின்வரும் எதிர்காலக் குறிக்கோள்களையும், செயலமர்வின் எதிர்பார்ப்புக்களையும் இனங்கண்டிருந்தனர்:

எதிர்காலக் குறிக்கோள்கள்	செயலமர்வின் எதிர்பார்ப்புக்கள்
• நிறுவனத்தை உயர் மட்டத்திற்கு எடுத்துச் செல்லல் • சட்டத்தை மதித்தல் • சமூகத்துக்குப் பயனுள்ள ஒரு பிரஜையாக உருவாகுதல் • ஒரு சிறந்த மேடைப் பேச்சாளராக உருவாகுதல் • கிராம மட்ட அமைப்புக்களில் தலைமைத்துவத்தை ஏற்றல் • சமாதானம் நிலவும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு முழுமையான ஆதரவை அளித்தல் • ஒன்றாக இணைந்து செயற்படும் பெண்களுக்கு போரின் மோசமான தாக்கங்கள் குறித்த அறிவை வழங்குவதன் மூலம் சமாதானத்தை எடுத்து வருதல் • இச்செயலமர்விலிருந்து பெற்றுக் கொண்ட அறிவை சமாதானத்தை எடுத்து வருவதற்காகவும் பெண்களின் மேம்பாட்டுக்காகவும் பயன்படுத்துதல் • தென்னிலங்கைப் பெண்களுக்கு சமாதானப் பணியாற்றுவதற்கான வாய்ப்பை வழங்குதல் • சமூகத்தில் துன்புற்றிருக்கும் பெண்களுக்கு உதவுதல் • பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு உதிரான துஷ்பிரயோகங்களைக் குறைத்தல் • பெண்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பாக அறிவூட்டுதல் • துன்பங்களை அனுபவித்து வரும் பெண்களை இனங்கண்டு அவர்களுடைய பிரச்சினைகளைக் கலந்துரையாடுல் • போரின் மோசமான விளைவுகள் குறித்து சமூகத்துக்கு அறிவூட்டுதல் • போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக ஒரு பெண் என்ற முறையில் ஆதரவளித்தல் • இன, மத, சாதி பேதமின்றி பணியாற்றுதல்	• அறிவை உச்ச மட்டத்தில் பெற்றுக் கொள்ளல் • அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளல் • தலைமைத்துவம் தொடர்பாக பெற்றிருக்கும் அறிவை எதிர்கால மேம்பாட்டுக்காகப் பயன்படுத்துதல் • போர் குறித்த ஒரு புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்ளல் • அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல் • அனைத்து அமைப்புக்களையும் சேர்ந்த பெண்களுக்கு அறிவூட்டுவதன் மூலம் சமாதானத்தை எடுத்து வருதல் • ஒரு சிறந்த தலைவிக்குரிய பண்புகளைத் தெரிந்து கொள்வதன் மூலம் சமூக சேவைக்கென தன்னை அர்ப்பணித்துக் கொள்ளல் • பிரச்சினைகளைத் தீர்க்கும் பொழுது நாங்கள் விட்ட தவறுகளை உணர்ந்து கொள்ளல், சுனாமி அனுபவங்களின் அடிப்படையில் இத்தவறுகள் மீண்டும் ஒரு முறை ஏற்படாதிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் • இச்செயற்திட்டத்தின் பல்வேறு நோக்கங்களுக்கும் ஏற்ற விதத்தில் வாழ்க்கை முறையை சீராக்கம் செய்து கொள்ளல் • பெற்றுக் கொண்டிருக்கும் அறிவின் மூலம் எனது முன்னேற்றத்துக்கும் மற்றவர்களுடைய முன்னேற்றத்துக்கும் ஏதேனும் ஒன்றைச் செய்தல் • நாடு முழுவதிலும் அனைவருக்கும் சமாதானத்துக்காக தேவைப்படுவது என்ன என்பதனை இனங்காணுதல் • இயற்கை அனர்த்தங்களின் போது மக்களின் குணவியல்புகளை இனங்காணுதல் • இச்செயலமர்வை இதுவரையில் நாங்கள் வழங்கியிருக்கும் சேவைகளுடன் பிணைத்தல் • செவிமடுத்தலின் மூலம் வாழ்வில் வெற்றியடைவதற்கு தேவையானவற்றைச் செய்தல் • இயற்கை அனர்த்தங்களின் போது மக்களின் குணவியல்புகளை இனங்காணுதல் • இச்செயலமர்வை இதுவரையில் நாங்கள் வழங்கியிருக்கும் சேவைகளுடன் பிணைத்தல் • செவிமடுத்தலின் மூலம் வாழ்வில் வெற்றியடைவதற்கு தேவையானவற்றைச் செய்தல் • சமூகத்தில் சமாதானம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை எடுத்து வருவதற்கு தேவையான அறிவைப் பெற்றுக் கொள்ளல் போர் மற்றும் சுனாமியால் • பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதனைக் கண்டறிதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்வு 2 : வெற்றிக்கான 4H (அனைத்து 3 மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது)

முக்கியமான கேள்விகள்

இந்த அமர்வில் தலை, கை, இதயம், ஆரோக்கியம் (4H கள் : Head, Hand, Heart, Health) ஆகியவற்றின் உபயோகம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. பின்வருவனவற்றையும் உள்ளிட்ட பல முக்கியமான கேள்விகள் கவனத்தில் எடுக்கப்பட்டன:

(மூளை, கண்கள் மற்றும் காதுகள், கைகள், கால்கள் போன்ற) புலன்களை நாங்கள் எந்த அளவுக்கு சிறப்பாகப் பயன்படுத்துகின்றோம்? எமது மனப்பாங்குகளை எந்த அளவுக்கு சாதகமானவையாக இருந்து வருகின்றன? பெண்கள் தமது அறிவின் ஆக்கபூர்வ திறன், தர்க்கரீதியிலான திறன் மற்றும் எண்ணக்கரு ரீதியிலான திறன் போன்றவற்றை தமது வெற்றிக்காக பயன்படுத்துகின்றனரா? காதால் கேட்பதை தவிர அதை கிரகித்துக் கொள்ள எந்த அளவு முயற்சி எடுக்கின்றோம்? கண்களால் பாரப்பதை தவிர அதை அவதானிக்க முயற்சிக்கின்றோமா? நாங்கள் எமது பேச்சு மூலம் எத்தனை பேரை கவர்கின்றோம்? எமது மனதில் உள்ள எண்ணக்கருக்கள் எமது வெற்றிக்கு எந்த அளவிற்கு ஏதுவாக அமைகின்றன? நாம் பெற்றுக்கொண்ட கல்வி எமது குடும்பத்தினுள் இருக்கும் மூட நம்பிக்கைகள், சமூகத்தில் இருக்கும் பெண்கள் பற்றிய கருத்து மற்றும் அளவுகோள்கள், சமூக நடைமுறைகள் பற்றி எமது மனதில் சில எண்ணக்கருக்களாக பதிந்துள்ளது.ஆனால் எமக்குத் தேவையான எண்ணக்கருக்களை உருவாக்கிக்கொள்ள நாம் எம் மனதிற்கு இடமளித்தோமா? எமது திறமைகளை மேம்பாடு செய்துக்கொள்ள நாம் எந்த அளவிற்கு முயற்சி எடுத்துள்ளோம்? எமது திறமைகளை மேம்பாடு செய்துக்கொள்ள நமக்கு எந்த அளவிற்கு வசதிகள் இருக்கின்றது? அதை சிறப்பாக பயன்படுத்துகின்றோமா? கிடைத்த சந்தர்ப்பங்களை தவறவிட்டோமா?

சுகாதார வசதிகளை நன்றாக பெற்றுக்கொள்ளக் கூடிய எமது நாட்டில் எமது கவனயீனத்தால் எந்த அளவிற்கு சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்துத்திக் கொள்கின்றோம்? இதனைப் பற்றிச் சிந்திப்பதற்கு பங்குபற்றுனர்களுக்கு வழிகாட்டப்பட்டது. தம்மை முன்னேற்றிக் கொள்வதற்குக் கிடைத்த எத்தனை சந்தர்ப்பங்களை தாம் இழந்திருக்கிறோம் என்பதனை சிந்தித்துப் பார்க்குமாறு அவர்களிடம் கேட்கப்பட்டது.

தனி நபர்கள் என்ற முறையில் தமது அபிவிருத்தியை கவனத்தில் எடுக்கும் பொழுது வெற்றி விகிதம் 50 சதவிகிதத்துக்கும் குறைவாக இருந்து வருகின்றது என்ற கருத்தை பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். பாடசாலையில் தமது ஆசிரியர் சொன்னவற்றை சரியாக செவிமடுத்துக் கேட்டிருந்தால் இன்று தாம் அதிகளவில் அறிவு பெற்றவர்களாக இருந்திருக்க முடியும் என அவர்கள் சொன்னார்கள். அவர்கள் தமது சொந்தக் குடும்பங்களையே உதாரணங்களாக எடுத்துக் காட்டினார்கள். போலி நம்பிக்கைகளும், தவறான மனப்பாங்குகளும் பெண்கள் என்ற முறையில் தமது முன்னேற்றத்துக்கு எவ்வாறு இடையூறு விளைவித்து வந்துள்ளன என்பதனை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இந்த அமர்வின் முடிவின் போது, இச்செயலமர்வு பாடசாலைப் பிள்ளைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர். அவர்கள் இங்கு தெரிவித்த முக்கியமாதொரு கருத்து மற்றவர்கள் கூறும் விடயங்களை கூர்ந்து செவிமடுப்பதற்கு தேவையான பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்வு 3 : தலைமைத்துவம் (அனைத்து 3 மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது)
அமர்வின் குறிக்கோள்கள்

சமூகத்தின் ஆக்கபூர்வமான, முன்னணி பெண் தலைவர்களாக உருவாகும் பொருட்டு தாம் தம்மை எவ்வாறு ஓர் அமைப்பில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதனை பங்கேற்பாளர்களுக்கு புரிய வைத்தல்.

செயற்பாடு: ஒரு பெண் என்ற முறையில் வெற்றிகரமான தலைவியாக செயற்படுவதற்குத் தேவையான பண்புகள் குறித்து ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டது. ஒவ்வொரு பங்கேற்பாளரும் ஒரு தலைமைத்துவப் பண்பைக் குறிப்பிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஒரு பண்பைக் கூறுபவருக்கு பத்துப் புள்ளிகள் வழங்கப்பட்டதுடன், அதனை மீண்டும் திருப்பிக் கூறினால் அதற்குப் பத்துப் புள்ளிகள் குறைக்கப்பட்டது. இது தொடர்பாக குழுக்களுக்கு மத்தியல் ஒரு கடுமையான போட்டி இடம்பெற்றது.

இச்செயற்பாட்டுக்கூடாக தலைவர்களாக உருவாகும் பொருட்டு தம்மிடமிருக்க வேண்டிய பண்புகள் மற்றும் திறன்கள் என்பன குறித்த அறிவை பங்கேற்பாளர்கள் பெற்றுக் கொண்டனர். SWOT பகுப்பாய்வுக்கு ஊடாக தலைவர்கள் என்ற நிலையில் தமது இன்றையை நிலையை அவர்கள் புரிந்து கொண்டனர். தாங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய சக்திகளையும், கைவிட வேண்டியிருக்கும் பலவீனங்களையும் அவர்கள் எடுத்து விளக்கினார்கள். மேலும், தாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும் வாய்ப்புக்களையும், வெற்றிகொள்ள வேண்டியிருக்கும் அச்சுறுத்தல்களையும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

SWOT பகுப்பாய்வு – காலி மாவட்டத்தைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் இனங்கண்டிருந்த பொதுவான நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன:

பலம்

- பல வருடங்களாக மக்கள் மத்தியில் வேலை செய்த அனுபவம் மற்றும் பெற்றுக் கொண்ட புகழ்.
- அனுபவத்துக்கு ஊடாகவும், பெற்றிருக்கும் கல்வி மூலமாகவும் பெற்றுக் கொண்ட அறிவு.
- குடும்பத்தில் கணவன், பிள்ளைகளிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பு
- சமூகப் பங்களிப்பை பெற்றுக்கொள்ளக் கூடிய ஆற்றல்.
- நம்பிக்கையை கட்டியெழுப்பும் திறமை.
- கட்டியெழுப்பியுள்ள பரஸ்பர தொடர்புகள்
- திட்டமிட்டு செயல்படும் திறமை
- பிரச்சினைகள் வரும் போது பொறுமையாகச் செயல்படல்
- குடும்ப பின்னணி காரணமாக மற்றவர்களிடையே உள்ள அங்கீகாரம்.

பலவீனங்கள்

- ஒவ்வொருவருடனும் செயல்படும் போது பொறுமையற்ற தன்மை
- மற்றவர்களின் கருத்துக்களை அவ்வளவாக மதியாமை
- தனது கருத்துக்களை மாத்திரம் நிறைவேற்றிக்கொள்ளவதில் ஆர்வம் காட்டுதல்.
- செயற்பாடுகளில் வெளிப்படையற்ற தன்மை
- நேரத்தை பற்றி கவனத்தில் கொள்ளாமை
- தன்னுடைய திறமைகளை உச்ச மட்டத்தில் பயன்படுத்தாமை
- தோல்வியை ஏற்றுக்கொள்ள முடியாத மனப்பாங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்கள்

- பல அமைப்புகளுடன் இணைந்து செயற்படுதல்
- மற்றவர்களின் திறமைகளை அறிந்து கொள்வதனால் அவர்களுடைய ஆதரவைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை
- எமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள சர்வதேச அமைப்புகளில் இருந்து கிடைக்கும் உதவிகள்

அச்சுறுத்தல்கள்

- ஒரே நோக்கத்துடன் செயல்படும் அமைப்புகள் பல ஒரே களத்தில் இருக்கின்றமை
- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் ஆபத்துக்களின் போது திட்டமிட்டபடி வேலைகளை முடிக்க முடியாமை
- காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் / ஒழுங்குவிதிகள்.

இந்த அமர்வின் இறுதியில் சமூக செயல்பாட்டாளர்கள் என்ற ரீதியில் தமது நிலைப்பாட்டை நன்றாகப் புரிந்து கொண்டதாக பங்குபற்றியவர்கள் கூறினர்.

தலைமைத்துவம் பற்றிய கலந்துரையாடல் இறுதியில் இவ் விளக்கத்தாள் வழங்கப்பட்டது.

விளக்கத்தாள்
தலைமைத்துவம் அறிமுகம்

- தலைவர்
- தலைமைத்துவ பாணிகள்
- தலைமைத்துவ பண்புகளும் குணாம்சங்களும்.
- தலைவராக மேம்பாடு செய்துகொள்ள வேண்டிய திறன்கள்

தலைவர்

- மற்றவர்களின் எண்ணங்களுக்கும் விருப்பங்களுக்கும் உயிர் கொடுப்பார்
- அவரினுள் உள்ள பண்புகளினால் நிலைத்து நிற்பார்.
- செய்த தவறு என்னவென்பதை விளக்குவார்
- ஒரு செயற்பாடை எப்படி செய்ய வேண்டும் என்பதை அவர் அறிவார்
- எடுக்க வேண்டியவரிடமிருந்து பயனை எடுப்பார்.
- அனைவரையும் மதிப்பார்.
- வேலை செய்யக் கூடிய சிறந்த சூழலை ஏற்படுத்துவார்.
- எண்ணக்கருக்களை முன்வைப்பார்.
- மற்றவர்களிடம் யோசனை கேட்பார்.
- பங்பளிப்பைப் பெற்றுக் கொள்வார்.
- இன்முகமாக குழுவை வழிநடத்துவார்.
- மற்றவர்களின் நலனுக்காக செயல்படுவார்.
- சவால்களை வெற்றிகரமாக முறயடிப்பார்.
- தலைவரின் வழிகாட்டலுடன் வெற்றிகரமாக நோக்கத்தை அடையலாம்.
- அளிக்கப்பட்ட கால எல்லைக்குள் எந்தப் பணியையும் நிறைவேற்றுவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவம் 3 பாணிகளைக் கொண்டுள்ளது

- சர்வாதிகார தலைமைத்துவம்
- ஜனநாயக தலைமைத்துவம்
- சோர்வான / செயலற்ற தலைமைத்துவம்

சர்வாதிகார தலைவர்

- தன் விருப்பத்தின்படி குழுவை நடத்துவார்.
- தன் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு மற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்வார்.
- குழுவின் ஏனையோரின் கருத்துகளுக்கு செவிமடுக்க மாட்டார்.
- மற்றவர்களின் திறமைகளை, தகுதிகளை, ஆக்கபூர்வமாக செயல்படுத்த உதவ மாட்டார்.
- தன்னுடைய ஆனைணய திடமாகச் செயல்படுத்துவார்.
- அவ்வாறு செயல்படும் போது மற்றவர்களுக்கு ஏற்படும் மனச் சங்கடங்களை ஒரு போதும் கவனத்தில் எடுக்கமாட்டார்.

ஜனநாயக தலைவர்

- வளங்களை நன்றாக இனங்கண்டு மற்றவர்களின் முக்கியமான கருத்துக்களைப் பெற்றுக் கொண்டு செயல்படுவார்.
- நிறைவேற்ற உள்ள வேலைகளுக்கான பொறுப்புகளை பகிர்ந்து கொள்வர்.
- தன்னுடைய கருத்துகளை நிறைவேற்றாமல் மற்றவர்களின் கருத்துக்களை கலந்துரையாடல் மூலம் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு முதலிடம் கொடுப்பார்.
- ஏனைய அங்கத்தவர்களின் ஆக்கபூர்வமான திறமைகளுக்கு மெருகூட்டி, செயற்படுவதற்கு இடமளிப்பர்.
- மற்றவர்களை கட்டுப்படுத்தாமல் சுதந்திரமாக செயல்பட வைப்பார்

செயலற்ற தலைவர்

- தன்னுடைய பொறுப்புகள் பற்றி அர்ப்பணிப்பு இல்லை.
- குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான எதிர்பார்ப்புக்களில்லை.
- தனது வேலையை மற்றவர்கள் செய்வார் என நினைப்பார்.
- சிறந்த முகாமைத்துவத்துடன் செயல்படமாட்டார்.
- தன்னுடைய போக்கில் செயல்படுவார்.
- எதையும் விளங்கிக்கொள்ள மாட்டார்.
- செவிமடுக்க மாட்டார்.
- முறையாக எதையும் செய்யமாட்டார்.
- தன்னுடைய தலைமைத்துவத்தை ஏற்பதற்கு எவராவது முன்வருவார் என நினைப்பார். நேரத்தால் முழுப் பயனை பெற மாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவத்தின் பண்புகள்	தலைமைத்துவத்தின் சிறப்பியல்புகள்
அறிவு	செயலூக்கம்
தீர்ப்பு	நல்ல எண்ணங்கள்
புத்தி	தாராள இயல்பு
ஞானம்	
நேர்மை	அர்ப்பணிப்பு
முழுமைதன்மை	உடனடியாக செயல்படும் தன்மை
உண்மை நிலை	பொறுமை / கருணை
சட்டத்தை மதித்தல்	திறமை
நிலையான தன்மை	பேச்சுத்திறன்
நியாயம்	எழுதும் திறன்
நேரடி இயல்பு	சலுகை செய்தல்
ஒழுக்கம்	நட்பு
உறுதி	பிணைப்பு
வளைந்துக்கொடுக்கும் தன்மை	விசுவாசம்
குறிக்கோள்	மக்கள் தொடர்புகள்
வழிநடத்துதல்	செவிமடுத்தல்
தன்நம்பிக்கை	அமைப்புத் திறன்
சுயாதீனமாக தீமானம் எடுத்தல்.	ஆரம்பிக்கும் திறன்
திட்டமிடல்	ஆக்கபூர்தன்மை
மதிப்பீடு	பாராட்டுதல்
பொறுமை	கால எல்லைக்குல் வேலை செய்தல்
	சவால்களுக்கு முகம் கொடுத்தல்

தலைவர்கள் என்ற ரீதியில் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டிய திறன்கள்

- மற்றவர்களை மதிக்கும் திறமை
- மற்றவர்களுக்கு செவிமடுக்கும் திறமை
- மற்றவர்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்ளும் திறமை
- மற்றவர்களை ஒற்றுமையாக வைத்திருக்கும் திறமை
- மற்றவர்களின் பொறுப்புகளை ஏற்கும் திறமை
- திடசங்கற்பத்துடன் மற்றவர்களை வழிநடத்தும் திறமை
- தீர்மானம் எடுக்கும் திறமை
- எதையும் செய்யும் திறமை
- தனக்குத் தெரிந்த விடயங்களை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்கும் திறமை
- நபர்கள் மற்றும் நிறுவனங்களுடன் வெற்றிகரமாகவும் சுமுகமாகவும் இணைந்து செயல்படும் திறமை
- வளங்களைப் பகிர்ந்து கொள்ளும் திறமை
- வளங்களை இனம்காணும் திறமை
- வளங்களை முறையாகப் பயன்படுத்தும் திறமை

அதிகாரமும் தலைமைத்துவமும்

- முறையான அதிகாரம் - வகிக்கும் பதவியின் பிரகாரம்
- பயன்களை வழங்கும் அதிகாரம் - பின்பற்றுவோருக்கு பயன் வழங்கும் ஆற்றல்
- கட்டுப்படுத்தும் அதிகாரம் - பின்பற்றாதோருக்கு தண்டனை வழங்கும் ஆற்றல்
- புகழ் அதிகாரம் - பின்பற்றுபவர்களைக் கொண்டிருப்பதுடன் அவர்களை மேம்படுத்தல்
- நிபுணத்துவ அதிகாரம் - தனது விசேட அறிவினால் மற்றவர்களை மாற்றத்திற்கு உட்படுத்தக் கூடிய தகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீட்டின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்

- பங்கேற்பாளர்கள் பல புதிய விடயங்களைத் தெரிந்து கொண்டனர்.
- புதிய முறைமைகஜளு மிக சந்தோஷமாகவும், தெளிவாகவும் புரிந்து கொண்டனர்.
- களத்தினுள் செயல்படுத்த முடிகின்றவைகளை நடைமுறையில் கற்க கிடைத்த சந்தர்ப்பம் மிக முக்கியமானது.
- கிடைத்த சந்தர்ப்பங்களை பிரயோசனப்படுத்திக் கொள்ளாமையினால் மிகவும் பின்தங்கி இருப்பதைப் புரிந்து கொள்ளல்.
- சாதகமான சிந்தனைகள்.
- தமது திறமைகள் மற்றும் தகுதிகள் என்பவற்றைப் பயன்படுத்தாமையினால் தங்கி வாழும் மனநிலையில் இருப்பதைப் புரிந்து கொண்டமை.
-

அமர்வு 4: முனைப்பான மற்றும் முனைப்பற்ற செவிமடுத்தல் செயலமர்வின் நோக்கங்கள்

- முனைப்பற்ற செவிமடுத்தல் காரணமாக வீட்டில் எவ்வாறு பிரச்சினைகள் தோன்றுகின்றன என்பதனை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல்.
- மற்றவர்களின் பிரச்சினைகளுக்கு முனைப்பான விதத்தில் செவிமடுக்காதிருந்ததன் காரணத்தினாலேயே நாட்டில் பிரச்சினைகள் இந்த அளவுக்குத் தீவிரமடைந்துள்ளன என்பதனை பங்கேற்பாளர்கள் உணர்ந்து கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல்.
-
- பெண்கள் என்ற முறையில் முனைப்பான செவிமடுத்தல் மூலமும், ஒவ்வொருவருடைய தேவைகளை சரிவரப் புரிந்து கொள்வதன் மூலமும் சமாதானத்துக்கு பாரிய அளவில் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதனைப் புரிந்து கொள்ளல்.
-

முனைப்பான மற்றும் முனைப்பற்ற செவிமடுத்தல்

படிமுறை 1: சுனாமிக்குப் பிற்பட்ட நிலைமையை மதிப்பிடுமாறு பங்கேற்பாளர்கள் கேட்கப்படட்னர்

மன அழுத்த நிலையை நிவர்த்தி செய்வதற்கான முதலாவது படிமுறை:

- நட்புறவு
- சிறந்த வரவேற்பு
- நம்பிக்கையை வளர்த்தல்
- முனைப்பான விதத்தில் செவிமடுத்தல்
- உணர்பூர்வமான எதிர்வினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 2 : செவிமடுத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பொருட்டு ஒரு சிறிய வாய் மற்றும் பெரிய காது என்பவற்றைக் கொண்ட ஒரு படம் காட்டப்பட்டது



படிமுறை 3 : மன அழுத்த நிலையிலிருந்த ஒரு யுவதியின் சம்பவக் கற்கையைப் பயன்படுத்தி முனைப்பாக செவிமடுத்தல்.

என்ன செய்ய வேண்டும்?

துயருற்றிருக்கும் யுவதியை அணுகி, அவளுக்கு ஆறுதலளித்து, படிப்படியாக அவளுடைய நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

படிமுறைகள்

- அவளுக்கு இருக்கை ஒன்றை வழங்குங்கள்.
- அவளுக்கு பக்கத்திலேயே அமருங்கள்.
- அவளது துக்கத்தைச் சொல்ல இடமளியுங்கள்.
- அவளின் இரு கண்களோடு உங்கள் இரு கண்களையும் தொடர்பில் வைத்துக் கொள்ளுங்கள்.
- அவள் கதைக்கும் போது தடுக்காதீர்கள்.
- அவளின் குடும்பத்தில் ஒருவரின் மரணம் சம்பந்தமாக திரும்ப திரும்ப கூறுகின்றாள் என்றால் அவளுக்கு இடமளியுங்கள்.
- நீங்கள் அக்கறையுடன் செவிமடுங்கள்.
- அவளுடைய வேதனைகள் நீங்களும் உணருவதாக வெளிக்காட்டி செவிமடுங்கள்.
- அவள் தனிமைப்படவில்லை என உணர்த்துங்கள்.

உணர்வுபூர்வமான எதிர்வினை

- அவள் கூறுவதற்கு குறுகிய மறுமொழி மட்டும் அளியுங்கள்.
- தனது கதையைக் கூறுவதற்கு அவளை ஊக்குவியுங்கள்.
- அவளை நம்புவதாக உணர்த்துங்கள்.
- நீண்ட விளக்கம் மற்றும் புத்திமதி என்பவற்றை வளங்காதீர்கள்.
- தலையை ஆட்டி அவளின் சொற்களை ஆமோதியுங்கள்.
- சுருக்கமான சாதகமான விதத்தில் மறுமொழி கொடுத்து அவளின் தன்னம்பிக்கையை வளர்க்க உதவுங்கள்.
- அவள் முன்னிலையில் குறிப்புக்களை எடுக்காதீர்கள்.
- சமூக உளவியல் நலனோம்பல் தொடர்பான உங்கள் திறன்களைப் பயன்படுத்தி, முனைப்பான விதத்தில் செவிமடுத்து, உணர்வுபூர்வமான பதில்களை அளியுங்கள்.
- ஆனால், அவர்கள் மிகக் கடுமையான விதத்தில் மன அழுத்தத்துக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்களுக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தால் அவர்களை மனநல ஆலோசனைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு நபர் மிகக் கடுமையான மன விரக்கி நிலையில் இருந்தால் அவரை ஓர் உளவியல் மருத்துவரிடம் அனுப்பி வைக்க வேண்டும்.

வசதி வழங்குனராக :**Facilitator**– எப்போதும்

- நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும்.
- பரிவுணர்ச்சியுடன் (with empathy) பிரச்சினையை முன்வைக்க இடமளிக்க வேண்டும்.
- சம்பந்தப்பட்ட நபர் தனிமைப்பட்டிருக்கவில்லை என்பதை உணர்த்த வேண்டும்.
- அவளுக்கு உதவ விரும்புவதாகக் கூற வேண்டும்.

செய்யக் கூடாதவை

- கருத்தை வெளியிடும்போது குறுக்கிடுதல்.
- பொறுமை இழந்த நிலையைக் காட்ட வேண்டாம்.
- நேரம் செல்லுகையில் கோபத்துடன் இருப்பதை தவிர்க்கவும்.

செவிமடுக்காததால் ஏற்படும் மோசமான விளைவுகள் மற்றும் செவிமடுப்பதால் ஏற்படும் நல்ல விளைவுகள் என்பன ஒரு குடும்பப் பிரச்சினையை முன்வைத்து கலந்துரையாடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஒவ்வொருவரின் அனுபவங்களையும் நல்ல விதமாக பரிமாறிக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன், அமைதியாக இருக்கும் நபர்களைப் பற்றிய தகவல் கண்காணிப்பு செய்யப்பட்டது.

முனைப்பான செவிமடுத்தல் சம்பந்தமான பாத்திர நடிப்பை வளப் பகிர்வாளர்கள் மேற்கொண்டனர். அதில் உள்ள நல்ல விடயங்களை பகுப்பாய்வு செய்வதற்கு பங்குபற்றுனர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதுடன், கீழ்காணும் விடயங்களை குறிப்பிடப்பட்டுள்ளன:

- முனைப்பான செவிமடுத்தல் இல்லாததால் தேவையற்ற பிரச்சினைகள் தோன்றுகின்றன. அதாவது குடும்பங்களில் சந்தேகங்கள் உருவாகுதல்.
- குழந்தைகள் கூறுவதை செவிமடுக்காததால் அவர்கள் வழிதவறி செல்லாம்; மற்றும் தாய் மேல் நம்பிக்கை அற்றுப்போகலாம்.
- தனக்கு வழங்கப்படும் பணியை முழுமையாக நிறைவேற்ற முடியாது போதல்.
- நன்றாக விளங்கிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காமை.
- தற்பொழுது நாட்டில் நிலவி வரும் பகைமை நிலை செவிமடுக்காததால் ஏற்பட்டதாகும்.
- ஒவ்வொருவரின் செவிமடுத்தல் மூலம் கௌரவம், நம்பிக்கை மற்றும் தொடர்புகளை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமூகங்களின் பிரச்சினைகளுக்கு செவிமடுக்காமையினால் அப்பிரச்சினைகள் தீவிரமடைந்து நாடு இப்பொழுது ஒரு போரை சந்தித்து வருகின்றது.
- நாட்டில் பல்வேறுபட்ட தேவைகள் நிலவி வருவதனையும், அவை பல்வேறு விதங்களில் நிறைவேற்றி வைக்கப்பட வேண்டும் என்பதனையும் பெண்கள் புரிந்து கொள்வதன் மூலம் அவர்கள் வீட்டிலும், சமூகத்திலும், நாட்டிலும் ஏற்படக் கூடிய மோதல் நிலைமைகளைத் தீர்த்து வைக்க முடியும்.

படிமுறை 4 : முனைப்பான செவிமடுத்தல் மற்றும் முனைப்பற்ற செவிமடுத்தல் என்பன தொடர்பான பாத்திர நடிப்புக்களை பங்கேற்பாளர்கள் மேற்கொண்டனர்

பாத்திரமேற்று நடித்தல் 1 : முனைப்பான செவிமடுத்தல்

துயருற்றிருக்கும் பெண் சமூகத் தலைவியை சந்திக்க வருகிறார். சமூகத் தலைவி அப்பெண்ணை பரிவுடன் நோக்கி, மெல்லிய புன்முருவலுடன் வரவேற்கிறார். அவருக்கு ஓர் ஆசனத்தை வழங்கி தானும் அருகில் அமர்ந்து கொள்கிறார். அவர் அப்பெண் தொடர்பாக கருணை காட்டுவதுடன், அவர் கூறுவதை செவிமடுப்பதற்கும் தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறார். அழுகைக்கும், புலம்பல்களுக்குமிடையில் அப்பெண்மணி தனது கதையை கூறிச் செல்கிறார். சமூகத் தலைவி அப்பெண்ணுக்கு அழுவதற்கு இடமளிப்பதுடன், அவருடைய மனக் குறைகளை பொறுமையுடன் செவிமடுக்கிறார். அவருடைய துக்கத்தை ஆற்றும் விதத்தில் பேசுவதுடன், எந்தவொரு நேரத்திலும் தன்னை வந்து சந்திக்க முடியும் என்றும் கூறுகிறார். அப்பெண்மணி மன நிறைவுடன் திரும்பிச் செல்கிறார்.

பாத்திரமேற்று நடித்தல் 2: முனைப்பற்ற செவிமடுத்தல்

துயரத்துக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு பெண்மணி சமூகத் தலைவியை சந்திக்க வருகிறார். அவள் வருவதை பார்த்துக்கொண்டே தான் வாசித்துக் கொண்டிருக்கும் பத்திரிகையை நிறுத்தாமல் வாசிக்கிறாள். மூக்குக்கண்ணாடிக்கு மேலே பார்த்து தலையால் இருக்கையை காட்டுவார். நேரத்தைப் பார்ப்பார். கடிதக் கோவையை இழுப்பார். தொலைபேசியில் கதைப்பார். சத்தமாக சிரிப்பார். தோலைபேசியை கீழே வைத்துவிட்டு தனக்குள்ளே ஏதோ கதைத்துக் கொள்கிறார்.

பாதிக்கப்பட்ட பெண் தனது கதையை கூறிக்கொண்டே செல்கிறாள். அவள் கதையை கொஞ்சம் நிறுத்திவிட்டு சமூகத் தலைவியை பார்ப்பாள். சமூகத் தலைவி நெற்றியை சுருக்கி தூக்கத்தைக் காட்டுவாள். கொட்டாவி விட்டு கைகளை பின்னால் உயர்த்தி, அவளுக்கு அந்த இடத்தில் இருந்தது போதும் என்று காட்டுவாள். தீர்வு காண வந்தவளுக்கு அதற்கு பதிலாக அங்கிருந்து விலகிச் செல்வது மேல் எனத் தோன்றும். எனது துக்கம் உனக்குப் புரியாது என்று அவள் நினைத்துக்கொண்டு அங்கிருந்து விலகிச் செல்வாள்.

முனைப்பான செவிமடுத்தல் (சம்பவக் கற்கை)

சுனாமி நாளன்று உறவினரொருவரின் வீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்குச் சென்ற தாய், தந்தை, மகள் மூவரும் மாத்தறை பஸ் நிலையத்தில் சுனாமிக்கு அகப்பட்டனர்.

சுனாமி நாளன்று 9 மணியளவில் பஸ் நிலையத்திற்கு வந்த இவர்கள் பஸ்ஸின் வருகைக்காக அங்கு காத்திருந்தனர். நினைக்காத வகையில் வந்த பேரலை இந்த மூவரையும் படுகாயப்படுத்தி விட்டுப் போனது. சுனாமி செய்தியை கேள்விப்பட்ட கிராம மக்கள் நகருக்கு வந்து சாதி, குலம், உயர்வு, தாழ்வு பேதமின்றி காயப்பட்டவர்கள் அனைவரையும் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். தாயின் நிலமை கவலைக்கிடமானதால் அவளின் பெயரை பதிவுசெய்து கொண்டு, கொழும்பு பெரிய வைத்தியசாலைக்கு அனுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதத்திற்கு பின்பு தந்தையும், மகளும் குணமாகி வைத்தியசாலையின் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் சந்தித்தனர். அதன்பிறகு வைத்தியர்களின் உதவியால் தாய் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இருப்பதாக அறிந்தனர். மூன்று மாதமும் 4 நாட்களாக உறவுக்காரர் வீட்டில் தங்கியிருந்துவிட்டு, தாய் குணமாகியதுடன் வீடு வந்தனர். அங்கே வீடு இல்லை.

அவளும் கணவரும் கிராம சேவகரை சந்தித்தனர். பிரதேச செயலாளரை சந்தித்தனர். அங்கேயும் அவர்களுக்கு பொலிஸ் அறிக்கை இல்லாததால் வீடு கொடுக்கவில்லை. அந்த ஊரில் உள்ள அரச சார்பற்ற அமைப்பின் அதிகாரி பெண் ஆகையால் அவரை சந்திக்க தீர்மானித்தனர். மறுநாள் அந்த காரியாலயத்திற்குச் சென்றாள். அந்த அமைப்பின் அதிகாரி பயணம் செல்வதற்கு வெளியே முற்றத்தில் இருந்தார். ஆனாலும் இந்தப் பெண்ணின் வருகையால் அவர் அன்புடன் வரவேற்று காரியாலயத்திற்கு சென்று அந்த அதிகாரியோடு அருகில் அமர்ந்து கொள்ள சந்தர்ப்பம் கொடுத்தார். அவரின் முழுக் கதையையும் தடையில்லாமல் கேட்டார். அதோடு அவளின் இரு கண்ணையும் பார்த்துக்கொண்டே கதைக்க இடமளித்தார். அதன்பிறகு அவள் கையிலிருந்த கடிதக் கோவைகள் (மருத்துவச் சான்றிதழ்) கையில் எடுத்த அவர் இந்த கடிதங்கள் நன்றாகவே போதும் என்று அவளுக்கு எதிர்பார்ப்பை கொடுத்தார். நாங்கள் இருவரும் கிராம சேவகரை சந்திக்க செல்வோமா? என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார்

அவள் தனிமைப்படுத்தப்படவில்லை என்று புரிய வைப்பதற்காகவே இருவரும் இணைந்து கிராம சேவகரை சந்தித்தனர். 3 மாதங்களுக்குப் பின் புகாரை எழுத முடியாது என கிராம சேவகர் கூறினார். சட்டம் தனக்கும் தெரியுமென்றும், 3 மாதமும் 4 நாட்களுக்கு பிறகு வைத்தியசாலையில் பாரிய சத்திர சிகிச்சையின் பின் வீடு வந்த இவர்களுக்கு வீடு இல்லை. தகுந்த சாட்சிகள் இருப்பதால் ஏற்றுக்கொள்ளுமாறு கெஞ்சினாள். அவர் அந்தக் காரணத்தை பொலிஸில் சொல்லிய பின்பு பொலிஸில் கிடைத்த அறிவுறுத்தலின்படி வாக்காளர் பட்டியலில் வீட்டு முகவரி இருந்தால் அல்லது வீட்டின் எஞ்சிய பகுதிகள் மூலம் உண்மை தெளிவாக இருப்பதால் இந்த கடிதத்தை பிரதேச செயலாளருக்கு கொடுக்கச் சொன்னார்.

அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர் அவளுடன் பிரதேச செயலாளரைச் சந்திக்கச் சென்று சகல விபரங்களையும் முன்வைத்தார். 3 மாதம் சென்றபடியால் இது தொடர்பாக அரசிற்கு எதுவும் செய்ய முடியாது என்று அவர் சொன்னார். ஆனால் கரிடாஸ் நிறுவனம் இப்போது வீடு இல்லாதோருக்கு வீடு கொடுப்பதாகவும் சொன்னார். அவர்கள் இருவரும் அந்த நிறுவன அதிகாரியை சந்திக்கச் சென்றனர்.

இந்த வைத்திய அறிக்கையுடன் ஏனைய கடிதங்களையும் பார்வையிட்ட நிறுவனத் தலைவர் அவர்கள் மேல் இரக்கப்பட்டு, நடந்திருக்கும் அநீதியை கருத்திற் கொண்டு 450,000 பெறுமதியுள்ள வீடொன்றை கட்டிக் கொடுக்கத் தீர்மானித்தார். அவரின் வீட்டிற்கு நிறுவனத்திலிருந்து சமையலறை உபகரணங்களும் தளபாடங்களும் கிடைத்தன. தற்போது அவள் உட்பட அனைவரும் சந்தோசமாக வாழகின்றனர்.

1. அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர் செவிமடுத்ததும், ஏனைய உத்தியோகத்தர்களைச் சந்தித்து அனுமதி பெறும் வரை அவளுடன் இருந்ததும் மிக முக்கியமான விடயமாகும்.

2. முதலில் கிராம அதிகாரி மறுத்தாலும் பின்பு அரச சார்பற்ற அமைப்பின் உத்தியோகத்தருடன் சென்ற போது அவளுக்கு செவிமடுத்தமை.

3. பொலிஸில் புகாரை எழுதிய பின் அதை பிரதேச செயலாளரிடம் முன்வைத்தமை

4. அரசால் அவளுக்கு உதவ முடியாவிட்டாலும் பிரதேச செயலாளர் அவரை அரச சார்பற்ற நிறுவனத்திடம் அனுப்பியமை

5. சம்பந்தப்பட்ட அமைப்பின் தலைவர் அவளின் துக்கத்தைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் அரச சார்பற்ற அமைப்பின் அதிகாரியின் கோரிக்கைகளை நிறைவேற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் அனைத்து விடயங்களையும் கவனித்ததில் முனைப்பான செவிமடுத்தலினால் கிடைத்த நல்ல பிரதிபலன்கள் நன்றாக விளங்குகிறது.

முனைப்பற்ற செவிமடுத்தல் (சம்பவக் கற்கை)

14 வயதுடைய ஒரு இளம் பெண் பிள்ளை கற்பழிக்கப்பட்டு அதை புகார் செய்த போது ஏற்பட்ட கவனக் குறைவினால் சட்டத்தின் உதவியை பெற முடியாமல் போன ஒரு சம்பவமாகும். 14 வயதில் பூப்பெய்திய இந்த யுவதியின் பெற்றோர் கூலி வேலை செய்து வாழ்கின்றனர். அவளுக்கு 10 வயதுடைய ஒரு தம்பியும் உண்டு. காலையில் பாடசாலை செல்லும் இவ் இருவரும் மாலை 2 மணிக்கு வீடு திரும்புவார்கள். பெற்றோர் மாலை 5.30க்கு வரும்வரை வீட்டில் இருவரும் தனிமையில் இருப்பார்கள். அவளுடைய தம்பி சிறுவன் என்றபடியால் அயல் வீடுகளுக்கு விளையாட சென்று விடுவான். பக்கத்து வீட்டில் வசிக்கும் 27 வயதுடைய தொழில் புரியும் ஒரு இளைஞன் வார இறுதியில் அங்கு வருவதுடன், இந்த வீட்டுப் பக்கம் செல்வதுண்டு. பெற்றோர் வீட்டில் இல்லையென்பதை அவன் அறிவான். மகள் தாயிடம் பல முறை அவன் வீட்டுக்கு வருவதால் பாடசாலை வேலைகளை செய்ய முடியவில்லை என முறையிட்டாலும் தாய் அதை பொருட்படுத்தவில்லை. அவனின் நடவடிக்கைள் அவ்வளவாக சரியில்லை எனவும் தன் தாயிடம் கூறியுள்ளர். ஆனாலும், தாய் அதை கருத்தில் கொள்ளவில்லை.

ஒரு நாள் தாய், தந்தை, தம்பி இல்லாத சந்தர்ப்பத்தில் வீட்டுக்கு வந்த அவனுக்கு இடியுடன் கூடிய மழையும் பெரும் உதவியாக இருந்தது. அவளின் அலறல் சத்தம் யாருக்கும் கேட்கவில்லை. அவன் அந்தப் பெண் பிள்ளையை கற்பழித்து விட்டுச் சென்று விட்டான். தாய் வீட்டுக்கு வரும் போது அனைத்தும் நடந்து முடிந்து விட்டது. இதைப் பற்றி பெற்றோர் பொலிஸிடம் முறையிடச் சென்றபோது, கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரி அவசர வேலையாக வெளியில் செல்வதால் நாளை வரும்படி சொல்லி விட்டார். அடுத்த நாள் அந்த பெண் பிள்ளை குளித்து உடைகளையும் கழுவி விட்டு பொலிஸிடம் சென்றது அறியாமையினாலேயே. அன்று புகார் எழுதும் சந்தர்ப்பத்தில் எந்த ஒரு சாட்சியும் அவளிடம் இருக்கவில்லை. அதோடு அன்று மாலையே கற்பழித்தவன் அந்த வீட்டாரிடமும் சொல்லாமல் சென்று விட்டான்.

1. அந்த நபரை பற்றி மகள் ஆரம்பத்திலேயே தாயிடம் கூறும் போது கவனமாக செவிமடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

2. அவள் பொலிஸிடம் கூறும் போது சாட்சிகளுடன் அவளின் புகாரை ஏற்றிருந்தால் இந்த வழக்குத் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுத்திருக்கலாம். உடையை கழுவி சுத்தம் செய்ததையிட்டு அவர்களை பொலிஸ் அதிகாரி ஏசுவது தப்பாகும். இதற்குக் காரணம் அவர்களின் அறியாமையே.
3. அவள் புகார் செய்த தினமே புகாரை எடுத்து அந்த நபரை தடியிருந்தால் அவனை கண்டு பிடித்திருக்கலாம். அவன் தப்பி விட்டான்.
4. இந்த அனைத்து காரணங்களாலும், இவர்களின் அறியாமையினாலும் வறுமையினாலும் இவர்கள் மீண்டும் பொலிஸிடம் செல்லவில்லை. பிள்ளையின் பாடசாலை பயணம் நிறுத்தப்பட்டதுடன் இன்னுமோர் பெண் இந்த நிலையில் சமூகத்திற்கு மிச்சமானது மட்டுமே நடைபெற்றது.

அமர்வுகள் குறித்த பங்கேற்பாளர்களின் கணிப்பீட்டின் சாராம்சம்

- மிகச் சிறந்த முகாமைத்துவத்துடன் விடயங்களை முன்வைத்தலும் பகுப்பாய்வு செய்தலும்.

- தலைப்பிற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற செயற்பாடுகளை செய்வதால் இலகுவாக ஞாபகத்தில் வைக்க முடிந்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 4H எண்ணக்கருவின் பயன்பாடுகளை இனங்காண வழிவகுத்தல்

- சரளமாகவும் இலகுவாகவும் செயலமர்வு நடைமுறைப்படுத்தப்பட்டமை.

- உதாரணங்கள் மூலம் விடயங்களை தெளிவுபடுத்தியமை.

- குழுச் செயற்பாட்டின் மூலம் ஒற்றுமையை வளர்த்துக் கொள்ளலும், போட்டி நிலையை ஏற்படுத்தியதன் மூலம் வேலைத்திட்டத்தை சிறப்பாக மேற்கொள்ள வாய்ப்புக் கிடைத்தமையும்.

- சமூகத் தலைவியாக செயற்படும் போது செய்யக்கூடியவை, கூடாதவை பற்றி சிந்திக்க இடம் வழங்கியமை.

- எமது திறமைகளை பாத்திரமேற்று நடித்தல் மூலம் வெளிக்காட்ட இடமளித்தமை.

- மிகக் குறுகிய காலத்திற்குள் குழுச் சமர்ப்பணங்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கியமை.

- முனைப்பான, முனைப்பற்ற செவிமடுத்தல் பற்றி பிரத்தியேக செயற்பாடுகள் செய்ததால் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள இலகுவாக இருந்தமை.

குறிப்பாக பின்வரும் விடயங்கள் தொடர்பாக தாம் அறிவைப் பெற்றுக் கொண்டதாக பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர்:

- அனர்த்தங்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களில் மனிதர்களின் உணர்ச்சிகள் எவ்வளவு உணர்பூர்வமானது என்பதை.

- எங்களிடம் உள்ள திறமைகளை சிறிதேனும் எங்கள் வெற்றிக்காக பயன்படுத்திக் கொள்ள இன்னும் காலம் கடந்துவிடவில்லை என்பதை.

- முனைப்பற்ற செவிமடுத்தல் காரணமாக வீட்டில் மற்றும் அயலவர்களுடன் மனச் சஞ்சலங்கள் ஏற்பட்டதென்பதை

- தெளிவான தொடர்பாடலினால் நிறுவனத்தின் வேலைகளை எவ்வளவு இலகுவாகவும், வெற்றிகரமாகவும் செயல்படுத்த முடியும் என்பதை

- மற்றவர்களுடன் வேலை செய்யும்போது ஒவ்வொருவரின் கருத்துக்களையும் செவிமடுத்தல், மதித்தல் போன்றவை முக்கியமானதுடன், அதனூடாக தற்போது செய்யும் வேலைகளுக்கு அந்த அனுபவத்தை நடைமுறைப்படுத்தல்.

- சமாதானத்தை சாதித்துக் கொள்வதற்கு, செவிமடுத்தல், பொறுமை, சரியான தீர்வு காணல் என்பவற்றின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்திக் கொண்டமை.

- தேவையான சந்தர்ப்பத்தில் சரியான தீர்வை காணாததால் உருவாகும் சமூக பிரச்சினையை இனங்காணல்.

- குறுகிய நேரத்தில் செய்து காட்டிய பாத்திரமேற்று நடித்தல் மூலம் எமது திறமைகளை வெளிக்காட்டியதுடன், திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் வழிநடத்தும் திறமையை பெற்றுக் கொள்ள முடிந்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சரியான திட்டமிடல் மற்றும் வழிநடத்தல் மூலம் பெற்றுக்கொள்ள முடிந்த வெற்றிகள்.

3. **மோதல் தொடர்பான கண்ணோட்டங்கள் மற்றும் அறிவு - இரண்டு நாள் செயலமர்வுகள்**

கீழ்க்காணும் தினங்களில் மாத்தறை, காலி, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களில் மோதல் தீர்வு செயலமர்வு நடத்தப்பட்டது:

மாத்தறை மாவட்டம் ---- 2008 ஆகஸ்ட் 29, 30 அஹங்கம

காலி மாவட்டம் ---- 2008 ஆகஸ்ட் 31, செப் 01 ஹிக்கடுவ

களுத்துறை மாவட்டம் ---- 2008 செப் 06, 07 களுத்துறை

வளப் பகிர்வாளர் --- நவாஸ் முஹமட்
வசதிப்படுத்துபவர்கள் திலகா வீரகோன்
சந்திரா கமகே
} மாத்தறை, காலி மாவட்டங்கள்

வளப் பகிர்வாளர் மோனிகா எல்பிரட்
வசதிப்படுத்துபவர்கள் திலகா வீரகோன்
சந்திரா கமகே
} களுத்துறை மாவட்டம்

மோதல் பகுப்பாய்வு

செயலமர்வின் நோக்கங்கள்

- மோதல் தீர்வு பற்றி இருக்கும் எண்ணக்கரு மற்றும் செயல்முறையை பங்குபற்றும் குழுவினரின் அனுபவங்களுடனும் கருத்துகளோடும் ஒப்பிட்டு, அதனைப் பயனுள்ளதாக செயற்படுத்தக்கூடிய செயல்முறையைகளை உருவாக்கிக் கொள்ளல்.

- இவர்களின் அனுபவங்களுடன் மற்ற பெண்களுக்கு அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில் நடைமுறை ஆதரவை வழங்குதல்.

இரண்டு நாட்களின் உள்ளடக்கம்

- மோதலின் கட்டங்கள்
- மோதலின் பகுப்பாய்வு
- மோதலைப் புரிந்து கொள்ளல்
- மோதல் தீர்வு
  - தேசிய மட்டத்திலான எமது பாத்திரம்

எதிர்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்வு 1 : மோதலை வாழ்க்கை அனுபவங்களுடன் இணைத்தல்

இத்தலைப்பு பங்கேற்பாளர்களுக்கு பின்வரும் விதத்தில் விளக்கப்பட்டது: நாம் பிறந்த நாளில் இருந்து இன்று வரை பல்வேறு மோதல் நிலைகளைச் சந்தித்துள்ளோம். அவற்றுக்கு முகம்கொடுத்தது மட்டுமன்றி தீர்வும் கண்டுள்ளோம். குடும்பங்களில் ஏற்படும் மோதல்களை முரண்பாடுகளை தாயாக, மனைவியாக தீர்வு கண்ட சந்தர்ப்பங்கள் உண்டு. வாழ்க்கையில் ஒவ்வொரு கணத்திலும் மோதல்கள் உருவாகும். இது உலக நியதி.

வாழ்க்கையை ஒரு கேடயமாக காணுங்கள்.





1,2.3. சொல்லி / கிழே விடுங்கள்.

இது நமது வாழ்க்கையை பார்க்ககூடிய ஒரு விதமாகும்

1.	மீண்டும் ஞாபகப்படுத்திக்கொள்ளல் - தேங்கியிருந்த		காலங்காலமாக மனதில் ஒரு பிரச்சினை
2.	மிகவும் மகிழ்ச்சியான ஒரு தருணம்	-	மகிழ்ச்சியாக இருந்த சந்தர்ப்பம்
3.	துக்கப்பட்ட ஒரு சந்தர்ப்பம்	-	வாழ்வு உள்ளவரை வேதனை
4.	எதிர்கால எதிர்பார்ப்பு	-	பயம், மோதல் மற்றும் பிரச்சினை அனைத்துடனும் மகிழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல்களை பின்வரும் விதத்தில் வகைப்படுத்துமாறு பங்கேற்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

உள	கலாச்சாரம்	சூழல்	சமூக	அரசியல்
மமதை	இன குல பேதம்	சூழல்	தலைமைத்துவம்	வேட்புமனு தாக்கல்
சுயநலம்	மதம்	சுகாதார பிரச்சினை	குடும்பங்களுக்கு இடையிலான வீட்டுப் பிரச்சினை	யோசனைகளை முன்வைத்ததல்
அன்பு	எல்லை பிரதேச கலவரங்கள்		சொத்து	கட்சி பேதம்
சந்தேகம்	திருமணம்	தொழிநுட்ப வளர்ச்சி	குழந்தைகள் பெற்றோர் மாமி, மருமகள்	வாக்குச் சண்டை
வஞ்சகம்	குழந்தைகளின் உரிமைகள்		முன்னேற்றம்	ஒவ்வொருவரை முந்திச்செல்லல்
வைராக்கியம்		போக்குவரத்து மற்றும் பாதைகள்	பணம்	தகுதி
பொறுமையற்ற நிலை		நீர்	தொழிலற்ற நிலை நியாயமற்ற நிலை விவாகரத்து திருமணம்	கவரும் தன்மை
தேவையற்ற		இயற்கை அனர்த்தம்	சுதந்திரமாக பயணிக்க முடியாமை	வன்முறை
தொடர்புகள்		மழை காலநிலை	உணவு	கலவரம்
கடுமை			தகுதியுள்ளோருக்கு தகுந்த இடமளிக்காமை நன்மைகள்	வாக்கு கொள்ளையடித்தல்
பொறாமை			நன்கொடை	வெற்றி தோல்வி
இணக்கப்பாடின்மை			உயர்வு	
செவிமடுக்காமை			கல்வி	
தவிர்த்தல் மதிப்பளிக்காமை			துஷ்பிரயோகம் வளப் பற்றாக்குறை	

இந்த அனைத்து காரணங்களையும் உள்ளே மற்றும் வெளியே என்ற வகையில் மீண்டும் இரண்டு பகுதிகளாக பிரிக்க முடியும்.

ஒரு மோதலில் நடக்கக்கூடியவை

தோல்வியடைதல் -- வெற்றியடைதல்	ஒரு தரப்பினர்	
வெற்றியடைதல் -- தோல்வியடைதல்		
வெற்றியடைதல் -- வெற்றியடைதல்	இரு தரப்பினரும்	
தோல்வியடைதல் - தோல்வியடைதல்		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் மோதலின் வரலாறு



அமர்வு 2 : பங்கேற்பாளர்கள் ஒரு மோதலின் நல்ல பக்கங்களையும் மோசமான பக்கங்களையும் பகுப்பாய்வு செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதலின் மோசமான பக்கங்கள்



விளக்கத்தாள் **(Handout)**

மோதலைத் தீர்க்கும் விதம்

1. மோதல் முகாமைத்துவம்
2. மோதலைக் கட்டுப்படுத்தல்
3. மோதலைத் தீர்த்தல்
4. மோதல் நிறைமாற்றம்
5. மோதலைத் தடுத்தல்

மோதல் முகாமைத்துவம்

வன்முறை இல்லாமல் மோதலைத் தீர்த்தல் என்பது மோதல் முகாமைத்துவம் எனப்படும். விசேடமாக தனியார் நிறுவனங்களில் இவ்வாறான முகாமைத்துவம் நடைபெறுவதுண்டு.

மோதலைக் கட்டுப்படுத்தல் -- நீதிமன்ற தீர்ப்புகள் இணக்கப்பாடு

மோதலைத் தீர்த்தல்

மோதல் தொடர்பான இரு தரப்பினரதும் கருத்துக்களை மற்றும் யோசனைகளை பெற்று அவர்களின் பங்களிப்புடன் தீர்வு காண்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல் நிலைமாற்றம்

மோதல் ஓர் ஆயுதப் போராட்டமாக மாற்றமடைவதற்கு முன்னர் சாதகமான பெறுபேறுகளை எடுத்து வரும் பொருட்டு மோதலின் திசை வழியை மாற்றுதல்.

மோதல் தடுப்பு கருவிகள்

- முறைசாரா கலந்துரையாடல்கள் (Informal discussions)
- பேச்சுவார்த்தை (Negotiation)
- மூன்றாம் தரப்பினர் வசதிபடுத்துனராகச் செயற்படுதல். (Facilitation)
- இரு தரப்பினரும் விரும்ப வேண்டும் (Condition)
- தகுந்த சூழலை ஏற்படுத்தல்
- அவர்களுடைய தீர்வுகளை நோக்கிச்செல்ல சந்தர்ப்பம் ஏற்படுத்தல்
- மத்தியஸ்தம் (mediation)
- தீர்வு காண்பதற்காக ஒரு மூன்றாம் தரப்பு நீதிமன்றத்திற்கு உட்படுத்தப்படல் (Arbitration)

வசதி வழங்குனர்களின் பண்புகள் (Facilitator)

- பக்கசார்பற்ற தன்மை
- ஆதாயங்களை எதிர்பார்க்காமை
- தான் ஒரு நிபுணர் என்பதை உணர்த்தாமை
- தீர்வை பெற்றுக் கொடுக்கும் ஒருவராக நடந்துகொள்வதை தவிர்த்துக் கொள்ளல்
- தீர்வை பெற்றுக் கொடுக்க உதவுபவராக இருப்பதாக மட்டும் சொல்ல வேண்டும்
- சிறந்த தொடர்பாடல் திறமை இருக்க வேண்டும்.
-

<u>வசதி வழங்குனரின் கடமைகள்</u>

- இருதரப்பினரையும் தனித்தனியாக சந்தித்தல்.
- நிலைமையைப் புரிந்து கொள்ளல்
- சந்திப்புக்கான திகதி, நேரம், இடம் அறிவித்தல்
- சந்திக்கும் இடத்திற்கு வந்ததும் அவர்களை வரவேற்றல்
- இருக்கைகளை வழங்குதல்
- தன்னை ஒரு வழங்குனராக இருக்க இணக்கத்தைப் பெறல்
- இருதரப்பினரிடமும் விடயங்களை தீர்த்துக் கொள்வதற்கான இணக்கத்தைப் பெறல்.
- இதை தீர்ப்பதற்கு வசதிவழங்குனராக இருக்க இணக்கத்தைப் பெறல்.
- முதலாவதாக விடயங்களை முன்வைப்பவர் யார் எனத் தீர்மானித்தல்.

<u>மோதல் தீர்வு நிபந்தனைகள்</u>

- இருதரப்பினருக்கும் கதைக்க ஏற்பாடு செய்தல்.
- பிரச்சினைகளை இனங்காணல்
- தேவைகளை இனங்காணல்
- தீர்வைக் காணும் விதத்தை விவரித்தல்
- 1ம் தரப்பினரிடம் மற்றும் 2ம் தரப்பினரிடம் தீர்விற்கு இணக்கம் பெறல்
- எதிர்கால திட்டம் ஒன்றைத் தயாரித்தல்.
- சுமூகமாக தீரத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தனக்கு கிடைக்கும் நேரத்தில் மட்டும் கதைத்தல், அடுத்தவர் பேசும் பொழுது தடுக்காதிருந்தல்
- பொருத்தமற்ற வார்த்தைகள் பாவிக்காதிருந்தல்
- செவிமடுத்தல்.
- முதலில் யார் பேச வேண்டும் என்பதனைத் தீர்மானித்தல்
- இரு தரப்பினருடைய கருத்துக்களையும் பட்டியலிட்டு, கலந்துரையாடல் மூலம் இறுதி தீர்வை பெறல்.

மாத்தறை மற்றும் காலி மாவட்ட வளப் பகிர்வாளர்களினால் கலந்துரையாடப்பட்ட சித்தாந்த ரீதியிலான கருத்துக்களும், நடைமுறைச் செயற்பாடுகளும் பின்வருமாறு:

அமர்வு 3 : மோதலைப் புரிந்து கொள்ளல்

முக்கியமான சில கேள்விகளை மையப்படுத்திக் கொண்டு இந்த அமர்வு நடத்தப்பட்டது. மோதலுக்கான மூல காரணங்கள் என்ன? மோதலின் முக்கிய தரப்பினர் யார்? இது எதனால் ஏற்பட்டது? எப்போதிலிருந்து? எமது பிரச்சினைகள் எவை? அடுத்த தரப்பினரின் பிரச்சினைகள் எவை? அவற்றைப் புரிந்து கொள்ள முடியுமா?

மோதலின் நல்ல அம்சங்களை அங்கீகரித்தல்

தீர்வுகள்	-- புதிய அனுபவத்தை எடுத்துக் காட்டல்
நியாயப்படுத்தல்	-- நல்ல மனநிலையை வளர்த்துக்கொள்ளல்
திறமைகளின் வளர்ச்சி	-- பிழையை திருத்திக் கொள்ளல்
புதிய யோசனைகள்	-- புதிய பங்காளர்கள்
புரிந்துணர்வு	--- சவால்களுக்கு முகம்கொடுத்தல்.

மோதல் பற்றி கேட்கும் போது பங்கேற்பாளர்கள் இரு சந்தமர்ப்பங்களில் வழங்கிய + மற்றும் - பதில்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கு விளங்கிக்கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் நாம் மோதலை நோக்கும் விதமாகும். பல சந்தர்ப்பங்களில் நாம் மோதலைப் புரிந்து கொள்ளாமல் தீர்வுகளை முன்வைப்பது உண்டு.

தரப்பபினர்கள் மோதலுடன் தொடர்பு கொள்ளும் விதத்தின்படி மோதலின் பெறுபேறுகள் அமைவதுண்டு. ஒரே மோதலாக இருந்தும் வெவ்வேறு நபர்கள் அதனுடன் தொடர்பு கொள்வது ஒன்றுக்கொன்று வித்தியாசமான விதங்களிலாகும். நாம் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். மோதலே இல்லாத ஓர் உலகை எம்மால் உருவாக்க முடியாது. நாம் செய்ய வேண்டியது மோதலைக் கையாளும் விதத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுவதாகும். பலன்களுக்காக பிரச்சினையை வழிநடத்தும் முறையொன்று நமக்கு இருக்க வேண்டும். வித்தியாசங்களால் ஏற்படும் மோதல்களை நாம் புரிந்துகொண்டு செயற்பட்டோமெனில் நல்ல பலன்களை பெற்றுக் கொள்ள முடியும்.

- உடல் அமைப்பு
- வடக்கு, கிழக்கு, தெற்கு வித்தியாசங்கள்
- மத ரீதியிலான
- இன ரீதியிலான
- ஒவ்வொருவரினதும் முன்னுரிமைகளுக்கு ஏற்ப

இவ்வாறான வேறுபாடுகள் இயற்கையானது.

மோதல் என்பதும் மனிதர்கள் போலவே இயல்பானதாகும். மனிதர்களாக நாம் ஒவ்வொருவரில் மாறுபட்டவர்கள். அப்படியானால் செய்ய வேண்டியது மோதலை நல்ல வகையில் கையாளும் நபர்களை உருவாக்குவதே ஆகும்.

நம் அனைவருக்கும் ஒரே பெயர் என்றால் .....?
நாம் அனைவரும் ஒரே வகையான உடைகளை அணிந்தால் .....?
நாம் அனைவரும் செய்வதும் ஒரே விடயம் என்றால் .....?

வித்தியாசம் தேவை. அது அழகானது. நாம் இந்த அழகான வித்தியாசத்தை அழகாக பார்க்காததினால் இன்று அது பிரச்சினையாக மாறியுள்ளது.

இந்த வித்தியாசத்தைத் தெளிவாக காண்பதற்காக ஒரு குழுப் பயிற்சி கொடுக்கப்பட்டது.:

- தான் தொடர்புபட்ட ஒரு மோதல் அனுபவங்களை தனது குழுவுடன் பகிர்ந்து கொள்ளல்
- மோதலை உருவாக்கியவர் யார்?
- அது எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டது?

கலந்துரையாடல் மற்றும் சமர்ப்பணத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

1. தொடர்புகள் முறிவடைவதுடன் முடிவடைந்த பிரச்சினைகள் பற்றி பேசப்பட்டதா ?
2. மோதலின் எல்லா இடங்களிலும் மூன்றாம் தரப்பினர்கள் இணைந்துள்ளனரா?
3. இந்த மோதலை வேறு விதத்தில் கையாளுவதற்கான சந்தர்ப்பம் இருந்ததா?
4. அவ்வாறு கையாண்டு இருந்தால் நல்ல பலன்கள் கிடைத்திருக்குமா?

நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக பின்வரும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது:

மோதல் பகுப்பாய்வின்போது

- மோதலுடன் சம்பந்தப்பட்டவர்களின் கோணத்திலிருந்தே நாங்கள் பகுப்பாய்வு செய்ய வேண்டும்
- மோதலுடன் நேரடியாகத் தொடர்புள்ள தரப்பினரை இனம்காணாவிட்டால் பகுப்பாய்வு செய்தல் கடினம்
- எல்லா சந்தர்ப்பத்திலும் முடிவை காண்பதற்கு முயற்சிப்பது உகந்ததா?
- யோசனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய முறைமைகள் ?
- தீர்வுகளை முன்வைக்கும்போது மோதலுடன் தொடர்புடையவர்களுடன் கலந்தாலோசித்து தீர்வுகளை முன்வைத்தால் நல்லது.
- மோதல் குறித்து நல்ல புரிந்துணர்வு இருத்தல் சரியாக தீர்வு காண்பதற்கு இலகுவாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதலின் எண்ணக்கரு ரீதியிலான வடிவம்

1) மோதல் என்ன?

நேரடி தொடர்புடைய தரப்பினர்கள்

2) தரப்பினர்



3) மோதல் பற்றி நாம் ஆழமாக சிந்திப்பதன் மூலம் இலகுவில் தீர்வு காண முடியும். வ்வாறு செய்யும் பொழுது மற்றவர்களின் தேவைகள் குறித்து நாங்கள் கவனஞ் செலுத்த முடியும்.

4) மோதல் வரலாற்றுடன் தொடர்புடையவர்கள் யார்? எவ்வாறு ஆரம்பமானது? வெற்றி அல்லது தோல்வி ஏற்படுவதற்கான காரணம் என்ன? இவைகளை ஆராய்வது மூலம் மூல காரணங்களை தடுத்துக் கொள்ளலாம்

5) பெறுமதிகள், மதிப்புகள் : மோதலுடன் தொடர்புடைவர்களின் மாறுப்பட்ட மனப்பாங்கினால் அது ஏற்படுவதை புரிந்து கொள்ள வேண்டும். நம்பிக்கை ஊடாக தப்பான மனப்பாங்கை நீக்க வேண்டும்.

இப்பயிற்சியின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது மக்கள் பிரதிநிதியாக மோதல் ஒன்றை தீர்த்தலின் போது அதனைக் கையாளுவது எப்படி? நல்ல பிரதிபலனை பெறக்கூடிய விதத்தில் தீர்வு காண்பது எப்படி என்பதை தெரிந்து கொள்வதாகும்.

மோதல் சம்பந்தமாக நல்ல மனப்பாங்கு இருக்க வேண்டும்.

- மோதல் மோசமானது அல்ல (உணர்பூர்வமாகவும் மனப்பாங்காலும் மோதலுக்கு தீர்வு காண முடியாது)
- தரப்பினருக்கிடையில் இருப்பது நல்ல தொடர்பா? தேடிப்பார்த்தல்
- ஒன்றுக்கு மேற்பட்ட தரப்பினர்கள் இருத்தல்.
- ஏதிர்மாறான கருத்துக்கள் எவை?
- வாய்மூலம் அல்லது வாய்மூலம் அல்லாத வெளிப்பாடுகள். (வாய்மூலம் அல்லாத வெளிப்பாடுகளை புரிந்து கொள்ள வேண்டும்.)
- தொடர்பாடல் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுப் பயிற்சியின் பின்னர் பங்கேற்பாளர்கள் முன்வைத்து கருத்துக்கள்

- வளங்கள் இருப்பின் தீர்வுகளைக் காண முடியும்.
- பெண்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து திட்டமிட வேண்டும்.
- மீண்டும் பிரச்சினையைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.
- தற்காலிக தீர்வு காண்பது மட்டும் போதியதாக இல்லை.
- மீண்டும் மோதல் ஏற்படாமைக்கு செய்யும் செயற்பாடுகள்.
- நாட்டில் தற்போது நிலவி வரும் மோதல்களைத் தீர்க்க உண்மையான அக்கறை தேவை.

இங்கு தீர்வுகளே மிக முக்கியமானவையாகும். வன்முறையால் மோதல்களை தீர்த்தல் உகந்ததல்ல.

மோதல் தீர்வு, மோதல் தடுப்பு மற்றும் மோதல் நிலைமாற்றம் என்பவற்றின் போது சமூக செயற்பாட்டாளர்கள் என்ற ரீதியில் பெண்கள் பங்களிப்புச் செய்யக் கூடிய சந்தரப்பங்கள்

A - இரு தரப்பினரும் முறைசாரா கலந்துரையாடல் மூலம் மோதலைத் தீர்த்தல்
B - பேரம் பேசுதல் - இருதரப்பினர்கள் மட்டும் தொடர்பு கொண்டு கேட்டுக்கொண்டபடி நடத்தும் கலந்துரையாடல்.
C - இலகுவாக்கல் - மூன்றாம் தரப்பினர்கள் இணைதல். தீர்விற்கு அழுத்தம் கொடுக்காமை, இரு பிரிவினர்களுக்கும் உதவி செய்தல்
D - சமரசப்படுத்தல் -- சமரப்படுத்தலில் அழுத்தம் கொடுக்கும் நிலை காணப்படும்.
E - நீதிமன்ற தீர்ப்பு - தீரவிற்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் தரப்பினர்களின் யோசனைகள் தேவைப்படாது.

இந்கு நான்கு சந்தர்ப்பங்களில் நாங்கள் பங்கு பெற முடியும். அந்த நிலையை நடைமுறையில் அனுபவிப்பதற்காக குழுப் பயிற்சியொன்று நடத்தப்பட்டது.

குழுப் பயிற்சி

பெண் என்ற ரீதியில் நாட்டில் நிலவும் மிக ஆழமான பிரச்சினையான "சமாதானத்தை" நோக்குவது எவ்வாறு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கங்கள்

- வெளிக்குப் புலப்படாத பிரச்சினைகளையும் காண்பதற்கு முயற்சிக்கவும்.
- விரும்பியதை மட்டும் செய்யும் மனப்பாங்கைத் தவிர்க்கவும்.
- ஒரு சிக்கலான பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் விதத்தில் பணியாற்றவும்.

இவைகளை பற்றி பங்குபற்றுனர்கள் செயல்படும் விதம் கண்காணிக்கப்பட்டது.

பங்குபற்றுனரகளின் கருத்துக்கள்:

- இவ்வளவு காலமும் பிரச்சினையை மேலோட்டமாக மட்டும் பார்க்க பழகியிருந்த நாம் அதன் ஆழத்தைப் பற்றி தேடுவதற்கு முயற்சித்தல்.
- பெண்கள் என்ற ரிதியில் சமாதானத்திற்காக பொறுப்புகள் பல உண்டு.
- ஒவ்வொருவரின் தேவைகளை இனம்காணல் மற்றும் அத்தேவைகளை புரிந்து கொள்ளல். பொறுமையாக செவிமடுத்தல் வேண்டும்.
- ஒவ்வொருவரின் பல்வகைத்தன்மைகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.
- உருவாகும் சந்தர்ப்பங்களிலேயே மோதல் தீர்வைக் காண வேண்டும்.
- வெற்றிகரமான பலனை காண இணக்கம் தெரிவிக்கும்போது மீண்டும் இவ்வாறான நிலமை ஏற்படாதவாறு திட்டங்களை தீட்ட வேண்டும்.

மாவட்ட ரீதியிலான குழுப் பயிற்சிகள் மற்றும் கலந்துரையாடல்களின் போது முன்வைக்கப்பட்ட விடயங்கள்

பங்கேற்பாளர்களுக்கு மோதல் தீர்வு தொடர்பான சம்பவக் கற்கைகள் வழங்கப்பட்டதுடன், அவர்கள் அவற்றைப் பகுப்பாய்வு செய்தனர்.

மாத்தறை

குழுப் பயிற்சி

மோதல் பகுப்பாய்வு

மோதல்:

நோர்வே நாட்டின் மூலம் பல்கலைகழகத்திற்கு நிதி உதவி கிடைத்தல். ஒரு மாணவர் சங்கம் அந்த நிதியில் விடுதியொன்றை அமைத்து தரும்படியும் இன்னுமொரு மாணவர் சங்கம் கேட்போர் கூடமொன்றை அமைத்து தருமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

தரப்பினர்:

பல்கலைக்கழக கலைப் பீட மாணவர்களும் முகாமைத்துவ பீட மாணவர்களும்.

தேவைகள் - கலைப்பீடம் :

கேட்போர் கூடம் பற்றிய பிரச்சினை அவர்களுக்கு இருந்தாலும், அவர்கள் பிரதானமாக விடுதியொன்றையே வேண்டுகிறார்கள்.

முகாமைத்துவ பீடம் :

விடுதியொன்றை பற்றிய பிரச்சினை அவர்களுக்கு இருந்தாலும் அவர்கள் பிரதானமாக கேட்போர் கூடமொன்றையே வேண்டுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு :

வதிவிட வசதிகளை பெற்றுத் தருமாறு பல வருடங்களாக வேண்டுகோள் விடுத்தல். உபவேந்தர் மூலம் அதற்கு வசதிகள் ஏற்படுத்தி கொடுப்பதாக உறுதியளித்தல். அதுபோலவே கேட்போர் கூடமொன்றை நிர்மாணிக்க அடிக்கல் நாட்டி, பல வருடங்களாக அது காடாகி உள்ளமை.

பங்கேற்பாளர்கள் முன்வைத்த மாற்று யோசனைகள்:

- தூர பிரதேச மாணவர்களுக்காக விடுதி வசதியைப் பெற்றுக் கொடுப்பது மிக முக்கியமாகும். தற்போது இருக்கும் ஒரு விடுதி மிகவும் மோசமாக பழுதடைந்துள்ள படியால் விடுதி பெற்றுக் கொடுப்பது அத்தியாவசிய தேவையாகும்.

- அதுபோல் கலைப் பீடத்திற்கும் முகாமைத்துவ பீடத்திற்கும் விரிவுரைகள் கேட்போர் கூடத்தில் நடந்தாலும், சில விரிவுரைகளை நடத்த முடியாது. காரணம் நேரம் பற்றிய பிரச்சினையாகும் எனவே, இரு மாணவ பிரிவினர்களுக்கும் பொதுவான விடயங்கள் இருந்தாலும் அவர்கள் ஒன்றை முக்கியமாக கருதிக் கொண்டு பிரிவுகளாகி பிரச்சினையை உருவாக்கிக் கொண்டனர்.

- இரு பிரிவினருக்கும் பொதுவான வதிவிட வசதிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். வெளியிலுள்ள விடுதிகளில் தங்குவதற்கு கிடைக்கும் உதவிப் பணம் போதியதாக இல்லை.

- ஒரு விடுதியை பெற்றுக் கொடுத்து விரிவுரை கால அட்டவணையை விரிவுரையாளர்கள் கூடி மாற்றம் செய்தல். அதன்படி சில விரிவுரைகளை காலை 7 முதல் 8 வரை நடத்துதல். கேட்போர் கூடத்தை வாரத்தில் 3 நாள் கலைப் பீடதிற்கும், 2 நாள் முகாமைத்துவ பீடத்திற்கும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இரண்டு பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டது.

காலி

<u>குழுப் பயிற்சி</u>

மோதலைப் புரிந்துக்கொள்ளல்:

காணியின் வேலி சம்பந்தமாக இரு வீட்டார்களுக்கு இடையில் ஏற்பட்ட ஒரு தகராறு

பல வருடங்களாக காணியின் வேலி சம்பந்தமாக இரு அயலவர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை பக்கத்து வீட்டு இளைஞன் தீர்த்துவைக்க முற்பட்டான். மோதலை ஆரம்பித்த வீட்டின் உரிமையாளர் ஒரு இராணுவ உத்தியோகத்தர் ஆவார். பிரச்சினை நடந்து கொண்டிருக்கும் போது அவர் துப்பாக்கியை கொண்டு வந்து எதிர்த்தரப்பினர் மீது சுட்டார். எதிர்தரப்பின் இளைஞனும் தீர்க்க வந்த இளைஞனும் இந்த சம்பவத்தால் உயிரிழந்தனர். பிரச்சினையை ஆரம்பித்த நபர்கள் ஊரை விட்டு சென்றுவிட்டனர்.

இந்த மோதலைப் பின்வரும் விதத்தில் நல்லபடியாக தீர்த்து வைத்திருக்க முடியும்:

இந்த இரு குடும்பங்களும் உறவினர்களாக இருந்தபடியால் குடும்பப் பெரியோர்களால் ஆலோசனை வழங்கப்பட்டு, காணியின் வேலியை அரச அளவீட்டாளருடன் இணைந்து செய்திருக்கலாம். அதுபோல் அந்தத் தருணத்தில் துப்பாக்கியைப் பயன்படுத்தாமல் இருந்திருந்தால் பிரச்சினை இவ்வளவு தூரம் செல்லாமல் மரணத்தையும் தடுத்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல் பகுப்பாய்வு

- இந்த பிரச்சினையை மோசமான விதத்தில் தீர்ப்பதற்கு காரணம் துப்பாக்கியும் முன்கோபமும் ஆகும்.
- இரு பிரிவினர்களும் ஒருவரையொருவர் புரிந்துக்கொள்ளமை.
- அயல் வீட்டார் என்ற வகையில் ஒரு தோழமை உணர்வு இல்லாமை.
- தனது உரிமைகள் பற்றிய அறிவின்மை.

<u>சம்பவக் கற்கை</u>

ஒரு தாய்க்கு ஒரு மகளும் மகனும் இருந்தனர். அந்த வீட்டுக்கு முன்னால் தோடம் பழ மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தில் பல வருடங்களுக்கு பின் ஒரு காய் காய்த்தது. அந்த தோடம்பழம் பழுத்த பின்னர் மகன் அதை தனக்கு வேண்டுமென்று கூறினான். அதேபோல் மகளும் அதை தனக்கு தேவையென கூறினாள். தாயென்ற ரீதியில் இதை எவ்வாறு தீர்த்து வைக்க முடியும் என்பது கீழே காட்டப்பட்டுள்ளது.

மகனை அழைத்து இப்பழத்தின் தேவையை பற்றி வினவினாள். மகன் அந்த பழத்தின் விதைகளை பாடசாலையின் விவசாய பாடத்தின் ஆசிரியை சக மாணவர்களுடன் தோட்டத்தில் நடுவதற்கு தேவையென குறிபிட்டான். தாய் மகளை அழைத்து இப்பழத்தின் தேவையைப் பற்றி வினவினாள் .அதற்கு அவள் மனையியல் ஆசிரியை ஒரு கேக் செய்ய அதன் தோல்களை கொண்டுவரும்படி சொன்னார் என்றாள். தாய் அந்த பிரச்சினையின் போது அவரவர் தேவைகளை கேட்டபடியால் தேவைக்கேற்ப விதைகளையும் தோலையும் கொடுத்து மிகுதியான சாரில் அனைவருமாக பானம் தயாரித்து குடித்தனர். இது அவள் மோதல் தீர்த்த மிக சரளமான உதாரணமாகும்.

மோதல் தீர்வு தொடர்பான இரண்டு நாள் செயலமர்வின் பின்னர் பங்கேற்பாளர்கள் தெரிவித்த கருத்துக்கள்:

- குடும்பத்தினுள் சமாதானம் சீர்குலைவதற்கு மோதல்களைப் புரிந்து கொள்ளாமையும் ஒரு காரணமென புரிந்து கொண்டோம்.
- சகிக்காமையை வெளிக்காட்டுவதை தவிர்த்து, சொல்வதை, செவிமடுத்து காரணங்களை தேடியிருந்தால் குடும்பத்தினுள் எந்த அளவுக்கு சமாதானத்தை ஏற்படுத்தி இருக்கலாம்?
- தரப்பினர்களை இணைத்துக் கொள்ளாமல் தனியாக தீர்மானம் எடுப்பதால் அழிவுகள் அதிகம் என்பதை புரிந்து கொண்டமை.
- ஒவ்வொருவரின் தேவைகளையும், வித்தியாசங்களையும் புரிந்து கொள்ள முடியுமென்றால் எமது வீடு, பிரதேசம், நாடு எவ்வளவு அழகான இடமாக இருக்குமென்பதை புரிந்து கொண்டமை.
- பெண் என்ற ரீதியில் மத்தியஸ்தராக செயற்படும் திறமைகளை மிகவும் நன்றாக வளர்த்துக் கொண்டமை.
- மோதல் ஒன்றை தீர்க்கும் போது நீதிமன்றத் தீர்ப்பை விட இரு தரப்பினர்களின் தேவைகளுக்கு ஏற்ப தீர்வுகளை முன்வைப்பதன் மூலம் சிறந்த பலன்களை பெற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலும், சமூகத்திலும் ஏற்படும் மோதல்களைத் தீர்த்து வைப்பதற்கு ஒரு பெண் என்ற முறையில் வெற்றிகரமாக பங்களிப்புச் செய்ய முடியும்.

- வெற்றிகரமான ஒரு வேலைத்திட்டத்தில் பங்கேற்க கிடைத்ததால் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாக தெளிவாக எல்லோரும் குறிப்பிட்டிருந்தார்கள்.

4. மாற்றத்துக்கான சக்தியைக் கண்டறிதல் - இரு நாள் செயலமர்வுகள்

மாத்தறை, காலி, களுத்துறை மாவட்டங்களில் மூன்றாவது செயலமர்வு கீழ்காணும் விதத்தில் நடைப்பெற்றது.

மாத்தறை மாவட்டம்	2008 அக்டோபர் 06,07 அஹங்கம
காலி மாவட்டம்	2008 அக்டோபர் 08,09 ஹிக்கடுவ
களுத்துறை மாவட்டம்	2008 அக்டோபர் 10,11 களுத்துறை
வளப் பகிர்வாளர்கள்	சந்திரா கமகே திலகா வீரக்கோன்

அமர்வு 1: சுனாமி பேரழிவு

சுனாமியின் போது பெண்களின் அனுபவங்களை விவரிப்பதுடன் செயலமர்வு அறிமுகம் பெற்று வைக்கப்பட்டது. மாற்றத்தை எடுத்து வருவதிலும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் பெண்கள் கொண்டிருக்கும் ஆற்றலைக் கண்டறிவதற்கு இதுவே சிறந்த வழியாகும்.

சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய கால, இடைக் கால, நீண்ட கால உதவிகள் பற்றிய கலந்துரையாடல் - பங்கோற்பாளர்களிடம் முன்வைக்கப்பட்ட மிக முக்கியமான கேள்வி:

பேரழிவுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் எவ்வளவு மனிதாபிமான உணர்வுகளுடன் ஒன்று கூடி மக்களால் செயற்பட முடியுமென்றால், சமாதானதிற்காக நாம் ஒன்று கூடி செயற்படுவதற்கு ஏன் இன்னும் தாமதம்?

மனிதர்களின் அடிப்படைத் தேவைகள் பற்றி ஆரம்பத்தில் தத்துவ ரீதியிலும், நடைமுறை ரீதியிலும் கீழ்காணும் விதத்தில் அறிவூட்டல் செய்யப்பட்டது:

1. உயிரியல் ரீதியில் (Biological)

- உணவு
- போஷாக்கு
- சுகாதாரம்
- பாலியல் தேவைகள்
- தூக்கம்

2. உளரீதியான (Psychological)

- இழந்தவற்றை பற்றிய மன அழுத்தம்
- உறவுகள்
- ஓய்வு
- கேளிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிர்பார்ப்பு
- பாதுகாப்பான, நிரந்தர உறவுகளை உருவாக்குதல்
- முனைப்பான சமூகப் பங்களிப்பைப் பெறல்
  சமூக ரீதியில்
- குடும்பம்
- வீடு
- வாழ்வாதாரம்
- கல்வி
- பாதுகாப்பு
- உறவு, அயலவர், நண்பர்களின் தொடர்புகள்
- தனிப்பட்ட தேவைகள்

கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்கள்: இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மோதல்கள் போன்ற நெருக்கடி நிலைமைகளை ஆண்களும், பெண்களும் வெவ்வேறு விதங்களில் அனுபவிக்கின்றார்கள். அனர்த்தத்திற்குப் பிற்பட்ட / மோதலுக்குப் பிற்பட்ட காலப் பிரிவுகளின் போது பெண்கள் மற்றும் பிள்ளைகள் போன்றோரின் விசேட தேவைகள் (கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பிள்ளைகள் ஆகியோரின் போஷாக்குத் தேவைகள் போன்றவை) கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். அதே போல வயது முதிர்ந்தவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோருக்குத் தேவையான வசதிகளும் வழங்கப்படுதல் வேண்டும். இடம்பெயர்ந்த பெண்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது அவசியமாகும்.

பங்குப்பற்றுனர்களை சுனாமி ஏற்பட்ட சந்தர்ப்பத்திற்கு மனதளவில் மீண்டும் கொண்டு செல்லும் விதத்தில் குழு பயிற்சி கொடுக்கப்பட்டது.

பயிற்சி

- மக்களின் தேவைகளை மதிப்பிடுதல்
- சுனாமி பேரழிவிற்கு உட்பட்டோருக்கு பெற்றுக்கொடுத்த குறுகிய கால, இடைக் கால, நீண்ட கால உதவிகள்
- யார் அப்படி செய்தது? ஏன் அப்படி செய்தார்கள்?
- மக்களின் பலதரப்பட்ட தேவைகளை பற்றிய தெளிவை பெறுவதற்காக குறுகிய கால, இடைக் கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் மக்களால் செய்யப்பட்ட சேவையை மதிப்பிடல்

மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான குறுகிய கால உதவிகள் (3 - 4 நாட்களுக்குள்)

- சடலங்களைச் சேகரித்தல்.
- காயமடந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதித்தல்.
- நீர் குடித்து மயக்க நிலையில் உள்ளவர்களுக்கு முதலுதவி கொடுத்தல்.
- வைத்தியர்கள் நோயாளர்களுக்கு உதவுதல்.
- வைத்தியசாலை ஊழியர்களின் செயற்திறன்.
- இராணுவ மற்றும் போலிஸ் அதிகாரிகளின் உதவியால் பாதுகாப்பு பெறல் மற்றும் கட்டிடங்கள் வாகனங்களுக்கடியில் இருந்தவர்களை மீட்டல்.
- காயம் இல்லாத, வீடுகளை இழந்தவர்களை ஆலயங்கள் பன்சலைகளுக்கு கொண்டு செல்லல்.
- சூடான உணவு பான வகைளை பெற்றுக் கொடுத்தல்
- உடைகளையும் பாய் தலையணையும் பெற்றுக் கொடுத்தல்.
- வழிதவறியவர்களுக்கு தனது குடும்பத்தாரை தேடிக்கொள்ள உதவுதல்.
- ஆலயங்களில் பன்சலைகளில் உள்ளவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தல்.
- வீடுகளையும் நீரோட்டங்களையும் சுத்தப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சடலங்களை இனம்காண உதவி செய்தலும், அடக்கம் செய்தலும்
- சவப்பெட்டிகளை இலவசமாக செய்து கொடுத்தல்.
- சிறு குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பால் வழங்கல்.
- தற்காலிக இருப்பிடங்களை பெற்றுக் கொடுத்தல்.
- சுத்தமான குடி நீரை பெற்றுக் கொடுத்தல்.
- போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொடுத்தலும் எரிபொருள்களை பறிமாரிக் கொள்ளலும்.
- இறந்தவர்களுக்கான இறுதிக் கிரியைகளை மதகுருமார் சுய விருப்பத்துடன் அந்த இடத்திற்கே சென்று நிறைவேற்றல்.
- மன ஆறுதலைப் பெற்றுக் கொடுத்தல்.
- மரண சான்றிதழ்களை பெறுவதற்கு உதவுதல்.
- லந்தர், டோர்ச் விளக்குகள், மெழுகுவர்த்திகள் போன்றவற்றை இலவசமாக வழங்கியமை.

நடுத்தர கால உதவிகள்

- பெற்றோர்களை இழந்த பிள்ளைகளை தகுந்த இடங்களில் ஒப்படைத்தல்.
- தற்காலிக வீடுகளை அமைத்தல்.
- உலர் உணவு வகைகளை பெற்றுக் கொடுத்தல்.
  வீட்டுத் தளபாடங்களை பெற்றுக் கொடுத்தல்
- உணவு சலுகைகள் பெற்றுக் கொடுத்தல்
- மாதமொன்றுக்கு ரூபா 5000 கொடுப்பனவாக பெற்றுக் கொடுத்தல்
- பொலிஸ் அறிக்கை பெற்றுக் கொடுத்தல்
- சமூக – அரச சார்பற்ற – வெளிநாட்டு அமைப்புகள் உதவி செய்தல்.
- அரசுக்கு தகவல் பெற்றுக் கொடுத்தல்.
- பிரதேச மட்டங்களில் அமைப்புகளை உருவாக்குதல்.
- நன்கொடை பெற்றுத் தரும் வெளிநாட்டு அமைப்புகளுக்கு தகவல் வழங்குதல்.
- மீன்பிடி தொழிலுக்கு வள்ளம், வலை பெற்றுக் கொடுத்தல்
- தும்பு கயிறு தயாரிப்பவர்களுக்கு தும்பு மற்றும் இயந்திங்களை பெற்றுக் கொடுத்தல்.
- தத்தமது சுயதொழிலை மீண்டும் வளர்த்துக் கொள்ள உதவி வழங்கல்.
- அரச மற்றும் வெளிநாட்டு உதவிகளை சரியான விதத்தில் பகிர்ந்தளித்தல்
- வைத்திய முகாம்களை நடாத்துதல்
- நாளாந்த கூலி அடிப்படையில் தொழில் பெற்றுக் கொடுத்தல்.
- மன அமைதிக்கான செயலமர்வுகள் நடத்துதல்.
- முகாம் அருகே சனசமூக நிலையங்களை அமைத்து, தினசரி பத்திரிக்கைகளை வழங்குதல்.
- ஊனமுற்றோருக்கு உபகரணங்கள் வழங்கல்.
- தற்காலிக பாடசாலைகளில் கல்வியை மேற்கொள்ள வழியமைத்தல்.

நீண்ட கால உதவிகள்

- நிரந்தர வீடுகளை பெற்றுக் கொடுத்தல்.
- உணவு சலுகைகளை நீடித்தல்.
- வீட்டுத் தளபாடங்களை பெற்றுக் கொடுத்தல்.
- புதிய தொழில் பயிற்சிகளை பெற்றுக் கொடுத்தல்.
- தும்பு மற்றும் இயந்திரங்களை பெற்றுக் கொடுத்தல்
- வள்ளம், வலை பெற்றுக் கொடுத்தல்
- வீடுகளை அமைத்துக் கொள்ள நிதி உதவி பெற்றுக் கொடுத்தல்.
- சர்வதேச அமைப்புகளால் உதவியை பெற்றுக் கொடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிராமிய அமைப்புகளை நிறுவி சரியான தகவல்களை பெற்றுக் கொடுத்தல்.
- கடன் திட்டங்களை செயல்படுத்தல்.
- மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் பற்றி அறிவூட்டல்.
- நிலையான சுகாதார வசதிகளை ஏற்படுத்தல்.
- நீர் குழாய்களை சீரமைத்தலும், புதிய நீர் தாங்கிகளை பெற்றுக் கொடுத்தலும்.
- அடையாள அட்டை உட்பட அனைத்து ஆவணங்களையும் வழங்குதல்.
- நிரந்தர பாடசாலைகளை அமைத்தல்.
- சுகாதார வசதிகளை பெற்றுக் கொடுத்தல்.
- அனர்த்த நிவாரணி பற்றிய அறிவூட்டல்.
- கரையோர பாதுகாப்பு
- கரையோர பிதேசங்களில் இருந்த மக்களுக்கு கிராமங்களில் வீடமைத்து கொடுத்தல்.

சுனாமி பேரலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியவர்கள் யார்?

- கிராம மட்டத்தில் உள்ள மக்கள்
- பன்சலையில் உள்ள பிக்குமார் } 3 – 4 நாட்களுக்குள்
- ஆலயங்களில் உள்ள குருமார்கள்
- பாடசாலைகளை பெற்றுக் கொடுத்தது மூலம் பாடசாலை அதிபர்கள் உட்பட சக ஊழியர்கள்.
- உறவினர்கள்
- அயலார்கள்
- வைத்தியர்களும் வைத்தியசாலை ஊழியர்களும்.
- வாகன உரிமையாளர்கள்
- பல இனத்தோர், பல மதத்தோர் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள்
- சமூக குழுக்கள்
- அரச சார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச நிறுவனங்களும்
- போலிஸ் மற்றும் முப்படையினர்

சுனாமி பேரலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் உதவியது ஏன்?

- மனிதாபிமானம் காரணமாக
- கடமையாக
- உறவினர்கள் என்றபடியால்
- அயலார் என்றபடியால்
- நண்பர்கள் என்றபடியால்
- பொறுப்பாக இருந்தபடியால்
- விருந்தோம்பல் பண்பு இருந்தமையால்
- கருணையினால்
- சமய கொள்கையினால்
- தேவையை கண்டபடியால்
- எமது எனும் உணர்வினால்
- தைரியத்தை பெற்றுக் கொடுப்பதற்காக
- துக்கத்தை பகிர்ந்து கொள்வதற்காக
- தனிமைப்படவில்லையென்பதை உணர்த்துவதற்கு
- ஒற்றுமைக்காக
- சாதி பேதங்களை நினையாததால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காக
- நோய்கள் பரவாமல் இருப்பதற்காக
- அழிவை குறைப்பதற்காக
- நல்லுறவை வளர்த்துக் கொள்வதற்கு
- புண்ணியத்திற்காக
- இந்நிகழ்வு உருக்கமாக இதயத்திற்கு தெரிந்ததால்
- இவ்வாறு எங்களுக்கும் நடக்கலாம் என்று நினைத்தபடியால்
- மனிதத்துவத்தின் மதிப்பை தெரிந்தபடியால்
- நாம் இலங்கையர் என்றபடியால்
- மனிதர்களின் தேவையைப் புரிந்து கொண்டபடியால்
- அரசின் பொறுப்பு என்றபடியால்

அமர்வு 2:

சுனாமியால், யுத்தத்தால் மற்றும் அனர்த்தங்களினால் இளம் பெண்ணாக / பெண்ணாக / சமூகமாக முகம்கொடுக்க நேரிட்ட ஆபத்தான நிலமைகள்

இது தொடர்பான பங்கேற்பாளர்களின் பகுப்பாய்வு வருமாறு:

- பல்வேறுப்பட்ட துஷ்பிரயோகங்களுக்கு உட்படுதல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுதல்
- பெற்றோரை இழந்ததால் அரவணைப்பு மற்றும் பாதுபாப்பை இழத்தல்
- வீட்டு பணிப்பெண்ணாக வேலை செய்ய நேரிடல்
- சாதி, மத, குல அடிப்படையில் பிரிந்து தனியாக இருத்தல்
- பெற்றோரின் அரவணைப்பை இழந்ததால் பொருந்தாத திருமணங்கள் நடத்தல்
- குறைந்த வயதிலேயே குடும்ப பாரத்தை சுமத்தல்
- குறைந்த வயதில் திருமணம் முடிப்பதால் இறந்தே பிறக்கும் குழந்தைகளும் கருச்சிதைவுகளும் அதிகரித்தல்
- பெரியோர்களுக்கு தெரியாமல் திருமணம் முடிப்பதால் சில மாதங்களில் திருமணம் முறிந்து போதல்
- கல்வி பாதிப்படைதல்
- போட்டி பரீட்சைகளுக்கு முகம்கொடுப்பதற்கான தெளிவான மனநிலை அற்றுப் போதல்
- சுனாமியாலும் யுத்தத்தாலும் இளைஞர்கள் குறைவடைந்ததால் யுவதிகள் திருமணம் முடிப்பதற்கான வாய்ப்புகள் குறைதல்
- பெற்றோரின் அரவணைப்பு இல்லாத பெண் குழந்தைகள் பூப்பெய்தும் போது அநாதரவற்ற நிலை ஏற்படல்
- குழந்தைகளின் எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற நிலை
- வயதிற்கு தகாத பொறுப்புகளை சுமக்க நேரிடல்
- பல துஷ்பிரயோகங்களுக்கு உட்படுவதால் பாலியல் நோய்களுக்கு உட்படல்
- முகாம்களுக்குள் தனித்துவத்திற்கான (சுகாதார வசதிகள்) வசதிகள் இல்லாமை
- பல்வேறு உதவியாளர்கள் எதிரில் போய் நிற்க நேரிடுதல்
- பெரியோர்கள் இல்லாததால் வீடு வாங்கும் போது பிரச்சினைகளுக்கு உட்படல்
- தாய் இறந்ததால் தந்தையின் தேவையை பூர்த்தி செய்ய நேரிடல்
- முகாம்களில் வாழுதல் மற்றும் கல்வி சான்றிதழ்கள் இல்லாததால் வேலை வாய்ப்பை பெறும்போது பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடல்
- நிச்சயக்கப்பட்ட திருமணங்கள் இடைநிறுத்தப்படல்
- சமூகத்தின் அங்கீகாரம் கிடைக்காமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தாலும், சுனாமியாலும், ஏனை அனர்த்தங்களாலும் சமூகம் என்ற ரீதியில் முகம்கொடுக்கும் பிரச்சினைகள்

- பயம், பீதி, பாதுகாப்பற்ற நிலை
- சொத்துகள் அழிவடைதல்
- குடும்பங்கள் சீரழிதல்
- போக்குவரத்து வசதிகள் அழிவடைதல்
- ஊடக தொடர்புகள் தடைப்படல்
- சூழல் மாசடைதல்
- வீடுகளை இழத்தல்
- பாதுகாப்பை இழத்தல்
- தன்மானத்தை இழத்தல்
- அயலவர்கள், உறவுகளை இழத்தல்
- சுகாதார பிரச்சினைகள் ஏற்படல்
- சுத்தமான நீரை இழத்தல்
- தனித்துவத்தை இழத்தல்
- பல பிரதேசங்களில் பல இனங்களோடு முகாம்களில் தங்க நேரிடல்
- உணவு பற்றாக்குறை ஏற்படல்
- ஒருவரில் தங்கியிருக்கும் நிலை எற்படல்
- தொழில்களுக்கு செல்ல முடியாமை
- முகாமிற்கு பொருப்பான அதிகாரிக்கும் பொலிஸாருக்கும் கீழே வாழ நேரிடல்
- வீட்டு சுயதொழில்கள் அற்றுப்போதல்
- முகாம்களுக்குள் இடங்கள் வரையறுக்கப்படல்
- முக்கிய கடித கோவைகளை இழத்தல்
- குழந்தைகளின் தேவைகளை பெற்றுக்கொடுக்க முடியாமை (விளையாட்டு, சுதந்திரமாக பயணித்தல், உணவு)
- பண்பாடு சீர்கெடல்.

அமர்வு 3:

தேசிய ஒற்றுமையை உருவாக்கும்போது பெண்கள் முகம்கொடுக்கும் சவால்களை இனங்காணல்

முக்கியமான கேள்விகள் - பின்வரும் முக்கியமான கேள்விகள் பங்கேற்பாளர்களிடம் முன்வைக்கப்பட்டன:

நீங்கள் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு வீட்டுக்குள் முடங்கிக் கிடக்க விரும்புகிறீர்களா? அல்லது ஒரு பெண் என்ற முறையில் சமூக மேம்பாட்டுக்கான உங்கள் பங்களிப்பை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றீர்களா? நீங்கள் ஒரு சிறந்த அயலவராக எவ்வாறு மாற்றமடைய முடியும்? ஒரு பெண் என்ற முறையில் நான் சமூகத்தில் எந்த இடத்தில் இருக்கின்றேன்? பொறுப்புள்ள ஒரு தலைவி என்ற முறையில் நான் எந்த இடத்தில் இருக்கின்றேன்? இந்த வகிபாத்திரங்களை என்னால் சமநிலையில் வைத்திருக்க முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி: நான் யார்? எனது அடையாளம் என்ன?



பங்குபற்றுனர்கள் தமது பண்முக அடையாளங்களை அறிந்து கொள்வதற்கு இப்பயிற்சி கொடுக்கப்பட்டது. மேலுள்ள தகவல்களின்படி தமது பொறுப்புகளை இனங்காணுவதற்கு இரண்டாவது சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பொறுப்புகளை செயற்படுத்தும் போது முகங்கொடுக்க நேரிடும் சவால்களைத் தெரிந்து கொள்வதற்காக மூன்றாவது சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இவைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால் பொறுப்புகள் கூடும் சந்தர்ப்பங்களில் நாம் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றோம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சமநிலை அற்றுப் போகிறது. சமநிலை அற்றுப்போவது என்பது நாம் இடைஞ்சல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் உள்ளாவதாகும். சமநிலையை பாதுகாக்க வேண்டியது சமூக தலைவிகளான எங்கள் பொறுப்பு என்று விளக்கப்பட்டது. சமநிலை பாதுகாக்கப்படாமை பிரச்சினையை அதிகரித்துக் கொள்ளல் ஆகும்.

பெண் என்ற ரீதியில் சமூகத்தில் நான் இருப்பது எங்கே? தலைமைத்துவம் உள்ள பெண்ணாக, பொறுப்புகள் உள்ள பெண்ணாக நான் இன்று இருப்பது எங்கே? குடும்பத்தினுள், சமூகத்தினுள் எனது நிலையை தேடிப் பார்ப்பது மிக முக்கியமாகும். அதனூடாகவே நீங்கள் வெற்றி காண முடியும்.

மேற்கூறப்பட்ட விடயங்களுக்குப் பின்னர் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களுக்காக வெவ்வேறாக நேரம் ஒதுக்கப்பட்டு, பங்குபற்றுனர்கள் குழுப் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

<u>உதாரணம்</u>

பெண்கள் வகிக்க வேண்டியிருக்கும் பாத்திரங்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் சவால்கள் என்பன குறித்து பங்கேற்பாளர் ஒருவர் முன்வைத்த ஓர் உதாரணம் கீழே தரப்பட்டுள்ளது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.ஜீ லலிதா மாலினி

"எனது அடையாளத்தைப் புரிந்து கொள்ளல்"

- பெண்
- குடும்பத்தலைவி
- மனைவி
- தாய்
- உதவி செய்பவர்
- அயலவர்
- சகோதரி
- நண்பி
- உறவினர்
- சமூக தலைவி
- சமூக சேவகி
- மற்றவர்களுக்கு உதவுபவள்
- அமைப்பின் தலைவி

பெண் என்ற வகையில் :-

சமூகத்திற்கு பயனுள்ள பெண்ணாக இருப்பதற்கான பொறுப்பு எனக்கு உள்ளதுடன், அதை பற்றி எனக்கு எந்த வித சவாலும் இல்லை.

குடும்பத் தலைவியாக :-

பெண்மணியாக எனக்கு நிறைய வேலைகள் இருப்பதுடன், நேரத்தை முகாமைத்துவப்படுத்தினால் அவை அனைத்தையும் செய்ய முடியம். என் கணவர் கிராமத்தில் இருந்து தொலைவில் வேலை புரிவதால் அனைத்து வேலைகளும் என் பொறுப்பாக இருப்பது எனக்கு ஒரு சவாலாகும்.

மனைவியாக :-

கணவனுக்கு கீழ்படிந்த அன்பான கருணைமிக்க மனைவியாக அவரின் வேலைகளுக்கு ஒத்துழைப்பதே என் பொறுப்பாகும். இதில் எனக்கு எந்தவித சவாலும் இல்லை.

தாயாக :-

தாய் என்ற ரீதியில் எனக்கு பாரிய பொறுப்பு உண்டு. பிள்ளைகளை நல்வழியில் கொண்டு செல்லல், உணவு, உடை தயாரித்தல், கல்வி வழங்குதல், சமூக கலாச்சார பண்பாடுகளை பின்பற்ற வைத்தல் மற்றும் சிறந்த பிரஜைகளாக உருவாக்குதல். இதில் தற்போது சமூகத்தில் உள்ள பல தீய விடயங்களில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு அவர்களுடன் இருக்க வேண்டியுள்ளமை எனக்கு சவாலாக இருக்கின்றது.

அயலாராக :-

நான் என் அயலாருக்கு பல உதவிகளை செய்து வருகிறேன். கல்வி அறிவு இல்லாதோரின் தயாரிப்பதற்கு உதவுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரியாக :-

சகோதரியாக அவர்களின் சுக துக்கங்களை விசாரித்து, பங்கெடுத்து உதவி செய்கிறேன். அவர்கள் வதிவிடம் அதிக தொலைவில் உள்ளமை எனக்கு ஒரு சவாலாக உள்ளது.

நண்பியாக உறவினராக:-

நண்பியாக உறவினராக அவர்களின் சுக துக்கங்களை விசாரித்தல், உதவி செய்தல் என் கடமையாகும். இதில் எனக்கு எந்தவித சவாலும் இல்லை.

சமூகத் தலைவியாக :-

சமூகத் தலைவியாக பெறுமதிமிக்க சேவையாற்ற எண்ணியுள்ளேன். சமூகத்தின் சூழலும் இந்த துறை பற்றிய அனுபவக் குறைவும் எனக்கு சவாலாக இருக்கின்றது

அமர்வு 4:

"தொடர்புகள் பழுதடையவும் சவால்கள் அதிகரிக்கவும் இந்த யுத்தம் மறைமுகமாக காரணமாக உள்ளதா?" என்ற விடயத்தைக் கலந்துரையாடுவதற்கு பங்குபற்றுனர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

போரின் விளைவுகள் என தாம் கருதும் விடயங்களை தெரிவிக்குமாறு பங்கேற்பாளர்களிடம் கேட்கப்பட்டது:

- சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுதல்
- பெற்றோர் பிள்ளைகளை இழக்க நேரிடல்
- பயம்
- பாதுகாப்பு சோதனைச் சாவடிகள் அதிகரித்தல் - நேரம் விரயமாதல்.
- பிள்ளைகள் பெற்றோரை இழத்தல்
- அநாதைகள்
- சந்தேகம்
- ஏமாற்றம்
- அவநம்பிக்கை
- பிழையான மனப்பாங்குகள்
- பெறுமதிகள் அழிவடைதல்
- வாழக்கை செலவு அதிகரித்தல்.
- வேலை வாய்ப்பு இல்லாமை
- விவசாய நடவடிக்கைகளின் வீழ்ச்சி
- ஆயுதங்களுக்கான செலவு அதிகரித்தல்.
- ஊழல்
- சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்தல்
- சிறுவர் போராளிகள் அதிகரித்தல்.
- அபிவிருத்திற்கான நேரம் விரயமாதல்.
- சுற்றுலா துறை பாதித்தல்
- படித்தவர்கள் நாட்டை விட்டுச் செல்லல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுய மரியாதையை இழக்க நேரிடுதல்.
- இடம்பெயர்ந்த மக்களின் முகாம்கள் அதிகரித்தல்

இந்தச் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு செயலமர்வு மூலம் கிடைத்த அறிவு

- சமூக சேவகியாக வேலை செய்யும் போது சமூகத்தில் உள்ளவர்களின் கருத்துகளுக்கு செவிமடுக்க பழகுதல்.
- அறிவை மேம்பாடுத்தி அதை சமூக சேவைக்காக பயன்படுத்தல்.
- பெண் என்ற ரீதியில் நமது கடமைகளை புரிந்து கொள்ளல்
- தற்போது நாம் செய்யும் சேவைகள் பற்றிய தெளிவை பெறல்.
- தலைமைத்துவத்தின் அடையாளங்களைப் புரிந்து கொள்ளல்.

போர் அல்லது அனர்த்தச் சூழலில் பெண் என்ற ரீதியில் சமூகத்திற்கு என்னால் என்ன செய்ய முடியும்?

- அனைவரையும் ஒன்று திரட்டல்
- திட்டமொன்றைத் தயாரித்துக் கொள்ளல்.
- குழு ஒன்றை அமைத்தல்.
- இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த குழுக்கள் ஊடாக ஒன்றுபடல்.
- விடயங்களை புரிய வைத்தல்.
- இன, மத, குல பேதங்களை மறந்து ஒற்றுமையை கட்டியெழுப்பல்.
- இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தல்.
- கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்தல்.
- அனர்த்த நேரங்களின் போது தேவைகளை பூர்த்தி செய்தல்.
- சுனாமியால் விபத்திற்குற்பட்ட போது பெண் என்ற ரீதியில் சாதி, மதம், குலம் என்ற பேதங்களை தவிர்த்து தேவைகளை நிறைவேற்றி வைத்தமை - அச்சந்தர்ப்பத்தில் சமாதானத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்.
- அது போலவே யுத்தத்தின் போதும் மனிதாபிமானத்துடன் செயற்படல்.
- மக்களின் பொருளாதார நிலமையை மேம்பாடு செய்ய உதவுதல்.
- பெண் என்ற ரீதியில் விபத்திற்குள்ளானவர்களை தேடிப் பார்த்து முடிந்த வரை உதவி செய்தல்.
- ஒவ்வொருவர் பற்றிய சரியான புரிந்துணர்வுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளல்.

<u>செயலமர்வின் முடிவில் பங்குபற்றுனர்களின் கருத்துக்கள்</u>

- சமூகத் தலைவி என்ற வகையில் அவதானிக்காத பல துறைகள் பற்றி அறிவை பெற்றுக் கொள்ள முடிந்தமை.
- சமூக வேலைகளின் போது நமது சமநிலை அற்றுப்போன சந்தர்ப்பங்கள் குறித்து மீண்டும் சிந்திக்க வாய்ப்பு கிடைத்தமை.
- "எனது அடையாளத்தை நானாகவே உருவாக்கிக்கொள்ள வேண்டும்:" என்பதை புரிந்து கொள்ள வாய்ப்பளித்தல்.
- யுத்தத்தால் மறைமுகமாக பாதிக்கப்படும் போது இந்த அளவிற்கு கஷ்டமாக இருந்தால், நேரடியாக பாதிக்கப்படுகிறவர்களின் நிலை எந்த அளவிற்கு துன்பகரமானது என்பதை பற்றி சிந்திக்க வைத்தமை.
- சமூகத்திற்காக, மக்களுக்காக நாம் மிகக் குறைந்த சேவையையே நிறைவேற்றியுள்ளோம் என்பதை புரிந்து கொண்டமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்குக் கிடைத்த பல சந்தரப்பங்களை நாம் தெரிந்தே புறக்கணித்துள்ளோம் என்பதை புரிந்து கொன்டமை.
- வேலைதிட்டத்தின் மூலம் பெற்றுக் கொண்ட அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பாங்கு மாற்றங்களுக்கு ஊடாக அமைப்பு என்ற வகையில் நாட்டிற்காக பரந்த அளவில் சேவையாற்ற முடியும் என்பதை புரிந்து கொண்டமை.

அமர்வு 5:

போர் மற்றும் சுனாமி சம்பந்தமான செயற்பாடுகள்

நோக்கங்கள்

அனர்த்தங்கள் என்பது எல்லோருக்கும் பொதுவானவை என்பதையும், அப்போது தேவைகளை நிறைவேற்றி வைப்பதன் முக்கியத்துவம் பற்றியும் புரிந்து கொள்வதற்கு இடமளித்தல்.

போர், சுனாமி மற்றும் அனர்த்த நிலைமைகளின் போது காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்ட பெண்கள் பெற்றுக் கொண்ட அனுபவத்தை பகிர்ந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. குழுக்களாக பிரிந்து குழு செயற்பாடாக அதனைச் செய்து காட்டினர்.

பங்கேற்பாளர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுக்குமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது:

- பெண்களாக முகம் கொடுக்கும் பிரச்சினைகள்.
- இளம் பெண்கள் என்ற ரீதியில் முகம் கொடுக்கும் பிரச்சினைகள்.
- சமூகமாக முகம் கொடுக்கும் பிரச்சினைகள்.

விடயங்களை அடையாளம் காண 30 நிமிடங்கள் வழங்கப்பட்டதுடன், ஒவ்வொரு குழுவும் முன்வைத்த கருத்துக்கள் கீழ்வருமாறு:

குழு 1: யுத்தத்தால் மற்றும் பல்வேறுபட்ட அனர்த்தங்களால் காலி, மாத்தறை களுத்துறை மாவட்ட பெண்கள் முகம் கொடுத்த பிரச்சினைகள்

- விதவையாதல்.
- வீடு சொத்துரிமையை இழத்தல்
- முகாம்களுக்குள் தேவையற்ற கருக்கட்டல் மற்றும் கருச்சிதைவு ஏற்படல்.
- முறையாக நன்கொடைகளை பகிர்ந்து கொடுக்காமை
- பெண்கள் மத்தியில் தங்கி வாழும் மனநிலை ஏற்படல்.
- சுனாமி உதவிகள் பெறும் போது பெண்களுக்கு ஏற்படும் தன்மான பிரச்சினைகள்.
- பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிகரிப்பினால் பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரித்தல்.
- கர்ப்பிணி மற்றும் வயோதிப பெண்களுக்கு தேவையான போஷாக்கு கிடைக்காமை.
- தற்காலிக பொது மலசல கூடங்களை பாவிக்க நேரிடுதல்.
- குறைந்த வசதிகளுடன் பெண்களை முகாம்களுக்குள் சமையல் செய்யுமாறு வற்புறுத்தல்.
- பெண்களிடம் உள்ள முன்வருவதற்கான பயம் மற்றும் அறியாமையினால் உதவிகள் கிடைக்காமை.
- சுயதொழில்களை இழந்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மீனவ தொழிலில் ஈடுபட்டிருந்த ஆண்கள் முகாம்களுக்குள் தங்க வேண்டியிருந்ததால் பொருளாதார பிரச்சினை மத்தியில் பெண்களை துன்புறுத்தல்.
- ஆண், பெண் மற்றும் பிள்ளைகள் ஒரே அறையில் தூங்க வேண்டியுள்ளதால் ஆண்களின் பாலியல் தேவைகளை பூர்த்தி செய்துக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களின் போது பெண்களை துன்புறுத்துகின்றனர். எனவே, பிள்ளைகளை பாதுகாப்பற்ற வீடுகளில் தங்க வைப்பதனால் பெண்களின் மனநிலை பாதிப்படைதல்.
- பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாத பெண்கள் வெளிநாடு செல்லல்.
- பிள்ளைகளையோ அல்லது கணவனையோ இழந்த பெண்கள் மீண்டும் நாடு திரும்புவதால் பொருளாதார பிரச்சினை இன்னும் அதிகரித்தல்.
- நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் இழப்பினால் ஏற்படும் கடும் துயரம்
- கணவன் இறந்ததால் சொத்துப் பிரச்சினை ஏற்படல்.
- சுகாதார வசதிகள் கிடைக்காமை.
- முகாம்களுக்குள் வாழ்கின்றவர்களை சமுதாயம் ஏற்றுக் கொள்ளாமை
- போதை பொருட்களுக்கு அடிமையாதல். திருடர்கள் உருவாகுதல்.
- கணவரை இழந்தமையால் விபச்சாரத்தை தொழிலாக செய்தல்.
- வயது எல்லையின்றி பல துஷ்பிரயோகங்களுக்கு உட்படல்.
- சண்டை, சச்சரவு அதிகரித்தல்
- கிராம அதிகாரிகளின் அழுத்தங்களினால் உதவிகளை இழத்தல்.
- அரச மற்றும் தனியார் பிரிவுகளில் தொழில் வாய்ப்பு பெறும்போது முகாம்களில் இருப்பவர்களை குறைத்து மதிப்பிடல்.
- இன்னொருவர் மீது தங்கி வாழும் நிலை ஏற்படல்
- போரினால் ஊனமுற்றோர் அதிகரித்தல்.
- காணாமற்போன கணவன்மார் வரும் வரை காத்திருக்க வேண்டியமை.

குழு 2: சுனாமி, போர் மற்றும் ஏனைய அனர்த்த நிலைமைகளின் போது இளம் பெண்கள் என்ற ரீதியில் முகம் கொடுக்கும் பிரச்சினைகள்

- பாலியல் துன்புறுத்தல்கள்
- பெற்றோரை இழந்ததால் பாதுகாப்பற்ற தன்மை
- வீட்டு வேலைக்கு அமர்த்தல்
- பெற்றோரை இழந்து பாதுகாப்பற்ற தன்மையால் குறைந்த வயதில் திருமணம் முடித்தல்
- குடும்ப பாரத்தை பொறுப்பேற்றல்
- பெரியோரின் ஆலோசனையின்றி திருமணம் செய்வதால் குறுகிய காலத்திற்குள் திருமணம் முறிவடைதல்
- கல்வி சீர்குலைதல்
- யுத்தத்தாலும் சுனாமியாலும் இளைஞர்கள் குறைந்ததால் திருமணம் முடிக்க இளைஞர்கள் இல்லாமை.
- பெற்றோரை இழந்து பாதுகாப்பற்ற தன்மையில் பூப்பெய்தலின் போது ஏற்படும் பிரச்சினைகள்.
- எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற நிலை
- சிறு வயதிலேயே குடும்பத்தை பொறுப்பேற்கும் நிலை ஏற்படல்
- பல்வேறுப்பட்ட தொடர்புகளால் பாலியல் நோய்கள் ஏற்படல்.
- முகாம்களுக்குள் தனித்துவம் விலகிப்போதல் (சுகாதார வசதிகளின்றி)
- வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு தாமே செல்ல வேண்டிய நிலை
- பெற்றோர் இல்லாத காரணத்தால் வீட்டுரிமை பெறும் போது வரும் பிரச்சனைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தாயின் மரணம் காரணத்தினால் தந்தையின் தேவைகளை நிறைவேற்றும் நிலை ஏற்படல்
- முகாம்களுக்குள் சான்றிதழ்கள் தொலைந்த காரணத்தால் தொழில் வாய்ப்பு கிடைக்காமை.
- சமூகத்தால் ஒதுக்கப்படல்

குழு 3: போர், சுனாமி மற்றும் ஏனைய அனர்த்த நிலைமைகளின் போது சமூகமாக முகம்கொடுக்கும் பிரச்சினைகள்

- பயம்
- வீடு மற்றும் காணி இழத்தல், சுய தொழில்கள் பாதிப்படைதல்.
- குடும்பங்கள் சீரழிதல். அயலார், உறவினர்களை இழத்தல்.
- போக்குவரத்து வசதியின் சீர்குலைவு
- தொடர்பாடல் முறிவடைதல்
- சூழல் மாசடைதல்
- பாதுகாப்பு இன்மை
- தன்மானப் பிரச்சினை
- சுகாதார பிரச்சினை அதிகரித்தல், சுத்தமான குடி நீர் இல்லாமை
- அந்தரங்க நிலையைப் பேண முடியாமை
- பல்வேறுபட்ட ஆட்களுடன் ஒன்றாக தங்க நேரிடல்.
- உணவு பற்றாக்குறை
- தங்கி வாழ்வோர் அதிகரித்தல்
- முகாம்களில் இடவசதி பற்றாக்குறை
- முகாம் அதிகாரி அல்லது பாதுகாப்பு அதிகாரியின் கீழ் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படல்.
- தனிப்பட்ட ஆவனங்களின் இழப்பு
- குழந்தைகளுக்கு விளையாட இடம் கிடைக்காமை
- பண்பாடு சீர்கெடுதல்.

6. கூட்டணி மற்றும் வலையமைப்பு உருவாக்கம் தொடர்பான செயலமர்வு: ஒரு நாள் அமர்வு

திகதி 2008.10.25 - ஹிக்கடுவை

காலி, மாத்தறை மற்றும் கலுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் ஐந்து உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்து முதல் தடவையாக தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன், ஒரு தோழமையுணர்வைக் கட்டியெழுப்பி, எதிர்கால நடவடிக்கைகளுக்கான திட்டமொன்றையும் தயாரித்தார்கள்.

வளப் பகிர்வாளர் - திருமதி விசாகா தர்மதாச

ஒரு குறுகிய கலந்துரையாடலின் பின்னர் பங்கேற்பாளர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பின்வரும் முக்கியமான கேள்விகள் அவர்களிடம் முன்வைக்கப்பட்டன:

பெண்கள் என்ற முறையில் அதனை ஒரு மாற்று அடிப்படையில் நோக்க முடியாதா? அப்படியானால் நாங்கள் என்ன செய்ய முடியும்? போர் நிலைமையை விருத்தி செய்வதற்கும், பொது மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் ஒரு சமூகத் தலைவி என்ற முறையில் உங்களால் என்ன செய்ய முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் என்ற முறையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும், தேசிய ஒற்றுமையை உருவாக்குவதற்கும் என்னால் என்ன செய்ய முடியும்?

முதல் குழு

- மக்களை ஒன்றுதிரட்டல் .
- கிராம மட்டத்தில் நம்முடன் இருக்கும் ஏனைய இனத்தவர்களுடன் ஒற்றுமையாக செயற்படல்.
- தத்தமது கலாச்சாரங்கள், மதம் பற்றிய அறிவை பெற்றுக்கொள்ளலும் அறிவூட்டலும்
- சுனாமியின் போன்று எந்த ஒரு ஆபத்துகளிலும் இன,மத ,குல பேதங்களை தவிர்த்து ஒற்றுமையாக செயற்படல்
- கல்வி மட்டத்தை அபிவிருத்தி செய்தல்
- ஒவ்வொருவரிடமும் சரியான புரிந்துணர்வை ஏற்படுத்தல்.
- சமூக நிலையை ஏற்படுத்தல்.
- யுத்தத்திற்காக செலவிடும் பணத்தை நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடல்.
- பொருளாதாரத்தை கட்டியெழுப்பல்
- அனைத்து மொழிகளையும் கற்றுக் கொள்ளல்.
- தகவல்களை தேடிப் பார்த்தல்
- தகவல்களை பகுப்பாய்வு செய்தல்
- திட்டமிட உதவி செய்தல்
- நம்பிக்கையை நிலைநாட்டல்
- உபாயங்களை இனங்காணுதல்
- தீர்மானம் எடுக்கும் மட்டங்களுக்கு அழுத்தத்தைக் கொடுத்தல்

இரண்டாம் குழு

- தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல்
- குழுவொன்றை உருவாக்கல்
- திட்டமொன்றை தயாரித்துக் கொள்ளல்
- அனைவருக்கும் செவிமடுத்தல்
- இனங்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்க்க குழுக்களாக ஒன்றிணைதல்
- இனங்களுக்கிடையில் தொடர்புகளை வளர்த்துக்கொள்ளல்
- கல்வி மட்டத்தை அபிவிருத்தி செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆபத்து என்று அறிந்தவுடன் அனைத்துத் தேவைகளையும் பெற்றுக் கொடுத்தல்
- அதை போல யுத்தத்திலும் மனிதாபிமானத்துடன் செயல்படல்.
- சமூகத்தின் மத்தியில் அவர்கள் இருக்கும் நிலையில் இருந்து மீள உதவி செய்தல்.
- பெண்கள் என்ற ரீதியில் விபத்துக்குள்ளானவர்களை முடிந்த வரை தேடிப் பார்த்தல்.
- அவர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதும் அவர்களுக்கு அறிவூட்டலும்.

மூன்றாம் குழு

- துக்கத்தை பகிர்ந்து கொள்ளல்.
- துக்கத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளல்.
- இனங்களுக்கிடையே உள்ள மாற்றங்களை இனம்காணல்.
- ஒருவருக்கொருவர் பிரியமாக இருத்தல்
- எல்லா மதங்களையும் மதித்தல்
- பயன்படுத்தப்படும் மொழிகள் குறித்த குறைந்தபட்ச அறிவு சமூக சேவைக்குப் பயனுள்ளதாக இருக்கும்.
- சகவாழ்வுக்கு உதவுதல்
- எமது எனும் உணர்வில் செயற்படல்
- எல்லா இனங்களையும் சமமாக மதித்து ஆபத்து நேரங்களில பாதுகாப்பு, உணவு,உடை வதிவிட வசதிகளை பெற்று கொடுத்து, தேவையான இடங்களுக்கு தெரிவிப்பதற்கு செயற்படல்
- இனங்களின் அடிப்படையில் மக்களை கட்சிகளில் வகைப்படுத்தாமை
- முடிந்தவரை மக்கள் மற்றவர்களின் மத, கலாச்சார விழுமியங்களை மதித்து வாழ்வதற்கான ஆலோசனைச் சேவையை பெற்றுக் கொடுத்தல்

<u>அன்றைய தின முடிவில் வலையமைப்பு உருவாக்கல் செயலமர்வு தொடர்பாக பங்கேற்றவர்கள் தெரிவித்த கருத்துக்கள்</u>

- நாளுக்கு நாள் புதிய விடயங்களை கற்க சந்தர்ப்பம் கிடைத்தது
- விசேடமாக பெண்களின் பொறுப்புகளை வீட்டுக்கு மாத்திரம் வரையறை செய்வது சமூகத்திற்கு நாம் இழைக்கும் அநீதி என்பதை புரிந்து கொள்ளல்
- பெண் என்ற ரீதியில் உறுதியாக செயற்படுவதற்கான மனநிலையை உருவாக்கிக் கொள்ளல்
- திறமைகளை வளர்த்துக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தமை
- குறித்த தகவல்களை தொடர்ச்சியாக திரட்ட வேண்டுமென்பதை புரிந்து கொள்ளல்
- பல அமைப்புகளில் உள்ளவர்களை சந்தித்து கருத்துக்களையும், அனுபவங்களையும் பரிமாறிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தமை
- விரிவுரைகள் காலத்திற்கேற்ப மிக முக்கியமானதாக இருந்தமை
- பெண் என்ற ரீதியில் இதுவரை கருத்தில் எடுக்காத பல விடயங்களையும் பக்கங்களையும் பற்றிய ஆர்வம் ஏற்பட்டமை
- இத்தினத்தை சந்தோசமாகவும் பயனுள்ளதாகவும் கழிப்பதற்கு முடிந்தமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கருத்துப் பரிமாற்றத்துக்கான பயணங்கள் - புத்தளம், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்கள்

மாத்தறை, காலி, களுத்துறை மாவட்டங்களிலிருந்து (ஆறு அமைப்புகளிலிருந்து) பங்குபற்றிய 55 பெண்களுக்கு இரண்டு நாள் வீதம் மூன்று சந்தர்ப்பங்களின் போது மூன்று செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இதனூடாக கொள்கை ரீதியிலான அறிவை பெற்றுக் கொடுத்தலும், அனுபவ பரிமாற்றத்திற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

மோதலினால் பாதிக்கப்பட்ட புத்தளம், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பெண்களின் நேரடி அனுபவங்களைத் தெரிந்து கொள்வதற்கு இப்பயணங்களின் மூலம் தென்னிலங்கைப் பெண்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது.

நடைமுறை அனுபவத்தை பரிமாற்றம் செய்வதற்காக மேற்கூறப்பட்ட மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த பங்கேற்பாளர்கள் குழுக்களாக கருத்துப் பரிமாற்றப் பயணங்களில் (ஆறு பயணங்கள்) அழைத்துச் செல்லப்பட்டனர்.

நோக்கங்கள்

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் அடிமட்டத்தைச் சேர்ந்த பெண்கள் கொண்டிருக்கும் ஆற்றல்களைக் கண்டறிவதற்காக இப்பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. தென்னிலங்கையின் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த சாதாரண பெண்கள் போர் இடம்பெற்று வரும் பிரதேசங்களைச் சேர்ந்த அடிமட்டப் பெண்கள் அனுபவித்து வரும் பிரச்சினைகளை நேரடியாகக் கண்டறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு இதன் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதே போல இடம்பெயர்ந்த மக்களை ஏற்று, அவர்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் புத்தளப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது. இத்தகைய நெருக்கடிகளை இப்பெண்கள் எவ்வாறு எதிர்கொண்டார்கள்? மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை அவர்கள் எவ்வாறு தேடிக் கொண்டார்கள்? என்பது குறித்தும் இப்பயணங்களின் போது தென்னிலங்கைப் பெண்கள் ஒரு புரிந்துணர்வைப் பெற்றுக் கொண்டார்கள்.

பயணம் 1

புத்தளம் மாவட்டம்

2008.11.01 திகதி காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்த 12 பெண்களும், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பைச் சேர்ந்த 04 பேரும், பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அவைகளுக்கான தீர்வுகளை வெற்றிகரமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட பிரஜா திரிய மன்றத்தின் பெண்களை சந்திப்பதற்காகச் சென்றார்கள். அங்கே அந்த நிறுவனத்தின் தலைவியான திருமதி இந்திராணி குசுமலதா அனைவரையும் அன்புடன் வரவேற்றார். பிரஜா திரிய மன்றம் என்பது சுமார் 2000 சிங்கள, தமிழ் முஸ்லிம் பெண்கள் உள்ள மிக வலுவான பெண்கள் அமைப்பாகும்.

இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் இல்லாத பல பிரச்சினைகளை கொண்ட புத்தளம் மாவட்டத்துக்கு 1990 ஆண்டுகளில் யாழ்ப்பாணத்திலிருந்து 90,000 திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து வந்தனர். அப்போது அங்கு நிலவிய அதிகூடிய வறுமையின் காரணமாக வீட்டுப் பிரச்சினை அதிகரித்ததுடன், சமூக பிரச்சினைகள், கலாச்சார சீர்கேடுகள் மட்டுமன்றி பெண்களுக்கு எதிரான மிக மோசமான பாலியல் துஷ்பிரயோகங்களும் அதன் காரணமாக ஏற்படும் நோய்களும் அதிகரித்தன. ஆட்களை விற்பனை செய்தலும் இங்கு அதிகமாக காணப்படுகிறது. சட்டவிரோத ஆயுத பாவனை புத்தளத்தில் காணக்கூடிய இன்னுமொரு தீவிரப் பிரச்சினையாகும். அதன் காரணமாக பிரஜா திரிய மன்றத்தினர் பெண்கள் பிரச்சினைகளுகளுக்கு தம்மால் முடிந்த தீர்வுகளைக் காண முயற்சிக்கிறார்கள்.

திருமதி விசாகா தர்மதாச இந்த வேலைத்திட்டத்தின் நோக்கத்தை விளக்கினார். காலி, மாத்தறை, களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்த பெண்களுடன் எட்டு மாத காலமாக நடைமுறைப்படுத்திய இந்த வேலைதிட்டத்தின் இறுதிக் கட்டமாக அனுபவங்களை பரிமாறிக் கொள்வதற்காக இவர்களை சந்திக்க வந்ததாக கூறினார்.

அமர்வு 1 -
சுனாமியால் தென் பிரதேசப் பெண்கள் அடைந்த பாதிப்புக்களையும், யுத்தத்தால் புத்தளத்தின் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளையும் பற்றிய அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்காக வளப் பகிர்வாளர் பங்குபற்றியவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்தார்.

பயிற்சி :- யுத்தத்தாலும் சுனாமியாலும் தெற்கு மற்றும் வட மேற்கு பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை இனங்காணல்.

குழு சமர்ப்பணங்கள்

யுத்தத்தால் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள்

- யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் புத்தளத்தில் முகாமிடல். (யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் பிரதேச மக்கள்)
- காணிப் பிரச்சினைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொழில் வாய்ப்பு குறைவடைதல்.
- வெளியில் இருந்து வந்தவர்கள் குறைந்த ஊதியத்திற்கு கூலி வேலை செய்வதால் பொருளாதார பிரச்சினை ஏற்படல்.
- கல்வி வசதிகள் இல்லாமை.
- கணவன்மார் பெண்களை குடும்பத்துடன் கைவிடல்.
- பாலியல் துன்புறுத்தல்.
- சிறு பராயத்திலேயே பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படல்.
- சுகாதார பிரச்சினைகள் ஏற்படல்.
- HIV எயிட்ஸ் நோயாளர்கள் அதிகரித்தல்.
- கிராம மட்டங்களில் விபச்சாரத் தொழில்.
- குடி நீர், வீடு,கல்வி, மற்றும் மின்சார வசதிகள் போதாமை.
- விதவைகள் அதிகரித்தல்.
- அநாதை குழந்தைகள் அதிகரித்தல்.
- பாதுகாப்பை இழத்தல்.
- முகாம்கள் அதிகரித்தல்.
- பெண்கள் துஷ்பிரயோகம் அதிகரித்தல்.
- அநாவசியமான கருத்தரிப்புகள் அதிகரித்தல்.

வளப்பகிர்வாளர் சுனாமியை சித்தரிக்கும் பாத்திரமேற்று நடித்தலை செய்வதற்காக காலி, மாத்தறை, களுத்துறை மாவட்ட பெண்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்தார்.

<u>பயணம் 2</u>

<u>திருகோணமலை</u>

2008.11.07 ஆம் திகதி தெற்கு பெண்கள் 12 பேரும் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் அமைப்பைச் சேர்ந்த 4 பேரும் அடுத்த நாள் கந்தளாயிலுள்ள சிங்கள தமிழ் முஸ்லிம் கிராமிய பெண்கள் அமைப்பின் அங்கத்தவர்களை சந்தித்து, தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்காக திருகோணமலையை நோக்கி சென்றனர். திருக்கோணமலையை அண்மிக்கும்போது மாலை நான்கு மணியாகிவிட்டதால் இலங்கையின் பௌத்த வரலாற்றில் மிக முக்கியமானதும், சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு உதவும் காரணிகளைக் கொண்டதுமான திருகோணமலை வெல்கம பழைமை வாய்ந்த விகாரையை பார்வையிடச் சென்றனர். இந்த விகாரையில் மிக விசேடமானது இங்கு பௌத்த கல்வெட்டுக்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளமையே. அக்காலத்தில் சிங்கள பௌத்த மக்கள் மட்டுமல்ல தமிழ் பௌத்த மக்களும் திருகோணமலையை அண்மித்து வசித்து வந்துள்ளார்கள் என்பதனை இது தெளிவுப்படுத்துகின்றது.

மறுநாள் 2008.11.08 ஆம் திகதி கந்தளாய் சிங்கள, தமிழ், முஸ்லிம் கிராமிய பெண்கள் அமைப்பின் அங்கத்தவர்களுடன் சந்திப்பு இடம்பெற்றது. இந்த அமைப்பு நுவரெலியாவில் இருக்கும் பிரதான அமைப்பின் கிளையாகும். கந்தளாய் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசமாகும். இங்கு வாழும் மக்களில் அதிகமானோர் விவசாயத்தை தமது வாழ்வாதாரமாக கொண்டு இருப்பதோடு முற்காலத்தில் இருந்து தண்ணீர் சம்பந்தமாக இருந்த மோதல் நிலை தற்போது நிகழும் இனவாத பிரச்சினைக்கும் ஒரு காரணமாக அமைந்தது. இலங்கையின் நீண்ட கங்கை கடலோடு சங்கமிக்கும் இடம் அங்கிருந்த போதிலும், மேல்மட்டத்தில் நல்ல விதமாக தீர்மானம் எடுக்காதபடியால் ஒழுங்கான நீர் விநியோகத் திட்டம் இல்லாமல் இனப்பிரச்சினைக்கு இது காரணமாக அமைந்தது. மூன்று தசாப்த காலமாக நடைபெறும் இந்த யுத்தம் காரணமாக மானிட மற்றும் ஏனைய வளங்கள் அழிக்கப்பட்டதுடன், வாழ்வாதாரங்கள், கல்வி நிலை போன்றவையும் ஸ்தம்பித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

. ைலயை அடைந்தன. ஆனாலும், கந்தளாய் பெண்கள் இந்த பல்வேறு சவால்கள் மத்தியிலும் சமாதானத்திற்காக பாரிய சேவையாற்றுகின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின் அமைப்பின் தலைவியான திருமதி விசாகா தர்மதாச அவர்களுடன் காலி, மாத்தறை, களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்த 10 பெண்களும், வளப் பகிர்வாளர்களாக பங்குபற்றிய திருமதி திலகாவும், திருமதி U.M.G. சந்திராவும் அன்று மு.ப. 9.00 மணியளவில் இடம்பெற்ற சந்திப்பில் பங்குபற்றினர். அச்சந்தர்ப்பத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் கிராமிய பெண்கள் அமைப்பின் அங்கத்தவர்களும் வந்திருந்தார்கள்.

திருமதி விசாகா தர்மதாச இந்த வேலைத்திட்டத்தின் நோக்கத்தை விளக்கினார். கந்தளாய் பிரதேசம் இந்த வேலைத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டதன் காரணம் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் இந்தப் பிரதேசத்தில் வசித்து வருவதும், இங்குள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் எவ்வாறு ஒருங்கிணைந்து செயல்படுகின்றனர் என்பதை தெற்கு மக்களுக்கு காட்டுவதற்குமே என்று கூறினார். அவரின் பேச்சு முடிவில் சிங்கள, தமிழ், முஸ்லிம் கிராமிய பெண்கள் அமைப்பின் இணைப்பாளராக செயலாற்றும் திருமதி வயலட் யுத்தத்தால் பட்ட அனுபவங்களை விவரித்ததுடன், தெற்கில் இருந்து இங்கு வந்த பெண்களுக்கு தனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்தார

அடுத்ததாக வளப் பகிர்வாளரான திருமதி திலகா தெற்கில் இருந்து வந்தவர்களை நீண்டகால நண்பர்களாக்கிக் கொள்ள ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து கொள்ளுமாறு கூறினார். அதன்படி ஒவ்வொருவரும் கலந்துரையாடி தனது தோழியை அறிமுகம் செய்து வைத்தனர். அதன் பின்பு வளப் பகிர்வாளரான திருமதி சந்திரா சிறிய இடைவேளைக்காக ஒரு சிறிய விளையாட்டை அறிமுகம் செய்து மகிழ்வித்தார். பின்பு யுத்தம் மற்றும் சுனாமி பற்றிய அனுபவங்களை பரிமாறிக் கொண்டு அதை சபைக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார்.அதன்படி அவர்களின் சமர்ப்பணங்களின் முடிவில் அவைகளை பற்றிய கலந்துரையாடல் செய்யப்பட்டது. பின்பு யுத்தம் மற்றும் சுனாமியின் பயங்கரத்தை புரிந்துக் கொண்ட அவர்கள் அனைவரும் இனிமேல் அது போன்ற விபத்து நடக்காமல் இருக்க வேண்டி பிரார்த்தனை செய்தார்கள்.

அமர்வு 1: திருகோணமலைப் பெண்கள் ஆயுத மோதலினால் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் மற்றும் தென்னிலங்கைப் பெண்களின் சுனாமி அனுபவங்கள் என்பன குறித்து கருத்துப் பரிமாற்றங்களைச் செய்து கொள்வதற்காக வளப் பகிர்வாளர் பங்கேற்பாளர்களை மூன்று குழுக்களாகப் பிரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுச் சமர்ப்பணம்:

போர் மற்றும் சுனாமி காரணமாக பெண்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த பிரச்சினைகள்

- கொலைகள் அதிகரித்தல்.
- விதவைகள் அதிகரித்தல்.
- பிள்ளைகளை இழத்தல்
- பெற்றோரை இழத்தல்.
- வீடுகளை இழத்தல்.
- அகதி முகாம்கள் அதிகரித்தல்.
- முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்கள் அதிகரித்தல்
- தனது உரிமையை பற்றி பேசியவர்கள் தன் உயிரை இழத்தல்.
- பொருளாதார பின்னடைவுகள் மற்றும் உணவு பற்றாக்குறை
- சொத்துக்கள் பாதிப்படைதல்.
- பிள்ளைகளுக்கு கல்வி பாதித்தல்
- தொழில் பிரச்சினை அதிகரித்தல்.
- முகாம்களுக்குள் பெண்களின் சுதந்திரத்தை மட்டுப்படுத்தல்.
- சுகாதரர பிரச்சினை ஏற்படல்.
- ஊனமுற்றோர் அதிகரித்தல்.
- சிறு பிள்ளைகள் போராளிகளாகும் நிலை ஏற்படல்.
- ஆட்கடத்தல் மற்றும் காணாமல் போதல் அதிகரித்தல்.
- இனங்களுக்கிடையே தவறான கருத்தும் குரோத மனப்பாங்கும் ஏற்படல்.
- கற்பழிப்பு அதிகரித்தல்.
- பாதுகாப்பற்ற நிலை ஏற்படல்.
- எப்போதும் பயத்துடனும் சந்தேகத்துடனும் வாழும் நிலை ஏற்படல்.
- இனங்களுக்கிடையே முன்னர் நிலவிய நல்லுறவு பாதிப்படைதல்.

<u>பயணம் 3</u>

<u>அம்பாறை மாவட்டம்</u>

2008.11.15 - சேவா லங்கா மன்றம், அம்பாறை

2008.11.15 ஆம் திகதி சேவா லங்கா மன்றத்திற்கு மாத்தறை, காலி, களுத்துறை மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்கள் வருகை தந்து, அம்பாறை மாவட்ட பெண்களைச் சந்தித்தனர். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றாக வாழும் ஒரு மாவட்டமாகவும், மிகப் பெரிய நிலப்பரப்பை கொண்ட ஒரு மாவட்டமாகவும் அம்பாறை மாவட்டம் இருந்து வருகின்றது. இலங்கையின் பிரதான உணவான சோற்றுக்குத் தேவையான அரிசி உற்பத்திக்கும் இம்மாவட்டம் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது. விவசாயத்தை மூன்று இனத்தவரும் தம் பிரதான வாழ்வாதார தொழிலாக கொண்டு செயற்படுவதுடன், மீன்பிடி துறையும் இங்கு முக்கிய இடத்தை வகிக்கின்றது. கிழக்கு மாகாணத்தில் அதிகமாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளதோடு ஏற்கனவே யுத்தம் காரணமாக இனங்களுக்கிடையே நம்பிக்கை அற்ற நிலைமையும் காணப்படுகிறது. எனவே, இந்த பெண்கள் யுத்தத்தின் விளைவுகளோடு நம்பிக்கையை கட்டியெழுப்பும் விடயத்திலும் போராட வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர்.

முதலாவதாக அம்பாறை மாவட்ட பெண்களுக்கு இணைப்பாளராக தலைமைத்துவம் வகிக்கும் திருமதி சீதா அனைவரையும் வரவேற்றதோடு, போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சங்கத்தின் தலைவியான திருமதி விசாகா தர்மதாச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் கனேடிய WUSE நிறுவனத்தின் இனை நிறுவனமான WDP அனுசரணையோடு நடத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தினார். யுத்தத்தால் அதிகமாக பாதிக்கப்பட்ட சாதாரண மக்கள் வாழும் இந்தப் பிதேசத்தை பற்றி விபரித்ததால் தெற்கிலிருந்து வருகை தந்த பெண்கள் அம்பாறை பிரதேசத்தை பற்றி தெரிந்துகொள்ள முடியும் எனத் தெரிவித்ததுடன், கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை இரு பிரிவினரும் நன்றாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அவர் இறுதியாகக் கேட்டுக் கொண்டார். குறிப்பாக கிழக்கிலங்கைப் பெண்களின் அனுபவங்களை தென்னிலங்கையிலிருந்து வந்தவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென அவர் கூறினார்.

மற்றவர்களுடைய துன்பங்களை அறிந்து கொண்டால் மட்டும் போதாது என்றும், சமூகத்தின் நல்வாழ்வுக்காக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் திடசங்கட்பத்துடன் இங்கிருந்து திரும்பிச் செல்ல வேண்டும் என்றும் இப்பெண்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அமர்வு 1: பெண்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போர் மற்றும் சுனாமி குறித்த தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இத்தகைய நேரடிச் சந்திப்புக்கள் மூலம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்வதற்கும் பெண்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. இது தமக்கு ஒரு சிறந்த அனுபவமாக இருந்து வருகின்றது என்றும், இத்தகைய ஒரு கருத்துப் பரிமாற்ற விஜயத்தில் பங்கேற்று தென்னிலங்கைக்கு வருவதற்கு தாம் ஆவலுடன் காத்திருப்பதாகவும் அம்பாறை மாவட்டப் பெண்கள் தெரிவித்தனர்.

<u>குழுச் சமர்ப்பணங்கள்</u>

சுனாமி மற்றும் மோதல் காரணமாக வட பிரதேசப் பெண்கள் எதிர்கொண்ட அனுபவங்களும் அவர்களுடைய பிரச்சினைகளும்

- விதவைகள் அதிகரித்தல்.
- சொத்துக்களை இழந்தமையால் முகாம்களுக்குள் இருக்க நேரிடல்
- அநாதை குழந்தைகள் அதிகரித்தல்.
- சித்திரவதை.
- தனிப்பட்ட பகைகளை தீர்த்துக் கொள்ளல்.
- பெற்றோரை இழந்ததால் பாதுகாப்பை இழத்தல்.
- சொத்துகள் மற்றும் குடும்பத்தினரை இழந்ததால் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தல்.
- பொருளாதார ரீதியில் எழும் பிரச்சினைகள்.
- புதிய இருப்பிடங்களை அமைக்க நேரிடல்.
- விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமை.
- வாழ்வாதார வழிகளை புதிதாக ஆரம்பிக்க நேரிடல்.
- விதவைகளை இழிவுபடுத்தல்.
- ஊனமுற்றோரின் எண்ணிக்கை அதிகரித்தல்.
- போர் காரணமாக குடும்பங்கள் இடையே தொடர்பு விரிசல் அடைதல்.
- பெண்கள் மற்றும் பிள்ளைகள் ஆகியோருக்கு போதிய பாதுகாப்பு கிடைக்காமை.
- தமது உடமைகளையும் சொத்துக்களையும் விட்டுவிட்டு வெளியேற வேண்டிய நிலைமை.
- சமய மற்றும் இன பேதங்கள்.
- பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைதல்.
- அச்சத்தில் வாழ்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமி அனர்த்தம் - தெற்கு பெண்களின் பிரச்சனைகளும் அனுபவங்களும்

- சாதி மத பேதமின்றி ஒருவருக்கொருவர் உதவுதல்.
- முகாம்கள் உருவாகுதல்.
- உயிர் மற்றும் சொத்துக்களை இழத்தல்.
- உள, உடல் ரீதியிலான சுகாதார பாதிப்புகள் .
- பெண்கள் துஷ்பிரயோகம்
- அநாதை குழந்தைகளை வீட்டு வேலைக்கு அமர்த்த முயற்சித்தல்.
- உதவிகள் முறையாக பகிர்ந்தளிக்காமை.
- பாதிப்பிற்கு உட்பட்டவர்களை விட மற்றவர்கள் உதவிகளைப் பெறல்.
- பெற்றோரை இழந்த பிள்ளைகளை துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தல்.
- முகாம்களில் இருப்பதால் குடும்ப பிரச்சினை ஏற்படல்.
- தேவையற்ற கருத்தரித்தல்.
- பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படல்.
- சிறுவர் துஷ்பிரயோகங்கள்.
- மீன்பிடித் தொழில் மற்றும் சுயதொழில்கள் பாதிப்படைவதால் பொருளாதார வீழ்ச்சி ஏற்படல்.

பயணம் 4

புத்தளம் மாவட்டம்

சமூக திரிய மன்றத்தின் உறுப்பினர்களைச் சந்தித்தல் - 2008.11.26

மாத்தறை, காலி, களுத்துறை ஆகிய பிரதேசங்களிலிருந்து வருகை தந்த பெண்கள், புத்தள பிரதேசத்திலுள்ள சிங்கள, முஸ்லிம், தமிழ் பெண்களை சந்தித்தல். பிரஜா திரிய மன்றத்தின் தலைவியான திருமதி இந்திராணி குசுமலதா அனைவரையும் வரவேற்றார்

முதலாவதாக வருகை தந்திருந்த அனைத்து இன பெண்களும் மங்கள விளக்கேற்றியது இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்பம் அழகாக அமைவதற்கு ஒரு காரணமாகியது. எட்டு மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தை விசாகா தர்மதாச தெளிவுபடுதினார். புத்தளப் பிரதேச பெண்களின் வளமான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், அவற்றிலிருந்து கற்றுக் கொள்வதற்கும் தெற்கு பெண்கள் வந்துள்ளார்கள் என அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் தனது தோழியை தெரிவு செய்த பின்னர் தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கு அவகாசம் கொடுக்கப்பட்டது. அதன் பின்பு தனது தோழிகளை சபையோருக்கு அறிமுகப்படுத்தினர். மொழி பற்றிய சிறு பிரச்சினைகள் இருந்தும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அது தடையாக இருக்கவில்லை. திருமதி விசாகாவின் விசேட கவனம் புத்தளம் மாவட்ட பெண்களின் எழுத்தறிவு, தலைமைத்துவம் பற்றி ஈர்க்கப்பட்டிருந்தது. அவர் திருமதி இந்திராணியிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்தார். அதாவது, வட மேற்கு பெண்களுக்கு சேவை செய்வதாக இருந்தால் அவர்களுக்கு தலைமைத்துவ அறிவுகளையும், முதியோர் கல்வியையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கமாறு கேட்டுக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து சமூக திரிய மன்றத்தின் தலைவியான திருமதி இந்திராணி புத்தள மாவட்டத்தில் 142 அரச சார்பற்ற நிறுவனங்கள் இருப்பதன் காரணத்தால் அங்குள்ள மக்கள் உதவிகளை எதிர்பார்த்தபடி இன்னும் தங்கி வாழும் நிலையில் இருப்பதாக தெரிவித்தார். அவர்களின் எழுத்தறிவுக் குறைபாடுகள் பற்றியும் விளக்கமளித்தார். இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு வட மேற்கு பெண்கள் முகம்கொடுப்பதாகவும், வறுமையின் காரணத்தினால் கல்வியில் ஆர்வம் காட்டுவதில்லையெனவும், குடும்பதிற்காக உழைப்பவர்கள் பெண்களாக இருப்பதாகவும் மேலும் கூறினார்.

அதன் பின்பு அறிமுகப்படுத்தலில் இருந்த குறைபாடுகள் பற்றி வளப் பகிர்வாளர் சுட்டிக் காட்டினார். இந்தப் பெண்களின் நல்லுறவையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளவும், தெற்கு யுத்தம் மற்றும் சுனாமி பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் இரு குழுக்களாக பிரிந்து கலந்துரையாடல் நடத்தப்பட்டு, பின்பு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

அமர்வு 1: பெண்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போர் மற்றும் சுனாமி குறித்த தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

குழுச் சமர்ப்பணங்கள்:

புத்தளம் பிரதேச பெண்கள் முகம்கொடுக்கும் பிரச்சிணைகள்

- யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் இந்த பிரதேசத்திற்கு வருகை தந்தமை. (யாழ்ப்பாணம், வவுனியா. மன்னார் போன்ற பிரதேசங்களில் இருந்து)
- இங்கு வந்து குடியேறியவர்களுக்கும் புத்தள பிரதேச வளங்கள் பகிரப்படல்.
- தொழில் வாயப்புகள் குறைதல் (வெளியில் இருந்து இங்கு வந்தவர்கள் குறைந்த ஊதியத்திற்கு கூலி வேலை செய்வதன் காரணத்தால்)
- கணவன்மார் குடும்பங்களை விட்டு சென்றதால் ஏற்பட்ட பொருளாதார பிரச்சினைகள்.
- பாலியல் துன்புறுத்தல் மற்றும் வீட்டு வன்முறைகளுக்கும் உட்படல்.
- சுகாதார பிரச்சினைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அடிப்படை வசதியின்மை. (நீர், வீடு, மின்சாரம், கல்வி வசதிகள்)
- இறால் பண்ணை அமைப்பதால் வெள்ளப் பெருக்குகளுக்கு முகம் கொடுக்க நேரிடல்.
- போதை பொருட்களுக்கு அடிமையாதல்.
- தங்கி வாழும் மன நிலை.
- முதியோர்களின் குறைந்த அளவிலான எழுத்தறிவு.
- உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை.
- முறையான சுகாதார வசதிகள் இல்லாமை.
- விபச்சாரம் ஒரு தொழிலாக விரிவடைவதுடன், HIV நோயாளர்கள் உருவாக உள்ள வாய்ப்பு அதிகரித்தல்.

போர் மற்றும் சுனாமி என்பவற்றால் தென்னிலங்கைப் பெண்கள் எதிர்கொண்ட அனுபவங்கள் மற்றும் பிரச்சினைகள்

- போர் காரணமாக சிறு குழந்தைகளைக் கொண்ட இளம் விதவைகள் அதிகரித்தல்.
- அநாதைச் சிறுவர்கள் துஷ்பிரயோகம் மற்றும் ஏமாற்று வேலை என்பவற்றுக்கு எளிதில் இரையாகக் கூடிய நிலை.
- சிறுவர்களுக்குப் பாதுகாப்பின்மை.
- மன அழுத்தம்.
- சுனாமி காரணமாக தொழில்களையும், சொத்துக்களையும் இழந்தமை.
- முகாம்களுக்குள் பாலியல் துஷ்பிரயோகம், வேண்டாத கர்ப்பங்கள், பால், பால்வினை நோய்கள், உள மற்றும் உட ரீதியான துன்புறுத்தல்கள் என்பவற்றுக்கு உள்ளாகக் கூடிய நிலை.
- சுகாதாரப் பிரச்சினைகள்.

<u>சுனாமியால் தென்னிலங்கைப் பெண்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள்</u>

- இருப்பிடங்களை இழந்தமை.
- பாதுகாப்பற்ற முகாம் வாழ்க்கை.
- முகாம்களுக்குள் இடப்பற்றாக்குறை.
- தங்கி வாழும் மன நிலை.
- கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் மற்றும் வயோதிப் பெண்களின் சுகாதார, போஷாக்கு பிரச்சினைகள்.

இன்றைய தின வேலைத்திட்டத்தை பற்றி புத்தள மாவட்ட பெண்கள் கூறியதாவது: இதனூடாக கிடைத்த அனுபவத்தைப் பற்றி மகிழ்வதாகவும் இது அவர்களுக்கு ஒரு விசேட வாய்ப்பு எனவும் தெரிவித்தனர்.தெற்கை பிரதிநிதித்துவம் செய்த பெண்களும் தமக்கும் இது ஒரு விசேட சந்தர்ப்பம் எனக் கூறினர். மேலும் அவர்கள் இதற்கு முன்னால் வட மேற்கு பிரதேச மக்களை பற்றி நினைத்திருந்ததை விட அதிக தெளிவினையும் விளக்கத்தினையும் பெற்றதாகவும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணம் 5

அம்பாறை - 2008.11.30 சேவா லங்கா மன்றம்

2008.11.30 ஆம் திகதி தென் பகுதியின் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த பெண்கள் அம்பாறை மாவட்ட பெண்களைச் சந்தித்து, அவர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இன்று ஞாயிறு தினமாக இருந்ததுடன், அமைச்சர் வருகைக்காக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அதனால் தமிழ் பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் சிறிது தாமதமாக வந்தனர். பின்பு ஒருவரையொருவர் அறிகப்படுத்த சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தத்தமது நண்பரை பற்றி மற்றவர்களுக்கு அறிமுகம் செய்தனர். அந்த குறுகிய காலத்திற்குள் யுத்தம் மற்றும் சுனாமியால் ஏற்பட்ட அனுபவங்கள், பிரச்சினைகள் பற்றி அவர்கள் கலந்துரையாடினார்கள்.

குழுக்களாக பிரிக்கப்பட்டு போர் தொடர்பான பிரச்சினைகளையும் சுனாமி அனுபவங்களையும் மற்றும் பிரச்சினைகளையும் கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் இரண்டு தமிழ் இளைஞர்கள் மொழி பெயர்ப்பிற்காக முன் வந்தது விசேட சம்பவமாகும். இவர்கள் மிக ஆர்வத்துடன் மொழிபெயர்ப்பு செய்ததுடன், தமது கருத்துக்களையும் முன்வைத்தனர்.

அமர்வு 1: பெண்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போர் மற்றும் சுனாமி என்பன தொடர்பாக தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டனர்.

கிழக்கு மக்கள் போரினால் பெற்ற அனுபவங்களும், எதிர்கொண்ட பிரச்சினைகளும்

- குடும்ப அங்கத்தவர்களை இழந்ததால் ஏற்பட்ட உள ரீதியான பாதிப்புகள்.
- வீடு மற்றும் ஏனைய சொத்துக்கள் அனைத்தையும் விட்டு வர நேரிட்டமை.
- தமிழ் இனம் காரணமாக பாதுகாப்பு தரப்பினரின் தீவிர சோதனைக்கு உட்படல்.
- கல்வி பாதிப்படைதல்.
- எல்.டீ.டீ.ஈ மற்றும் டி.எம்.வி.பி யினரால் பிள்ளைகளை கடத்தப்படுவதால் பயந்து வாழும் சூழ்நிலை ஏற்படல்.
- விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைதல்
- சுதந்திரமாக நடமாட முடியாமை.
- உயிர் மற்றும் சொத்து சேதங்கள்
- நிரந்தர வதிவிடங்களை இழந்தமையால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடல்.
- பொருளாதார வீழ்ச்சி
- பெண்கள் பல வித துஷ்பிரயோகங்களுக்கு உட்படல்.
- குடும்பம், உறவு விரிசலடைதல்.
- கால்நடைகளின் இழப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறு வயதிலேயே யுத்தத்திற்கு முகம் கொடுக்க நேரிடல்.
- இன ரீதியில் பிரிவுகள் ஏற்படல்.
- தகுதியிருந்தும் தொழில் கிடைக்காமை.
- அரச நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் போது ஏற்படும் பிரச்சினைகள்.
- விதவைகள் அதிகரித்தல்.
- சமய ஆலயங்கள் பாதிப்படைதல்.
- அனாவசியமாக தேடுதல் நடவடிக்கைகளுக்கு நேரிடல்.
- பொது வசதிகள் இல்லாமை
- நிச்சயமற்ற நிலையுடன் வாழ நேரிடல்.
- சுகாதார பிரச்சினைகள், போக்குவரத்து சிரமங்கள்.
- முக்கியமான ஆவணங்கள் காணாமற் போதல்.
- போஷாக்குக் குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்தல்.
- வாழ்வாதாரங்களை இழத்தல்.

சுனாமி காரணமாக எதிர்கொண்ட பிரச்சினைகள்

- உயிரிழப்புக்கள்
- பொதுச் சொத்துக்களின் இழப்புக்கள்
- மன அழுத்தம்
- முகாம்களுக்குள் பெண்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டமை
- ரெயில் பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அழிவுற்றமையால் போக்குவரத்து மற்றும் பயணம் என்பன தொடர்பாக ஏற்பட்ட சிரமங்கள்
- நிவாரண உதவிகள் நியாயமான விதத்தில் பளிர்ந்தளிக்கப்படாமை

போர் காரணமாக தாம் எதிர்கொள்ள நேரிட்ட அனுபவங்கள் குறித்த தனிப்பட்ட கதைகளை இப்பெண்கள் பகிர்ந்து கொண்டதுடன், நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான தம்மால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் எடுத்து விளக்கினார்கள்.

இந்த வேலைத்திட்டம் "பெண்கள் சமாதானத்தை அர்தமுள்ளதாக்குவார்கள்" என்ற கருத்திட்டத்தின் கீழ் நடத்தப்படுவதன் நோக்கமானது முதலாவது கிராம மட்டங்களில் உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதில் பெண்கள் எவ்வாறு பங்கேற்கலாம் என்பதையும், அடுத்ததாக நாட்டில் உள்ள முரண்பாடுகளின் போது எவ்வாறு பங்கேற்கலாம் என்பது தொடர்பாக அவர்களுக்கு அறிவூட்டுவதேயாகும். அந்தச் சந்தர்ப்பத்தில் சோதனையிடல் தொடர்பான கேள்வியொன்றை முன்வைத்த ஒருவருக்கு அவர் பதில் கூறுகையில், இன ரீதியில் மற்றும் சந்தர்ப்ப ரீதியில் சோதனைகளுக்கு உட்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ு கிடைக்கும் அனுபவம் மாறுபட்டது என்றார். அவ்வாறான சோதனைகளின்போது பெண்கள் ானபுறுத்தப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. அதுபோல் போர் காரணமாக தெற்கின் இளைஞர்கள் பாதுகாப்புப் படைகளில் இணைவதால் குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இந்தப் போர் எந்த வகையிலாவது நிறுத்தப்படுமானால் நாடு வளம்பெறும் என்பதே அவரின் கருத்தாகும். யுத்தம் நடக்கும் நாட்டில் அதிலிருந்து மீளுவது கடினமானதாகும். சமாதான பேச்சுவார்த்தை இதற்கு தீர்வாக இருந்தாலும் யுத்தம் சமாதானத்திற்கான தீர்வாகாது. மட்டகளப்பில் ஒரு நாளைக்கு 12 பேர் மரணமடைவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இது சமாதானமோ, விடுதலையோ அல்ல. இந்த யுத்தத்தினால் பாதுகாப்புப் படையினர் எந்தளவு பாதிப்படைகிறார்கள் என்பதை காணக் கூடியதாக உள்ளது. அவர்கள் வீடு வரும் வரையில் பெற்றோர் காத்திருக்கின்றனர். யுத்தத்தின் யதார்த்தம் என்னவென்பதை அவர் தெளிவுபடுத்தினார். அதோடு மேலும் இன்றைய தினம் ஏற்பட்ட சகோதரத்துவத்தை மேலும் வளர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். அது சமாதானதிற்காக பங்களிப்புச் செய்ய முடியும்.

பயணம் 6 : திருகோணமலை மாவட்டம்

திருகோணமலை வீரநகர் பெண்கள் கிராம அபிவிருத்தி மன்றத்துக்கான பயணம்

2008.12.04 ஆம் திகதி தெற்கு பெண்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட பெண்களுக்கிடையிலான சந்திப்பு திருகோணமலை நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வீரநகர் பெண்கள் கிராம அபிவிருத்தி மன்ற இணைப்பாளர் மோகனா வீரையா அனைவரையும் அன்போடு வரவேற்றார். அறிமுகங்களுக்காக 20 நிமிட நேரம் வழங்கப்பட்டது.

தெற்கில் இருந்து வருகை தந்த பெண்களுக்கு, தெற்கில் பிறந்து திருகோணமலையை நிரந்தர வசிப்பிடமாக கொண்டிருக்கும் சிங்களப் பெண்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தமையை இங்கு விசேடமாக குறிப்பிட வேண்டும். மேலும் இங்கு விசேடமாக ஒரு தமிழரை திருமணம் செய்த சிங்கள பெண்மணியொருவர் எம்மத்தியில் இருந்தார். அவருடைய நடை உடை பாவனை மட்டுமன்றி தமிழ் மொழியைப் பேசுவதிலுள்ள தேர்ச்சியால் அவரை சிங்களவர் என அடையாளம் காண முடியாதிருந்தது. தகவல் பரிமாற்றம் மற்றும் உறவுகளைக் கட்டியெழுப்புதல் என்பவற்றைக் கொண்ட இச்செயற்பாடு பெண்கள் ஏனைய சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் தொடர்பாகக் கொண்டிருந்த தப்பபிப்பிராயங்களைப் போக்கிக் கொள்வதற்கு உதவியது.

சமாதானத்திற்காக பெண்கள் பல விடயங்களை செய்ய முடியும் என்றும், ஒவ்வொருவரின் அனுபவங்களை பரிமாறிக் கொள்ளும் போது பல விடயங்களை கற்றுக் கொள்ள முடியும் என்றும் கூறப்பட்டது. இந்த சுற்றுலாவின் முக்கிய நோக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்ததத்தின் கொடூரத்தை தெற்கு பெண்கள் நேரடியாக காண்பதற்கான சந்தரப்பதை பெற்றுக் கொடுப்பதும், சுனாமியால் தெற்கு பெண்களுக்கு நேர்ந்த கொடூரத்தை திருமலைப் பெண்களுடன் பரிமாறிக் கொள்ள சந்தரப்பத்தை பெற்றுக் கொடுப்பதேயாகும்.

அமர்வு 1: போரின் விளைவாகத் தோன்றியுள்ள பிரச்சினைகள் மற்றும் அனுபவங்கள், சுனாமியினால் ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் அனுபவங்கள் என்பன குறித்து மூன்று குழுக்களாக பிரிந்து கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

குழுக்களின் சமர்ப்பணங்கள்

<u>போரினால் பெண்கள் சந்திக்க நேரிட்ட பிரச்சினைகள்</u>

- விதவைகள் அதிகரித்தல்
- சிறுவர், முதியோர் இல்லங்கள் அதிகரித்தல்.
- உணவு தட்டுப்பாடு
- சிறுவர்கள் போராளிகளாதல்.
- கல்வி நடவடிக்கை பாதித்தல்.
- தொழில் இல்லாதோர் அதிகரித்தல்.
- முகாம் வாழ்கையில் சுதந்திரமின்மையும், தொற்று நோய்களுக்கு உட்படலும்.
- படுகொலைகள்.
- ஊனமுற்றோர் அதிகரித்தல்.
- தொடர்ந்து பயத்திலும் அதிர்ச்சியிலும் வாழும் நிலை
- பெண் பிள்ளைகளுக்கு வீட்டுக்கு வெளியே செல்ல உள்ள பயம்.
- அடிக்கடி பாடசாலைகளை முகாம்களாக பாவிப்பதால் கல்வி பாதித்தல்.
- இடம்பெயர்ந்தல்.
- ஆட்கடத்தல்.
- பெண்கள் துன்புறுத்தப்படும் நிலை அதிகரித்தல்.
- பொது உடமைகள் சேதமடைதல்.
- இரவு நேரங்களில் பயணம் செல்ல முடியாமை.
- அவநம்பிக்கை
- மன அழுத்தம்

<u>சுனாமியால் பெண்கள் சந்திக்க நேரிட்ட பிரச்சினைகள்</u>

- உள ரீதியான பாதிப்பால் நோய்வாய்ப்படல்.
- வேண்டாத கருத்தரிப்பு.
- தங்கி வாழும் மன நிலை.
- உதவிகளைப் பகிர்தலில் ஏற்படும் முரண்பாடுகள்.
- முக்கியமான ஆவணங்களை இழத்தல்.
- இயற்கை வளங்கள் அழிவடைதல்.
- சூழல் மாசடைதல்.
- நிரந்தர வதிவிடத்தை இழத்தல்.
- தூர பிரதேசங்களில் வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளமையால் மீனவர்களுக்கு வேலைக்கு செல்வதில் உள்ள பிரச்சினைகள்.
- தொடர்புகள் விரிசலடைதல்.
- முகாம்களுக்குள் சுகாதார வசதியின்மை.
- மீண்டும் சுனாமி வருமோ என்ற பயம்.
- முகாம்களுக்குள் பிள்ளைகள் போதைப் பொருட்களுக்கு அடிமையாதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குற்ப்பிட்ட சமர்ப்பணங்களின் முடிவில் கருத்துத் தெரிவித்த ஒரு பெண்மணி போரினால் பாரிய அளவில் பிரச்சினைகள் ஏற்பட்டதாகவும், தனது கிராமத்தில் 840 குடும்பங்களில் 315 விதவைகள் உள்ளார்கள் என்றும் தெரிவித்தார். முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்கள் அதிகரித்துள்ளது. சிங்களவரை விட தமிழ் மக்கள் பல துன்பங்களுக்கு முகம் கொடுக்க நேரிவதாகவும், கடற்றொழிலை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார். கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதால் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தோன்றி, அதன் விளைவாக சமூக, பொருளாதார, உளவியல் பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார். பிள்ளைகள் கடத்தப்படுவதும் தமிழ் குடும்பங்கள் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினையாகும். இவ்வாறான நிகழ்சிகள் இரு பிரதேசங்களையும் சேர்ந்த பெண்களின் அறிமுகம் கிடைப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் எனவும், இனிமேல் பிரச்சினைக்குரிய சம்பவம் ஏதும் நடந்தால் அதை நிவர்த்தி செய்து, இரு தரப்பினருக்கும் இடையே நல்லுறவை நடைமுறைப்படுத்த முடியும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

அதேபோல் அவர் முகம் கொடுத்த ஒரு சம்பவத்தையும் விளக்கினார். தனது உறவினரின் ஒருவரின் மகன் புலிகள் இயக்கத்தினர் ஊரடங்கு சட்டம் பிறப்பித்துள்ள நேரம் பாதையில் சென்றதால் புலிகளால் தாக்கப்பட்டார். அச்சந்தர்ப்பத்தில் இந்தக் குழுவில் தெரிந்த ஒருவரும் இருந்திருக்கிறார். அவர் அங்கிருந்து அவரை காப்பாற்றி இருகின்றார். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல் இருந்தாராம்.. அது போல் அடுத்த நாள் ஊரடங்கு சட்டத்தால் கடைகள் மூடியுள்ள காரணத்தால் பாண் வாங்குவதற்கு வந்த இரண்டு தமிழ் இளைஞர்களை கண்டதாகவும், முன் தினம் நடந்த சம்பவத்தால் ஏற்பட்ட கோபத்துடன் வேறு யாரேனும் கண்டால் நடக்கும் விபரீதம் அறிந்து அவர்களின் உயிரை காப்பாற்றியதாகவும் கூறினார்.அந்த சந்தர்ப்பத்தில் மனது முழுமையாக இணங்காவிட்டாலும், இன்று அவர்களுக்கு உதவியதை நினைத்து மகிழ்வதாகவும் கூறினார்.

அதன் பின்பு தமிழ் பெண் ஒருவர் தன் கருத்துக்களை முன் வைத்தார். இன்று இங்கு கிடைத்த சந்தரப்பத்திற்காக தனது மகிழ்ச்சியை தெரிவித்தார். அத்தோடு இதன் மூலம் அவருக்கு விழிப்புணர்வு ஏற்பட்டதாகவும், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவருடனும் மிக நட்புடன் பழகுவதாகவும் குறிப்பிட்டார். முன்னிருந்து தான் இவ்வாறு அனைவருடனும் நட்புடன் பழகினாலும் தன் பிள்ளைகள் அவ்வாறு இல்லையெனவும் அதற்கு காரணம் நம்பிக்கையின்மையும், அன்றாடம் நடக்கும் சம்பவங்களும் எனக் கூறினார். முன்னர் தான் மக்களுடன் பழகியது போல் தனது பிள்ளைகளும் பழகினால் எவ்வளவு நன்றாக இருக்குமெனவும் கூறினார். யுத்தம் கோபம், பகைமை இல்லாமல் ஒரு தாய் பிள்ளைகளாக வாழ்வதே தன் வேண்டுதல் எனவும் கூறினார். ஆனால், ஒருவரின் பிழையான புரிந்துணர்வால் கிராமம் முழுவதிலும் நம்பிக்கை சேதமடையும் என்றும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தறை, காலி, மற்றும் களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கு மோதல் தீர்வு தொடர்பான அறிவு வழங்கப்பட்டது என்றும், அவ்விதம் பெற்றுக் கொண்ட அறிவை, அனுபவத்தின் மூலம் கூர்மைப்படுத்திக் கொள்வதற்காக இவ்வாறு கிழக்குப் பிரதேசத்திற்கு அழைத்து வந்ததாகவும் கூறப்பட்டது. போரைத் தவிர்த்து நியாயமான முறையில் கலந்துரையாடி பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். இறுதியில் இலங்கையில் 52% பெண்கள் இருப்பதால் எமக்கு பாரிய பொறுப்பொன்று இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட பெண்களின் சார்பாக ஒருவர் கூறியதாவது: இந்த சந்திப்பினால் தனது அனுபவங்களை பகிர்ந்துக்கொள்ள கிடைத்ததில் தனக்கு மகிழ்ச்சியாக இருப்பதாகவும், இவ்வாறான செயலமர்வுகள் மூலம் பெண்களுக்கு அறிவை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் கூறினார். கிழக்கு பகுதி பற்றி ஊடகங்களில் பலவற்றை கண்டுள்ளதாகவும், திருகோணமலை பெண்களுடன் சில மணி நேரமாவது உரையாட கிடைத்தமையை ஒரு பாக்கியமாக நினைப்பதாகவும் தெற்கிலிருந்து வந்த பெண்கள் கூறினார்கள். இதற்கான சந்தரப்பத்தை உருவாக்கியதற்காக அவர்கள் தமது நன்றியையும் தெரிவித்தனர்.

இறுதி இரண்டு செயலமர்வுகளின் போது ஆயுதப் போராட்டத்தின் போது பெண்கள் எதிர்கொள்ள நேரிடும் சவால்களை இனங்கண்டு கொள்ளக் கூடிய வாய்ப்பு பங்கேற்பாளர்களுக்குக் கிடைத்தது. இனங்களுக்கிடையில் உறவுகளைக் கட்டியெழுப்பிக் கொள்வது எவ்வாறு, சிவில் சமூகத்தைப் பலப்படுத்துவது எவ்வாறு, உரையாடலுக்கூடாக தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவது எவ்வாறு என்பது குறித்த விடயங்களையும் கற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது. வெளிக்களப் பயணம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் நிலவி வரும் கள நிலைமைகளைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பினையும், புத்தளப் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்கள் எதிர்கொண்டு வரும் சிக்கலான பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பினையும் வழங்கியது.

8. செயலமர்வு தொடர்பான மதிப்பீடு 19.11.2008 ஹிக்கடுவ

பங்கேற்பாளர்கள்:

இச்சந்தர்ப்பத்தில் பங்கேற்பாளர்கள் மூன்று இரண்டு நாள் செயலமர்வுகளிலும், வலையமைப்புக்களை உருவாக்குவது தொடர்பான ஒரு நாள் செயலமர்விலும் புத்தளம், கந்தளாய் மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களுக்கான மூன்று வெளிக்களப் பயணங்களிலும் பங்கேற்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடலின் போது பங்கேற்பாளர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் கூறிய கதைகளிலிருந்து அவர்களுக்கு மத்தியில் ஏற்பட்டிருக்கும் தனிப்பட்ட மாற்றங்களை அவதானிக்க முடிந்தது. அவர்களுடைய நடத்தை மற்றும் மனப்பாங்கு என்பவற்றிலும் ஓரளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. தென்னிலங்கையைச் சேர்ந்த ஒரு சில சிங்களப் பெண்கள் இது வரையில் அவர்கள் வேறு சமூகங்களைச் சேர்ந்த பெண்களுடன் எத்தகைய தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை என்ற விடயத்தையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் பகிர்ந்து கொண்ட ஒரு சில அனுபவங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

காலி மாவட்டத்தைச் சேர்ந்த நாமலி தெரிவித்த கருத்து:
தெரிந்த நாள் முதல் இந்தப் போர் காரணமாக நான் தமிழ் மக்களை எதிரியாகத்தான் நினைத்தேன். ஆனால் அதற்கு அவர்கள் காரணம் அல்ல என்பதையும், சிறு சிறு தேவைகளை கூட புறக்கணிக்கப்பட்ட காரணத்தால் இவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும் நன்றாக புரிந்து கொண்டேன். இவ்வாறு எனது மனப்பாங்கு மாற்றமடைய இந்த வேலைத்திட்டம் காரணமாக இருந்தது. தோட்டத்தில் வேலை செய்யும் தமிழ் பெற்றோர்களின் பிள்ளைகள் வகுப்பில் கடைசி வரிசையில் தான் அமர்வார்கள். இனிமேல் அவர்களுடன் இணைந்து பேசி, முன்னால் வைக்க வேண்டும் என்று நான் என் பிள்ளைகளுக்கு சொல்வேன்.

இன்னொரு பங்கேற்பாளர் தெரிவித்த கருத்துக்கள்:
நான் தையல் தொழிலை மேற்கொண்டு வருவதுடன், முன்னர் தமிழ் ஆசிரியைகளுக்கு ஆடைகளைத் தைப்பதற்கு தயங்கியதுண்டு. ஆனால் இப்பொழுது நான் அவர்களுக்குத் தேவையான ஆடைகளைத் தைப்பதற்குத் தயாராக இருக்கிறேன். மேலும் நான் பூச்சாடி, செயற்கை பூக்கள் என்பவற்றையும் தயாரிக்கிறேன். தோட்டத் துரைமார்கள் தமிழ் மக்களை இதற்கு இணைத்துக்கொள்ள வேண்டாம் என்றார்கள். காரணம் அவர்கள் வீட்டிலும் ஒரே மாதிரியான பூச்சட்டிகள் இருந்தால் அவர்களுக்கு அது அவமானமாம். எல்லா வீடுகளும் அழகாக இருந்தால் தோட்டமே அழகாக இருக்கும் என்பதை நான் அவர்களுக்கு விளக்கினேன். பின்பு அதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். தோட்ட துரைமாரின் மனப்பாங்கை மாற்ற முடிந்ததை எண்ணி சந்தோஷப்படுகிறேன். யுத்தம் காரணமாக தமிழ் மக்கள் அனைவரையும் புலி என்று நினைத்தேன்.ஆனால் இராணுவத்தில் இருக்கும் என் கணவரை கூட மாற்ற முடிந்தது இந்த வேலைத்திட்டங்களுக்கு வந்த பின்பு. நான் அவரிடம் அனைவரும் புலிகள் அல்ல. நம்மைப் போன்ற மக்கள். அவர்களின் தேவைகளை பூரத்தி செய்யாத காரணத்தால் தான் இவ்வாறு யுத்தம் வரை சென்றுள்ளது என்பதை விளக்கியதும் அதை அவர் ஏற்றுக்கொண்டு கிராமங்களில் வாழும் தமிழ் மக்களுடன் சுமூகமாக பழகுகின்றார். நான் முழு ஒத்துழைப்பையும் இதற்காக கொடுப்பேன்.

இன்னொரு பெண் கூறியதாவது:

- ஊடகங்களில் யுத்தம் பற்றிய ஒரு பக்க தகவல் மட்டும் தான் எமக்கு கிடைக்கின்றது. ஆனால், இத்தகைய முயற்சிகள் மூலம் யுத்தத்தின் விளைவுகள் மற்றும் அங்குள்ள அப்பாவி மக்களின் துயரங்களை காணவும் அனுபவிக்கவும் நேரிடும் போது நாங்கள் எந்த அளவிற்கு தப்பான மனப்பாங்குடன் இருந்தோம் என்று புரிகிறது.

மாத்தறையைச் சேர்ந்த பெண்மணியொருவரின் கருத்து:

- அவர்களின் மொழி தெரியாதபடியால் புத்தளம், மற்றும் கந்தளாய் பெண்களுடன் உரையாட முடியவில்லை. அவர்கள் மும்மொழிகளையும் நன்றாக பேசும் போது நாம் சிங்களம் மட்டும் பேசுவதையிட்டு வெட்கமடைய வேண்டும் என்பதை புரிந்து கொண்டேன். இனிமேல் கட்டாயமாக தமிழ் மொழியை கற்பதற்கு பிள்ளைகளுக்கு சிறு வயதிலிருந்தே அதற்கான வழிவகைகளை செய்ய வேண்டும் எனவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுத்துறையைச் சேர்ந்த மானெல் முன்வைத்த கருத்து:
சில சந்தர்ப்பங்களின் போது தனது சக ஊழியர்களின் பிழையான மனப்பாங்கு காரணத்தால் தனது நிறுவனத்தில் சிறு குறைபாடுகள் ஏற்பட்டதென்பதை புரிந்து கொண்டமை மிக முக்கிய விடயமாகும் என்றார். சமாதானத்திற்கான அனைத்து விடயங்களையும் வீட்டிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். நாங்கள் கூடிய சீக்கிரம் கற்ற விடயங்களை கிராமங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும், பெற்றுக் கொண்ட அனுபவங்களுக்கு ஊடாக அவர்களிடத்தில் மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் வடக்கு பிரச்சினை பற்றி உணர்வுபூர்வமாக பார்ப்பதற்கு தெற்கு மக்களை ஊக்குவிக்கலாம். சுனாமியின் போது எமக்கு நமது மக்கள் பல உதவிகளை செய்தார்கள். யுத்தத்தால் அனைத்தையும் இழந்த வடக்கு மக்களுக்கு உதவி செய்ய யாரும் இல்லை. அவர்கள் தனித்து நிற்கின்றார்கள். அவர்களும் நம் நாட்டின் பிரஜைகள். இதை தென்னிலங்கை மக்களுக்கு புரியவைக்கும் காலம் வந்து விட்டது. இதைப் பற்றி தெற்கு மக்களுக்கு விழிப்புணர்வூட்ட நாங்கள் தயார்.

இன்னொரு பங்கேற்பாளர் முன்வைத்த கருத்து:
அனைவரையும் இலங்கையர் என்று பார்க்கும் மனப்பாங்கு இந்த வேலைத்திட்டம் மூலம் எமக்குக் கிடைத்தது. சமாதானத்திற்காக இதுவரை நாங்கள் எதையும் செய்யவில்லை என்பதை நினைத்து வேதனையடைகிறோம். யுத்தம் காரணமாக எமது சகோதர பெண்கள் எந்த அளவிற்கு துன்பப்படுகிறார்கள் என்பதை அந்தப் பிரதேசத்திற்குச் சென்று பார்த்த பின்னர் புரிந்து கொண்டோம். நாங்கள் மிகவும் சுயநலத்துடன் தெற்கில் இருந்திருக்கின்றோம் என்பதையும் புரிந்து கொண்டோம்.

9. முடிவுரை மற்றும் கற்றுக் கொண்ட படிப்பினைகள்

தென்னிலங்கையைச் சேர்ந்த 55 பெண்களின் திறன்களை அபிவிருத்தி செய்வதும், நாட்டில் இடம்பெற்று வரும் போரின் இயல்பு மற்றும் அதற்கான மூல காரணங்கள் என்பவற்றை அவர்களுக்குப் புரிய வைப்பதும் கிழக்கில் வாழ்ந்து வரும் தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்கள் போர் காரணமாக எதிர்கொண்டு வரும் இன்னல்களை அறிந்து கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிப்பதும் இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாக இருந்தது. வடக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மோதலை தென்னிலங்கையில் வாழும் பெண்களின் அன்றாட வாழ்க்கையுடன் பிணைக்கும் நோக்குடன் இது முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக தமது சுனாமி அனுபவத்துக்கூடாக போரின் அவலம் குறித்த ஒரு புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டது. சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைகள் பணி என்பவற்றில் பாரம்பரியமாக சம்பந்தப்பட்டிராத துறைகளைச் சேர்ந்த பெண்களை சமாதானத்தைக் கட்டியெழுப்பும் பணியில் அணிதிரட்டும் பொருட்டே இது மேற்கொள்ளப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தின் விளைவாக:

- பெண் பங்கேற்பாளர்கள் ஏனைய சமூகத்தினர் குறித்தும், போர் குறித்தும் கொண்டிருந்த மனப்பாங்குகள் மற்றும் கருத்துக்கள் என்பன மாற்றமடைந்ததுடன், அவர்களுடைய நடத்தையிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது.
- ஒரு சமாதான அணியாக வளர்ச்சியடையக் கூடிய பெண்களின் கூட்டணியொன்றின் உருவாக்கத்திற்கு வழிகோலப்பட்டது.
- சமாதானத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பான செயற்பாடுகள் மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்தல் என்பவற்றுக்கென தெற்கையும் கிழக்கையும் சேர்ந்த பெண்களுக்கிடையில் பிணைப்புக்கள் உருவாக்கப்பட்டன.
- தொடர்ச்சியான அடிப்படையில் நடத்தப்பட்ட செயலமர்வுகள், கலந்துரையாடல்கள் என்பவற்றின் பின்னர் கருத்துப் பரிமாற்றப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை பெருமளவுக்கு பயனுள்ளவையாக இருந்தன.

கற்றுக் கொண்ட படிப்பினைகள்

- தென்னிலங்கைப் பெண்கள் தமது சுனாமி அனுபவத்துக்கு ஊடாக சிந்தித்து போரின் இயல்பை அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டனர். அவர்களுடைய புரிந்துணர்வு விரிவடைந்தது மட்டுமன்றி தென்னிலங்கைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கும், கிழக்கில் வாழும் பெண்களுக்குமிடையில் நிலவி வரும் ஒருமித்த தன்மைகளையும் அவர்கள் இனங்கண்டு கொண்டனர்.

- நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் மொழி மிக முக்கியமான ஒரு பங்கினை வகித்து வந்துள்ளது. எனவே, மொழி ரீதியில் பாலம் அமைக்கக் கூடிய ஒரு சிலர் இந்த வேலைத்திட்டத்துடன் சம்பந்தப்படுவது அவசியமாகும்.

- கருத்துப் பரிமாற்றப் பயணங்களுக்கு பின்னர் தொடர்ச்சியாக பல செயலமர்வுகள் நடத்தப்பட்டிருந்தன. அதன் காரணமாக இப்பெண்கள் செவிமடுக்கும் திறன், கதைக்கும் திறன் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கற்றுக் கொள்ளும் திறன் என்பவற்றைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

பெண் சமாதானப் பணியாளர்களின் மிக முக்கியமான பலம் பல்வேறு துறைகளுக்கிடையிலும், சமூகங்களுக்கிடையிலும் மோதல் இடம்பெற்று வரும் பிரதேசங்களுக்கிடையிலும் உறவுகளையும், கூட்டணிகளையும் உருவாக்கிக் கொள்வதாகும் என்ற விடயம் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் தெரிய வந்தது. நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான உள்ளார்ந்த ஆற்றலை அவர்கள் கொண்டுள்ளார்கள். தமது குடும்பங்களிலும், சமூகங்களிலும், பரந்த சமுதாயத்திலும் மாற்றங்களை எடுத்து வருபவர்கள் என்ற முறையிலும், சமாதானத்தைக் கட்டியெழுப்புபவர்கள் என்ற முறையிலும் அவர்கள் மிக முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்து வருகிறார்கள். அவர்களுக்கு அவசியமான பயிற்சி, கருவிகள் மற்றும் வாய்ப்பு என்பன வழங்கப்படும் பொழுது இனங்களுக்கிடையில் பாலமமைக்கும் பொருட்டு தம்மை அணிதிரட்டிக் கொள்ளக் கூடிய ஆற்றல் அவர்களுக்குக் கிடைக்கின்றது. எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு சமாதான முயற்சியின் போதும் "சமாதானத் தொட்டிலை" உருவாக்கும் இந்த மிக முக்கியமான செயன்முறையை முன்னெடுத்துச் செல்வதற்கு போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கம் அவாக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு

பங்காளர் நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள்

1. திரிய பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி மன்றம் (களுத்துறை மாவட்டம்)

சேவைப் பிரதேசம்

பேருவல பிரதேச செயலாளர் பிரிவு – பாலயங்கொட, ஹபரவெல, ஹிரிகல்கொடல்ல, கனேரம்ப, பரணகடே, பண்டாரவத்த, மொரகொல்ல, களுவாமோதர

உறுப்பினர் எண்ணிக்கை – 325

வழங்கப்படும் சேவைகள்

- சிறுவர் அபிவிருத்திக்கு உதவுதல்
- சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கடனுதவி வழங்குதல்
- பல்வேறு பயிற்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்
- சுகாதாரத் திட்டங்களுக்கு உதவுதல் (வீடுகள் மற்றும் கழிப்பறைகள் என்பவற்றைக் கட்டுதல்)
- மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்துல்
- சிறுவர் மற்றும் இளைஞர் கழகங்களுக்கு உதவுதல்
- பிரதேசத்திலுள்ள குடும்பங்களின் குடும்பச் சச்சரவுகளில் மத்தியஸ்தராகச் செயற்படுதல்
- குழுக்களில் பொறுப்புக்களை ஏற்பதற்கு ஆட்களுக்குப் பயிற்சியளித்தல்
- நேரத்துக்கு வேலை செய்வதற்குப் பயிற்சியளித்தல்

ஒருவருக்கொருவர் உதவுவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

2. தேசிய முன்பள்ளி மன்றம் (களுத்துரை மாவட்டம்)

சேவைப் பிரதேசம்

களுத்துறை பிரதேச செயலக பிரிவு
தொடங்கொட பிரதேச செயலக பிரிவு
(போம்முவல, பொலொஸ்ஸகம, தொடங்கொட, கொஸ்ஸின்ன, மன்கட போன்ற மேற்குறிப்படப்பட்ட பிரதேச செயலகப் பிரிவின் கிராமங்கள்)

தற்போதுள்ள உறுப்பினர் எண்ணிக்கை 525 ஆகும்.

வழங்கப்படும் சேவைகள்

- முன்பள்ளிகளுக்கு உதவி செய்தல்.
- சிறுவர் அபிவிருத்திக்கு உதவி செய்தல்.
- சிறு குழு சேமிப்பு ஊக்குவிப்பு.
- சுயதொழிலுக்கான கடன் வழங்கல்
- சுனாமியால் பாதிக்கப்பட்ட உறுப்பினர் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்விக்காக உதவி செய்தல்
- பாடநெறிகள் நடத்தல் (பாலர் பாடசலை டிப்ளோமா)
- பயிற்சி வேலைதிட்டங்கள் நடத்துதல். (சிறு குழு அங்கத்தவர்களுக்காக.)
- முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கல். மற்றும் செய்படல்
- கிராமிய தலைவிகளாக செயல்படல்.
- நிதி நிறுவனங்களிடமிருந்து தனது உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக கடன்களைப் பெற்றுக் கொடுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.. காலி உடுகம லக் காந்தா விவசாய அமைப்பு

சேவைப் பிரதேசம்

உடுகம, கல்லந்தல, கெட்டகொட, நாகியாதெனிய, மாபலகம, பட்டகெடிய, நாகொட, கமகொட, திக்கோவிட. இப்பிரதேசங்களில் வாழும் 60 சதவீதப் பெண்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது இரு பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்குகின்றது.

- காலி கங்கடபட பத்துவ பிரதேச செயலாளர் பிரிவு – நாகொட வடக்கு
- யக்கலமுல்ல பிரதேச செயலாளர் பிரிவு

வழங்கப்படும் சேவைகள்

- பொதுவாக ஒருவருக்கொருவர் உதவுதல்
- அனர்த்தம் நிகழும் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் வாழும் நபர்களுக்கு உடனடி உதவிகளையும், தேவையான வசதிகளையும் வழங்குதல் (விசேடமாக வெள்ளம் மற்றும் சுனாமி போன்ற அனர்த்தங்களின் போது)
- பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் உறவுகளைக் கட்டியெழுப்புதல்.
- புதிய வகை விதைகளைத் தயாரிப்பது தொடர்பான பயிற்சிகளை வழங்குதல்.

4. காலி தென்னிலங்கை நவோதயா பெண்கள் மன்றம்

சேவைப் பிரதேசங்கள்

பத்தேகம பிரதேச செயலக பிரிவு, காலி கடவத் சத்தர பிரதேச செயலக பிரிவு, யக்கலமுல்ல பிரதேச செயலக பிரிவு, உக்வத்த, யக்கலமுல்ல,காலி, கல்வடுகொட, வக்வெல்ல, திம்பிகந்த, வந்துரம்ப மற்றும் பத்தேகம.

இந்த அமைப்பில் தற்போது 1600 மேற்பட்ட பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

வழங்கப்படும் சேவைகள்

- பயிற்சி வேலைத்திட்டங்கள்
- பாதுகாப்பு நடவடிக்கைகள்
- சுய தொழில் கடன்
- அமைப்பு செயற்பாடுகள்
- பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் மத்தியஸ்தராகச் செயற்படுதல்
- சேமிப்பை ஊக்குவித்தல்.
- கல்வி நடவடிக்கைகளுக்காக உதவி செய்தல்.
- சமாதானத்திற்கான வழிகாட்டல்.
- இளைஞர், சிறுவர் மற்றும் பெண்களுக்கான வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்.
- சமூக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ருஹுணு சிசில சமூக சேவை நிறுவனம்

சேவைப் பிரதேசம்
கம்புருகமுவ, மாத்தறை, தெவிநுவர, கந்தர, மிரிஸ்ஸ, பண்டாரமுல்ல

வழங்கப்படும் சேவைகள்

- பெண்கள் சுய தொழில்களுக்கு நிதியுதவியளித்தல்
- பெண்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கும், சமூக மேம்பாட்டுக்கும் தவையான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- வியாபார நிலையங்களை நடத்துதல்
- ஊனமுற்றோருக்கு உதவுதல்.
- உளவியல் அபிவிருத்திற்கு ஆலோசனை வழங்கல்

6. சமகி பெண்கள் நிறுவனம்

சேவைப் பிரதேசம்
பொல்வதுமோதர, வெலிகம, நம்பாடுன்ன, திக்வெல்ல, நில்வெல்ல, அபரெக்க.

வழங்கப்படும் சேவைகள்

- சுய தொழில்களுக்காக பெண்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- பெண்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கும், சமூக மேம்பாட்டுக்கும் தேவையான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- பல ஆலோசனை சேவைகளை வழங்கல்.
- வியாபார நிலையங்களை நடத்துதல்
- ஊனமுற்றோருக்கு உதவுதல்.
- உளவியல் அபிவிருத்திற்கு ஆலோசனை வழங்கல்
- வீட்டுத் தோட்டங்களைப் பராமரித்தல்.

கருத்துப் பரிமாற்றப் பயணங்களில் பங்கேற்றவர்களின் பெயர்ப் பட்டியல்

1. புத்தளம்

	தெற்கிலிருந்து பங்குபற்றியோர்
நீத்தா வணிகசூரிய	கே.ஜீ.லலிதா மாலனி
உம்மு ரஜீமா	சந்திராணி தடல்லகே
ரஹுமா பிபி	பி.ஜி.எஸ். மங்கலிகா
செல்வநாயகம்	மானெல் விக்ரமாரச்சி
அமரா குமார	டி.எம். சந்திரகாந்தி
ரஞ்சனி வேவலகம	ஜி.கே. இந்திராணி ஜயலக்ஷ்மி
சித்தி நஸீமா	தயா காந்தி கஸ்தூரியாரச்சி
மெனிக்கே அபேசிங்க	லீலா கமகே
ஆர்.டி.சுனேத்ரா விஜேமாலி	கே.கே. தனவதி
ஈ. சிறியானி	ஜே.ரி.எஸ் பத்மலத்தா
எச்.ஐ. ரேணுகா	யு.ஜி.எம். சந்திரா

2. கந்தளாய்

	தெற்கிலிருந்து பங்குபற்றியோர்
ஈ. ஜி. எச். காஞ்சனா	திலானி ஹர்ஷா
ஜயலான் நித்யன்	ஈ. லசந்தி
நிலூகா தரங்கி	டி. ஏ. புஸ்பலதா
கஜன்தனி	சானி வீரகோன்
டி. லக்ஷ்மி	மானெல் பெர்னான்டோ
ஏ. எஸ். பரீனா	திலகா வீரகோன்
ஏ. ஜே. விமலாவதி	நாமலி சந்தியா
ஞானசீலி ஹெட்டியாரச்சி	சந்திரா கமகே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை

ஜி. சீதா குமாரி
அமரா வீரசூரிய
கே. எச். பசீரா
அனோமா கீதாஞ்சலி
கே. ஜீ மல்காந்தி
ஜீ. நெரஞ்சிகா மாலனி
எஸ்.எச். பிரேமலதா
நிலந்தி கருணாதிலக
எம்.எல். அஹிபா
கே.எம். லாலனி
எஸ்.எம். தயாசீலி
சம்மன்னா மலர்
எஸ். கொடிமலர்

தெற்கில் பங்குபற்றியவர்கள்

யசா ஹேவாவிதான
டி. ஜி சிரியானி
பி.ஜீ. வதுகெதர
மல்லிகா பதிராஜ
கே.கே. மனோரி
எரங்கா குமுதினி
கே.ஈ. நந்தனி
எச் .ஏ. பிரியானி
சானி வீரகோன்
டி. வீரகோன்

4. புத்தளம்

லில்லி மாகிரட்
அனுலா சமந்தி
வசந்தி பிரியதிலக்கா
ஆர் எம். குமாரனிசா
பரீனா பேகம்
சந்தியா குமாரி
பாத்திமா பீபீ
சித்தி பரீனா
இந்ராணி குசுமலத்தா

தெற்கில் இருந்து பங்குபற்றியோர்

மானெல் பெர்னான்டோ
அனோமா நந்தனி
எஸ் எச்.சந்ராணி
யு.ஜீ. ரஞ்சனி
நிஷாதி லக்மாலி
சுஜீவா சமந்தி
சுமனா சரங்குஹேவா
சந்திரா சுபசிங்க
ஷானி வீரகோன்

5. அம்பாறை

லக்ஷ்மி பெர்னான்டோ
ரசிகா தமயந்தி
டி.டி.ஜி. நந்தனி
டப்.ஏ. திலினி
சிரியலதா ஹேரத்
என். சரிதா
ஜீ. ரணசிங்க
கே. பிரதீபா
கே. கோமிலா
என். ராமராஜ்
வீ. அர்ஜுன்
பீ.ஜீ. சீதா குமாரி
தமயந்தி மாலா
பத்மினி

தெற்கிலிருந்து பங்குபற்றியோர்

தயா நந்தனி சில்வா
வஜிரா கருணாதுங்க
எம். கே. பத்மாவதி
தயா காந்தி கஸ்தூரியாரச்சி
ரூபா பத்திரன
டிலானி ஹர்ஷா
துலாஞ்சலி லக்ஷிகா
திலகா வீரகோன்
கே. எல். இந்து
சந்திரா கமகே

6. திருகோணமலை

ஜி.எச்.டப். சிறியானி பிரிதிகா
லலிதா வர்ணகுலசூரிய
பெரண்டிக்கா கிறிஸ்டோபர்
மேரி எக்னஸ்
ஏ. பிரேமாவதி
எம்.பி. நசீஹா
எல்.வை. இரேஸா மதுஷானி
ஜி.எச். சுனிலா லாலனி
எல். முருகேசன்

தெற்கில் இருந்துடபங்குபற்றியோர்

மானெல் பெர்னான்டோ
கே.கே. எரங்கா
டி.பி.ஜி. துலாஞ்சலி
டி. சுமாலி விதர்ஷிக்கா
ஈ.ஜி. ஆரியவதி
இந்திராணி ஜயலக்ஷ்மி
சந்திராணி தடல்லகே
ஜே.டி.காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத்திட்டத்தின் முடிவில் பங்கேற்பாளர்கள் வழங்கிய மதிப்பீட்டுப் படிவங்கள் தொடர்பான பகுப்பாய்வு

மாத்தறை – காலி – களுத்துரை மாவட்டங்கள்

சுட்டிகள்	மிகவும் மகிழ்ச்சி	மகிழ்ச்சி	எதுவும் சொல்ல முடியாது
1. சமர்ப்பணம் செய்யும் திறன்	54	01	
2. பங்குபற்றுனர்களிடமிருந்து கற்றல்	54	01	
3. விளக்கத்தாள்கள் (Handouts)	55		
4. இந்த பயிற்சி மூலம் பெற்றுக்கொண்ட புதிய அறிவு மற்றும் அனுபவம்	55		
5. தலைவராக செயற்படுவதற்கு இருக்கும் தன்னம்பிக்கை	54	01	
6. மனப்பாங்குகள், உள்ளடக்கங்கள் மற்றும் திறமைகள் என்பவற்றின் அபிவிருத்தி	55		
7. ஆதரவுச் சேவைகள்	55		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தறை, காலி மற்றும் களுத்துறை மாவட்டங்களிலிருந்து ங்குபற்றியோரின் பெயர்ப் பட்டியல் மற்றும் தனிப்பட்ட விபரங்கள்

மாத்தறை மாவட்டம்

01. மல்லிகா விக்ரமசிங்க - 271/1, குணசேகர மாவத்தை, கம்புறுகமுவ (ருஹுணு சிசில)

60 வயதுடைய நான் திருமணமானவள். இரண்டு பிள்ளைகள் உள்ளனர். மூத்த மகன் இரசாயன சங்கத்தில் தொழில் புரிகிறார். மகளின் பிடிவாதச் செயல் எனக்குப் பெரும் வேதனையாக உள்ளது. என் கணவன் என்னை வீட்டை விட்டு துரத்தினாலும் மகனின் வேண்டுகோளின்படி மீண்டும் வீட்டுக்கு வந்துள்ளேன். இந்த அளவிற்கு வேதனையுடன் வந்த எனக்கு இந்த வேலைத்திட்டம் மூலம் கிடைத்த நிம்மதி மிகவும் அதிகம். மற்ற பெண்களோடு கலந்துரையாடி சில மணிநேரம் கழித்தது பெறும் ஆறுதலாகும். எனது மகன் பற்றியும் நான் இப்போது பயத்துடன் இருக்கின்றேன். காரணம் யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையாகும். வேலைக்கு செல்லும் பிள்ளைகள் மீண்டும் வீடு திரும்பும் வரை என்னைப் போல் எல்லா பெற்றோரும் காத்திருப்பார்கள். இவ்வாறான வேதனையை தாயென்ற ரீதியில் என்னால் சகிக்க முடியாது. யுத்தம் முடிவுற்று சமாதானத்தை நோக்கி நாடு செல்வதை விரும்புகிறேன்.

02. கே. மானெல் விக்ரமாரச்சி - 1/42, காளிதாச பாதை, மாத்தறை (ருஹுணு சிசில)

நான் 57 வயதையுடைய திருமணமான பெண்மணி. ஆண் பிள்ளைகள் 4 பேர் உள்ளனர். கணவன் ஹரிஸ்சந்திர நிறுவனத்தில் வேலை செய்வதுடன், நான் கடந்த 6 வருட காலமாக ருஹுணு சிசில அமைப்பின் முறைசாரா கல்வி பிரிவில் தையல் போதனாசிரியராகக் கடமை புரிகிறேன். நான்கு பிள்ளைகளும் திருமணமாகி தனித்தனியே வாழ்கின்றனர். நானும் என் கணவரும் எமது வீட்டில் வாழ்கிறோம். வெறுமனே செல்லும் வாழ்க்கை முறையில் இருந்து கொஞ்சம் விலகி இவ்வாறான வேலைத்திட்டங்களில் சில மணி நேரமாவது பங்குபற்ற கிடைத்தது எனது மனதிற்கு மிகுந்த நிம்மதியை தருகின்றது.

03. டீ.பி.எம். எம். திலானி ஹர்ஷா – கோன்கஹவத்த, வலகந்த, புஹுல்வெல்ல (ருஹுணு சிசில)

நான் தொழிலை எதிர்பார்த்திருக்கும் ஒரு பட்டதாரி. தற்போது ருஹுணு சிசில அமைப்பில் பணிபுரிகிறேன். பெற்றோர் உயிருடன் இருப்பதுடன், மூத்த சகோதரி திருமணம் முடித்து விட்டார். இளைய சகோதரி வெளிவாரியான பட்டப்படிப்பு படிக்கிறார். பெற்றோரை பராமரிப்பதும் தங்கைக்கு திருமணம் செய்வதும் என் பொறுப்பாக உள்ளது. அரச தொழிலுக்காக பல முறை விண்ணப்பித்திருந்தாலும் அது கிடைக்காததால் இந்த சமூக அமைப்பு குறித்து விரக்தியுடன் உள்ளேன். ஆனால், சமூக சேவையில் ஈடுபடக் கிடைத்ததையிட்டு திருப்தியடைகிறேன். அதுபோல் இவ்வாறான வேலைத்திட்டங்களில் சமூகமளிப்பதன் மூலம் அறிவை கூட்டிக் கொள்ளவும் முடியும்.

04. கே.கே.ஏ. மனோரி உதயகாந்தி - இல. 617/8, மாத்தறை ரோட், பெலான, வெலிகம
(ருஹுணு சிசில)

எனது குடும்பத்தில் ஆறு பேர் உள்ளனர். நான் உயர் தரம் சித்தயடைந்துள்ளேன். என் மூத்த சகோதரன் தொழில் புரிவதுடன், இளைய சகோதரனும் சகோதரியும் கல்வியை முடித்து விட்டு வீட்டில் இருக்கின்றனர். தந்தையின் வருமானத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றோம். நான் என் சகோதரியுடன் சுற்றுலா ஒன்று [illegible] சுனாமியால் என் வீட்டை இழந்தேன். என் பெற்றோரை காணும் வரை, [illegible] பாதிக்கப்பட்டு இருந்த நான் அவர்களை நான்கு நாட்களுக்குப் பின் ஒரு [illegible] வைத்து கண்டுபிடித்தேன். எனது சகல ஆவணங்களும் நீருடன் சென்றதுடன், மீண்டும் இப்போது அவைகளைப் பெற்றுள்ளேன். எமது வீட்டை கட்டுவதற்காக நிதி உதவி கிடைத்ததுடன், இப்போது எங்கள் வீட்டை கட்டி விட்டோம். நான் தற்போது ருஹுணு சிசில அமைப்பின் கள உத்தியோகத்தராக சேவையாற்றுகிறேன்.

05. தலத்தா விதானகமாரச்சி - ஜுல்கஹஹேன, தலல்ல தெற்கு, கந்தர

எனக்கு 58 வயது. திருமணமாகவில்லை. பெற்றோர் இப்போது உயிருடன் இல்லை. 12 வருடங்களாக கணக்காய்வு உத்தியோகத்தராக வேலை செய்தேன். பயங்கர நிகழ்வுகள் இடம்பெற்ற காலத்தில் பெண் என்றபடியால் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டதால் வேலையில் இருந்து விலகினேன். நான் பல சங்கங்களில் பதவி வகிக்கிறேன். எனக்கு 2 சகோதரிகளும் 5 சகோதரர்களும் உள்ளனர். ஒரு சகோதரரை இழந்தது துயர நிகழ்வாகும். மனதால் வேதனைப்படும் அளவிற்கு பிரச்சினைகள் இல்லாவிட்டாலும் நாட்டில் இடம்பெற்று வரும் போர் குறித்து பயமாக உள்ளது. ஒரே மாதிரியான வாழ்க்கையில் இருந்து விலகி இவ்வாறான வேலைத்திட்டங்களில் பங்குபற்றியமை மனதிற்கு பெரும் நிம்மதியாக உள்ளது.

06. இந்து லியனகே - இந்துமினி, ஹேனகெதர, தெற்கு வத்துகாமம், திக்வெல்ல (ருஹுணு சிசில)

நான் விதவை. ஒரு பிள்ளை உண்டு. பெற்றோரைப் பராமரிக்கும் பொறுப்பும் உள்ளது. கணவனின் பிரிவிற்கு பின் பொருளாதார ரீதியில் மோசமான சிக்கல்கள் ஏற்பட்டன. தமிழ் கற்றுக் கொடுக்கும் தனியார் வகுப்புகள் நடத்தினாலும் பெற்றோரையும் பிள்ளையையும் பராமரிக்க போதியளவு வருமானம் அதில் கிடைப்பதில்லை. எனது குழந்தை கர்ப்பத்தில் இருக்கும் போது என் கணவன் இறந்ததால் மிகவும் வேதனையுடன் இருக்கின்றேன். ஊனமுற்ற பிள்ளைகளுக்கு, கிராமத்திற்கு, சமூகத்திற்கு என்னால் முடிந்தவரை சேவை செய்ய விரும்புகிறேன். . இங்கு பெற்ற அறிவு அதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

07. ஜே.டி. காந்தி - இலக்கம் 283, தூவவத்த, பத்திகம, திக்வெல்ல

எனக்கு 44 வயது. திருமணமானவர். இரண்டு மகள்மாரும் இரண்டு மகன்மாரும் உள்ளனர். மூன்று பிள்ளைகள் கல்வி கற்பதுடன், ஒரு மகன் கல்வியை முடித்துவிட்டு வீட்டில் உள்ளார். கணவன் மதுபான உற்பத்தி கூட்டுத்தாபனத்தில் வேலை செய்கிறார். சமூக சேவையில் ஆர்வம் காட்டுகிறேன். போர் காணரமாக எதிர்காலம் பற்றி பயமாக உள்ளது. சமாதான பாதையை நோக்கி பயணிக்க முடிந்தால் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சந்தோஷப்படலாம்.

08. சந்திரலதா சுபசிங்க - சுதுவெல்ல, கோட்டகொட

திருமணமானவர். ஒரு தாய், கணவன் பலகை தொழிலில் இருப்பதுடன், நான் சங்கங்களில் இணைந்து கிராமத்திற்கு சேவையாற்றுகிறேன். நாங்கள் வாழும் வீடு கடற்கரையோரம் அமைந்திருந்ததால் சுனாமியில் அகப்பட நேரிட்டது. குடும்பத்தில் அனைவரும் உயிர் தப்பினாலும் கிராமத்தினர் அனைவரும் தமது குடும்பத்தினரை பிரிந்து அழுது கதறியதை கண்டேன். என் வாழ்வில் நான் கண்ட மிகவும் வேதனையான அனுபவம் இதுவாகும். சொத்தெல்லாம் அழிந்த நிலையிலும் நான் என்னால் முடிந்த உதவிகளை செய்தேன். பல அமைப்புகளுடனும் இணைந்து செயற்படும் எனக்கு இந்த செயலமர்களில் பங்குபற்றியதன் மூலம் அதிகூடிய அறிவினைப் பெற்றுக் கொள்ள முடியும் என நினைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெட்டியாரச்சி --- கொடவிலவத்த, தன்தெனிய ரத்மலே (ருஹுனு

நான் திருமணமாகாத யுவதி. பெற்றோர் இருக்கின்றார்கள் குடும்பத்தில் ஒரே பிள்ளை. கல்வி தகைமைகள் இருந்தும் தொழில் செய்யவில்லை. அறநெறிப் பாடசாலை ஆசிரியையாக சேவை செய்வதுடன், பல சங்கங்களில் பதவி வகித்து கிராமத்தின் பொதுச் சேவைகளுக்குப் பங்களிப்புச் செய்கின்றேன். வழமையான வாழ்க்கை முறையில் இருந்து கொஞ்சம் விலகி இவ்வாறான வேலைத்திட்டங்களில் பங்கேற்பதை வரவேற்கிறேன்.

10. இமாலி ஜயகுரு – தங்கல்லே கெதர, உட அபரெக்க, மாத்தறை

நான் நால்வர் கொண்ட குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை. 22 வயதுள்ள நான் மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தில் உயர் தரம் வரை கல்வி கற்றுள்ளேன். தந்தையின் வருமானத்தில் குடும்பம் நடக்கிறது. மேலும் படித்து தொழில் செய்ய எதிர்பார்த்துள்ளேன். இது போன்ற செயலமர்வுகளினால் என் போன்ற யுவதிகள் தலைமைத்துவம் குறித்த சிறந்த அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதே எனது கருத்தாகும்.

11. சந்திரானி தடல்லகே- இல. 173/ஈ, ரன்திலக வத்த, பாதேகம தெற்கு, கோட்டேகொட

53 வயதான நான் திருமணமானவள். 8 குழந்தைகளின் தாய். நான் சமூக சேவை வேலைகளில் ஈடுபடுவதுடன் அது மனதிற்கு நிம்மதியை தருகின்றது. 4 பிள்ளைகள் திருமணம் முடித்துவிட்ட நிலையில் இன்னும் 4 பிள்ளைகளில் ஒருவர் இராணுவத்தில் இணைந்துள்ளார். பொருளாதார நெருக்கடி காரணமாக எனது பிள்ளை இராணுவத்தில் இருந்தாலும் யுத்தம் இல்லாத சமாதானமான இலங்கையை காண்பதே எனது விருப்பம்.

12. டி.ஜி. சிறியானி – லியனகேவத்த, பாதேகம தெற்கு, கோட்டேகொட

திருமணமான எனக்கு 4 பிள்ளைகள் உள்ளனர். எனது மூத்த மகன் இராணுவத்தில் கடமை புரிவதுடன் மற்ற மூன்று பிள்ளைகளும் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். 150 உறுப்பினர்களைக் கொண்ட சமகி பெண்கள் அமைப்பை நான் உருவாக்கியுள்ளேன்.

அதில் கிராமத்திற்கான நலன்புரி வேலைகளை செய்வதுடன், மனைவியாக வீட்டின் கடமைகளையும் முறையாகச் செய்து கொள்வேன். பொய் குற்றத்திற்காக என் கணவரை போலிஸுக்கு அழைத்துச் சென்றதே என் வாழ்வில் நான் கண்ட மிகப் பெரிய துயரமாகும். அவரை குற்றமற்றவர் என நிரூபித்து அழைத்து வந்தேன். யுத்தத்தால் என் மனதிற்கு துன்பம். என் மகனை பற்றி பயத்துடன் இருக்கிறேன். இராணுவத்தில் கடமை புரியும் மகனின் தாயாக எனது வேண்டுகோள் எப்படியாவது சமாதான பாதையை அடைய வேண்டும் என்பதேயாகும். இந்த வேலைத்திட்டம் மூலம் எனக்கு கற்றுக் கொள்ள அதிகம் இருப்பதோடு எதிர்வரும் காலங்களில் சமூக சேவைகளில் இணையும் போது அவை பயன்படும் என்பதே எனது கருத்தாகும்.

13. பிரியானி ஹெட்டியாரச்சி -- இல. 21. சூரியாரச்சிகே வத்த, பாதேகம தெற்கு, கோட்டேகொட

27 வயதுடைய நான் திருமணமாகாதவள். மூத்த சகோதரர்கள் ஐவரும் சகோதரிகள் மூவரும் உள்ளனர். சாதாரண தரம் கற்றுள்ள நான் ஒரு இராணுவ வீரரையே திருமணம் செய்ய எண்ணியுள்ளேன். நான் போர் காரணமாக பயத்துடனேயே இருக்கிறேன். இந்த வேலைத்திட்டதில் கலந்து கொண்டதன் மூலம் பெண் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியில் தலைமைத்துவம் பற்றிய அறிவினைப் பெற்றுக் கொள்ளலாம் என நினைக்கிறேன்.

14. கே. அமரசிங்க – குணசெவன, தந்தெனிய (ருஹுணு சிசில)

எனது வயது 64. திருமணமாகவில்லை. தந்தையின் பிரிவின் பின்பு குடும்ப பொறுப்புகள் என்மீது வந்ததுடன், எனது ஒரே சகோதரனையும் இரு சகோதரிகளையும் திருமணம் செய்து கொடுத்த பின் என் தாயும் இறந்து விடடார். தங்கையின் மகளை நான் வளர்த்து வந்தேன். அவள் தொழில் செய்கிறாள். நான் இப்பொழுது தியானம் செய்து கொண்டிருப்புடன், சங்கங்களில் முன்னின்று செயற்படுத்துகிறேன். தங்கையின் 2 பிள்ளைகளும் இராணுவத்தில் கடமை புரிகிறார்கள். அது பற்றி பயத்துடன் இருக்கிறேன். இது போன்ற வேலைத்திடங்களுக்கு சமூகமளிக்க கிடைத்தமையையிட்டு மிக சந்தோஷமாக இருக்கிறேன்.

15. எச். எஸ். சந்திராணி – மாவீதிய பரணகடே, வெலிகம (ருஹுணு சிசில)

திருமணமாகாத பெண்ணான நான் திருமணம் முடித்த என் தங்கையுடன் வாழ்கிறேன். சுயதொழிலாக ஆடைகள் தைத்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் எனது தங்கைக்கு நான் உதவி புரிகிறேன். அமைப்புகளிலும் பதவி வகிக்கின்றேன். துயரங்கள் இல்லாத வாழ்க்கை இல்லாவிட்டாலும் பெண் என்ற ரீதியில் மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு விருப்பமாக உள்ளேன். இந்த வேலைத்திட்டத்தில் கலந்துகொண்டதில் அனுபவங்களை பரிமாறிக் கொண்டதோடு, அறிவைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தது என்பதே எனது கருத்தாகும்.

16. தயா காந்தி கஸ்தூரியாரச்சி – சஞ்சீவனி, பாதேகம, கோட்டேகொட

நான் 12 பேர் கொண்ட குடும்பத்தில் மூத்த மகள். மூன்று பிள்ளைகளின் தாய். கணவர் முச்சக்கர வண்டிச் சாரதியாக தொழில் புரிவதோடு, நான் சுய தொழிலாக கயிறு துடைப்பம் செய்து வருகிறேன். சுனாமி சந்தர்ப்பத்தில் சொத்துகளுக்கு பாதிப்புகள் ஏற்படாவிட்டாலும், அந்த நேரத்தில் நான் மாத்தறை பஸ் நிலையத்தில் பஸ் வண்டியொன்றில் இருந்ததால் வாழ்க்கையில் ஏற்பட்ட அந்த பயத்தை என்றுமே மறக்க முடியாதது. மக்களின் கூக்குரல் கண்முன் காட்சியாக நிற்கிறது. இது போன்ற காரணங்களால் மன உளைச்சல் ஏற்பட்டாலும் இதயத்தை இலகுபடுத்திக்கொண்டு வாழ்கிறேன். அதுபோல் இவ்வாறான வேலைத்திட்டங்களில் பங்குபற்றுவதால் வாழ்க்கைக்குத் தேவையான அறிவைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதே எனது கருத்தாகும்.

17. டப். ஜி. லீலாவதி – பரணவத்த, தலல்ல வடக்கு, கெகனதுர (ருஹுணு சிசில)

நான் திருமணமானவள். கணவர், மகன், மருமகள் மற்றும் பேரனுடன் வாழ்ந்து வருகிறேன். குழந்தைகளின் சிறு பிராயத்திலேயே கஷ்ட நஷ்டங்களின் நடுவில் வாழ்ந்தாலும் கணவர் மற்றும் எனது முயற்சியால் வாழ்க்கையை முன்னேற்றிக் கொண்டோம். திண்பண்டங்கள் தயாரித்து நான் வருமானத்தை ஈட்டி வருகிறேன். குடும்பத்தாருடன் சந்தோஷமாகவும் இதமாகவும் காலத்தை கழித்தாலும் கடந்த கால பிரச்சினைகளை மறக்கவில்லை. அதோடு நான் சிறிய அளவில் சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகிறேன். இதுபோன்ற வேலைத்திட்டங்களினால் பெற்றுக் கொள்ளும் அறிவு அவ்வேலைகளுக்கு மிக உதவியாக இருக்கும்.

18. லசந்தி எதிரிசிங்க -- இல. 26, சூரியாரச்சிகே வத்த, கோட்டேகொட

எனது வயது 37. திருமணமான நான் ஒரு குழந்தையின் தாய். நான் சிறு பருவத்திலிருந்தே பல இன்னல்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பவள். சாதாரண தரம் வரை கல்வி கற்றுள்ளேன். சகோதரிகள் திருமணமாகிவிட்டார்கள். அவர்கள் தனியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதுடன், நானும் கணவரும் மகளும் மற்றும் தந்தையுடன் தாய் வீட்டில் வாழ்வது சந்தோஷமான விடயமாகும். திருமணத்திற்கு முன் வெளிநாட்டுக்கு வேலைக்கு சென்று வந்தேன். தாயின் பிரிவு எனக்கு தாங்க முடியாத துக்கத்தை கொடுத்த சந்தர்ப்பமாகும். கிராமத்தின் சமூக சேவைகளில் கலந்துகொள்ள கிடைப்பது பெண் என்ற ரீதியில் எனக்கு திருப்தியை தருகிறது. இந்த வேலைத்திட்டத்தினால் அதிக அறிவினைப் பெற்றுக் கொள்ள கிடைத்தது என நான் நினைக்கிறேன்.

19. சாந்தி ஹெட்டியாரச்சி – பரண கெதர, பாதேகம தெற்கு. கோட்டேகொட

நான் திருமணமாகாத 24 வயதுடைய பெண். பெற்றோர்கள் உயிருடன் இருக்கிறார்கள். மூத்த சகோதரனும் சகோதரியும் திருமணமாகிவிட்டார்கள். தங்கை படித்துக் கொண்டிருப்பதோடு, ஒரு சகோதரி தற்கொலை செய்து கொண்டது இன்னும் துக்கத்தை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாகும். மூத்த சகோதரனும் சகோதரியின் கணவரும் வடக்கில் கடமை புரிவதால் வீட்டில் அனைவரும் பயத்துடன் வாழ்கிறோம். இந்த யுத்தம் முடிவடைந்து சுமுகமாக வாழ்வதற்கு நாம் அனைவரும் பிரார்த்திப்பதோடு, இந்த வேலைத்திட்டத்தில் பங்குபற்ற கிடைத்ததை பாக்கியமாக கருதுகிறேன்.

20. டி.ஜி. தமயந்தி – லியனகேவத்த, பாதேகம தெற்கு,கோட்டேகொட

பெற்றோருடன் ஏழு பேர் கொண்ட குடும்பத்தில் மூத்த மகளான எனக்கு 36 வயது. இன்னும் திருமணம் ஆகவில்லை. மூன்று பேர் தற்போது திருமணம் செய்துள்ளனர். எனக்கு எட்டு வயதில் என் தந்தை காலமானதுடன், என் தாய் தும்புத் தொழில் மூலம் எங்களைப் பராமரித்து வந்தார். உரிய வயதில் திருமணம் செய்யாமையும் தந்தையின் பிரிவும் என்னை மிகவும் வேதனைப்படுத்தியது. உள ரீதியாக பாதிப்படைந்திருந்த என்னைப் போன்ற பெண்களுக்கு வாழ்வில் ஒரு மாற்றத்தைக் கொடுக்கும் இது போன்ற வேலைதிட்டங்களை வரவேற்கிறேன்.

காலி மாவட்டம்

01. டி.டப். சுரங்கி – கனேகொட, உடுகம

எனக்கு 18 வயது. கணவருக்கு 20 வயது. இராணுவத்தில் இருக்கிறார். இரண்டு அக்காவும் ஒரு அண்ணாவும் உள்ளார்கள். அக்காமார் திருமணம் செய்து விட்டனர். அண்ணா இராணுவத்தல் உள்ளார். சங்கங்களுக்கு செல்வேன். நாங்கள் ஏழை என்பதால் ஓரம் கட்டி விடுவார்கள். உறவினர்கள் நல்லவர்கள்; பல உதவிகளை செய்வார்கள். யுத்தம் முடிவுற்று நாட்டிற்கு சமாதானம் வந்தால் நல்லது. இந்த வேலைத்திட்டம் பற்றி சந்தோஷம். முன்வருவதற்கு முதலில் மிகவும் பயத்துடன் இருந்தேன். இப்போது அது இல்லை. இராணுவத்தினரும் இம் மாதிரியான வேலைதிட்டங்களுக்கு வந்தால் நல்லது.

02. தேவிகா பிரியந்தி நாணாயக்கார - கமகொட, உடுகம

எனக்கு 38 வயது. திருமணமாகவில்லை. எனக்கு மூன்று சகோதரிகள் உள்ளனர். மூத்த சகோதரி பாடசாலையில் கற்பிக்கிறார். இரண்டாவது தங்கை வெளிவாரியான பட்டப்படிப்பு படிக்கிறாள். நான் உயர் தரம், தையல் மற்றும் சமையல் படித்தேன். சமூக சேவைப் பணிகளைச் செய்கின்றேன். எனக்கு 19 வயதில் ஜே.வி.பி யினர் அப்பாவை சுட்டு கொன்றுவிட்டனர். அன்று முதல் என் அம்மாவுக்கு ஞாபக சக்தி குறைவு. இன்னும் சிகிச்சை பெற்று வருகிறார். என் வாழ்வில் நான் சந்தித்த துயரமான சம்பவம் அதுதான். யுத்தத்தை நிறுத்தினால் நல்லது. சமூக சேவை வேலைகளை செய்ய மிக விருப்பம். அதன் மூலம் கிடைக்கின்ற அறிவு மிகப் பெறுமதியானது. இந்தச் செயலமர்வு பற்றி சந்தோஷம். அது எமது பயத்தைப் போக்கியது. மீண்டும் இது போன்ற செயலமர்வுகளில் பங்குபற்ற விருப்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. யூ. டப். ஏ. மாலா தமயந்தி - கல்கெடிகொடவத்த, கித்துலம்பிடிய, காலி

50 வயதுடைய இவருடைய குடும்பத்தில் 04 அங்கத்தவர்கள். கணவன் மின்சார தொழில்நுட்பவியலாளராக வேலை செய்கிறார். பிள்ளைகள் இருவரில் ஒருவர் தொழில் செய்கிறார். வாழ்வாதார தொழிலாக வீட்டுத் தோட்டம் மற்றும் கோரை உற்பத்தி பொருட்கள் தயாரிக்கிறார். கிராமத்தில் ஐந்து சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கிறார். பத்து பேர் கொண்ட குடும்பத்தில் மூத்த மகள்.

முதல் பிரசவத்தின் போது உயிருக்குப் போராடி, தப்பிப் பிழைத்தார். வாழ்வதற்காக நிரந்தர வீடு இல்லாததால் அவர்கள் வாடகை வீட்டில் வசிக்கிறார்கள். கணவர் வருமானத்தை சூதாட்டத்தில் அழிக்கிறார். தொடர்பு கொண்டுள்ள அனைத்து அமைப்புகளில் இருந்தும் அவருக்கு உதவிகள் கிடைத்திருந்தாலும் அதில் முதலிடம் வகிப்பது ஆக்ரோமார்ட் மன்றம் மற்றும் தேசிய கைவினைகள் சபையாகும். தேசிய, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமிருந்து உதவிகளைக் பெற்றுக் கொடுப்பதில் மாலாவிற்கு பக்கபலமாக இருந்து, அவருக்கு தைரியத்தை அளித்தது அந்த மன்றங்கள் தான் என்று மாலா கூறினார். வீட்டை தவிர மற்ற அனைத்தையும் பெற்றுக் கொண்ட அவர் இன்று முயற்சியுடைய பெண்ணாகவும், மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டான பெண்ணாகவும் வாழ்கிறார். விரைவாக சமாதானம் உண்டானால் தனது மகனுடன் வாழலாம் என்று அவள் கூறியது தனது மகன் கடற்படை வீரராக இருப்பதால் ஆகும்.

04. டி.எச். விஜிதா சரோஜினி - 225/B, ஹெட்டிகெதர வத்த, கிதுலம்பிடிய

47 வயதான நான் திருமணமானவள் இரட்டைப் பிள்ளைகள் உள்ளனர். வயது 16. பாடசாலைக்கு செல்கிறார்கள். கணவர் பிரதேச சபையில் தொழில் புரிகிறார். 11 ஆம் ஆண்டு வரை படித்துள்ளேன். சுய தொழிலாக வீட்டில் தையல் (துடைப்பம்) தைத்து விற்பனை செய்கிறேன். பாணி விற்பனை செய்கிறேன். குழந்தைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கும் உதவி வருகிறேன். எங்களுக்கு இருக்கும் பெரிய பிரச்சினை தாழ் நிலத்தில் வீடு இருப்பதால் வெள்ளத்தால் பெரிய பாதிப்பு ஏற்படுவதாகும். வீட்டில் இருக்கும் அனைத்துப் பொருட்களும் நீரில் அடித்துச் செல்லப்படுகின்றன. எனது சந்தோஷமான காலம் பாடசாலை நாட்களாகும். எனக்கு 22 வயதாகும்போது தந்தை இறந்து விட்டார். தந்தையின் இழப்பிற்கு பின் வீட்டுப் பொறுப்பை நான் எடுக்க நேர்ந்தது. அதன்பிறகு தொழிற்சாலைக்கு வேலைக்கு சென்றேன். பின்னர் இளைய சகோதரர் இராணுவத்திற்கு சென்றார். அவர் வீட்டுக்கு உதவி செய்தார். அவர் அண்மையில் ஹைட்டி தேசத்திற்கு பணியாற்றச் சென்று, அங்கு விபத்திற்குள்ளானார். அந்தத் துயரத்தில் இன்னும் அழுகிறேன். கணவரை பற்றி சந்தோஷப்பட முடியும்.

சமூக சேவையில் ஈடுபடுவதை அவர் விரும்புகிறார். யுவதியாக இருந்தபோது நான் சமூக வேலைகளில் ஈடுபட்டிருந்தேன். இவ்வாறான வேலைத்திட்டங்களில் மிக சந்தோஷமாக இருந்தேன். மற்ற அனைத்து கூட்டங்களையும் விட இவ்வாறான செயலமர்வுகளினால் அதிக அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். யுத்ததிற்காக எனது சகோதரன் சென்று 22 வருடமாகிறது. மிகவும் பயமாக உள்ளது. உறவினர்கள் இருவர் இராணுவத்தில் உள்ளனர். இராணுவம் குறித்து மிகப் பெருமையாக உள்ளது. தற்போது யுத்தம் முடிவடையப் போகிறது. அதற்காக சந்தோஷம். எதிர்காலத்திலும் இந்த கருத்திற்கு நான் மதிப்பளிக்கிறேன். எனது மூத்த மகளும் இராணுவத்தில் சேர்வதற்கு விரும்புகிறாள்.

05. கே.ஆர். நந்தனி, மெனிகேவத்த, கெட்டகொட

37 வயதான திருமணமான எனக்கு 20 – 18 வயதுகளை உடைய இரண்டு மகன்மார் இருக்கிறார்கள். எனது மூத்த மகன் தொப்பிகல பாதுகாப்பு பிரிவில் வேலை செய்கிறார். சிறிய மகன் வீட்டில் இருக்கிறார். கணவர் தேயிலை பயிர் செய்கிறார். மகன் தேயிலை பயிர் செய்வதற்கு உதவி செய்கிறார். முன்னர் குடும்பப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

:கள் இருந்தன. இந்த வேலைத்திட்டம் நல்லது. இந்த வேலைத்திட்டம் மூலம் ஏதாவது ஒரு சேவை செய்ய முடியும் என நினைக்கிறேன். மற்ற வேலைத்திட்டங்களை விட வித்தியாசமானது. அதனால் சந்தோஷம்.

06. பீ.கே. வாசனா நிஷாதி – 18 ஆம் கட்டை, நாகியாதெனிய, உடுகம

எனக்கு 20 வயது. தந்தை விவசாய தினைக்களத்தில் வேலை செய்கிறார். தாய் ஐஸ் கிரீம் பக்கெட் செய்து விற்பனை செய்கிறார். தம்பி சாதாரண தரம் படித்து விட்டு வீட்டில் இருக்கிறான். நான் கலைப் பிரிவில் படித்தேன். பாடசாலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றினேன். பாட்டி இறந்த நாள் மிகவும் துக்க நாளானது. சொந்தமாக ஒரு தொழிலை ஆரம்பிக்க எண்ணியுள்ளேன். யுத்தத்தால் பலர் இறக்கிறார்கள். பொருட்களின் விலை ஏற்றம் நடைபெறுகிறது. என் மாமாவும் இராணுவத்தில் இருக்கிறார். குண்டு பற்றி கேட்கும் போதே பயமாக இருக்கிறது. இந்த வேலைத்திட்டம் மிகவும் நல்லது. பேசுவதற்கு பயத்துடன் இருந்தேன். இப்போது பயம் கொஞ்சம் விலகிவிட்டது, சந்தோஷமாகவும் இருக்கின்றது. தொடர்ந்தும் இந்த வேலைத்திட்டத்தில் பங்கேற்க விருப்பம். வாழ்கையில் ஒரு மாற்றம் வரும் என எதிர்பார்கின்றேன்.

07. கே.கே. எரங்கா குமுது சத்துரிகா

1989.08.25 ஆம் திதி பிறந்த எரங்கா நான்கு பேர் கொண்ட குடும்பத்தில் மூன்றாமவராவார். பெற்றோர் உயிருடன் இருக்கின்றார்கள். க.பொ.த.சாதாரண தரம் வரை கற்ற இவர் தற்போது நவோதயா மன்றத்தில் பொருளாளராக இருக்கின்றார். பாடசாலை செல்லும் காலத்தில் தந்தை அரச ஊழியராக இருந்தபடியால் பொருளாதார பிரச்சனைகள் இருக்கவில்லை. தொடர்ந்தும் மேற்படிப்பு படிக்காமல் தொழில் செய்வதன் காரணம் தனிப்பட்ட விருப்பமேயாகும்.

வேலை செய்யும் நிறுவனத்தை பலர் குறை கூறினாலும் எரங்கா யாரிடமும் திட்டு வாங்கியதில்லை. யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என அவர் கூறுகிறார். எல்லோரும் இலங்கை மக்கள் எனவும், யார் இறந்தாலும் மனிதர்கள் எனவும், எந்த வகையிலாவது இந்த யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்றும் சொல்கிறார். காரணம் இறப்பதும் நாட்டிற்கு தேவையானவர்களே என அவர் கூறினார். இதை சீக்கிரம் முடிவடையச் செய்வதன் மூலம் நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை ஏற்படும் எனவும், யுத்தம் தொடர்வதாக இருந்தால் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவரை யுத்தத்திற்கு அனுப்ப வேண்டும் எனவும், அப்போது அவர்களுக்கும் பிள்ளைகளின் இழப்பின் வேதனை புரியும் என்றும் கூறினார்.

08. நாமலி சந்தியா விக்கிரமநாயக்க - 2431/ A, செனசும கெடகொட

35 வயது. மூன்று பிள்ளைகள். கணவன் இராணுவ தலைமையகத்தில் சார்ஜன்டாக வேலை செய்கிறார். மூத்த மகள் 10 ஆம் வகுப்பிலும், மகன் 5 ஆம் வகுப்பிலும், மகள் 2 ஆம் வகுப்பிலும் படிக்கின்றனர். தந்தை தொழில் செய்தார். அண்ணா ஒருவர் உள்ளார். கமத்தொழில் சேவை பிரிவில் வேலை செய்கிறார். தற்போது பெற்றோர் என்னுடன் இருக்கின்றார்கள்.

09. டி.எச் சந்ராகாந்தி. 250, கெடகொட

எனக்கு 50 வயது. 27, 25, 23 வயதில் மகன்மார்கள் உள்ளனர். கணவன் உடுகம டிபோவில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக வேலை செய்கிறார். கணவன் வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டுள்ளதைக் கேள்விப்பட்டு மிகவும் வேதனைப்பட்டேன். எனக்கு இரத்த அழுத்தம் ஏற்பட்டு உடல் பிரச்சினைகளும் தோன்றின. இதுவரை நான் என் துக்கத்தை யாருடனும் பகிர்ந்ததில்லை. வேறு எதுவும் பிரச்சினை இல்லை. புண்பட்ட மனது இன்னும் வேதனையை தருகிறது. பெற்றோர் மற்றும் இரண்டு தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கைகள் இருக்கின்றார்கள். சமூக சேவை வேலைகளில் ச
சந்தோஷமாக உள்ளபடியால் தான் நான் இந்த வேலைத்திட்டத
யுத்தம் நிறுத்தப்பட்டால் மிகவும் மகிழ்வேன். இந்த வேலைத்
விரும்புகிறேன். தொடர்ந்தும் இது போன்ற வேலைத்திட்டங்களில் பங்குபற்றுவேன்.

10. ஜி.பி.சுசம்பிகா 18, கந்த உடுகம வீதி, நாக்கியாதெனிய

39 வயதுடைய எனக்கு திருமணமாகி இரு பிள்ளைகள் உள்ளனர். கணவன் பேக்கரி வைத்திருக்கிறார். மகனுக்கு 18 வயது, மகளுக்கு 16 வயது. கணவருடன் பல பிரச்சினைகள் இருந்தாலும் எனது சொந்த முயற்சியால் முன்னேறினேன். போர் முடிந்தால் நல்லது. ஒரே மாதிரியான வீட்டு வாழ்கையில் இருந்து விடுபட்ட இந்த இரண்டு நாட்களும் மிகவும் சந்தோஷமாக இருந்தது. இந்த வேலைத்திட்டத்தால் மன நிம்மதி கிடைக்கும் என்று எனக்குத் தெரியும். தொடர்ந்தும் இதில் பங்குபற்ற எதிர்பார்க்கின்றேன்.

11. கே.ஜி. லாலனி மாலிகா - இல.56, கதிர்காமர் கிராமம், குருந்துவத்த

திருமணமாகி மூன்று பிள்ளைகளின் தாய். கணவர் தனியார் நிறுவனத்தில் பாதுகாப்பு ஊழியராக தொழில் புரிகிறார். மகளுக்கு 16 வயது. மகன்மார் 13 – 11 வயது உடையவர்கள். பாடசாலை செல்கிறார்கள். சுய தொழிலாக ஆடைகள் தைக்கிறேன். சுனாமியால் வீடு முற்றுமுழுதாக அழிந்துவிட்டது. அனைத்து சுனாமி அனுபவங்களும் எமக்குக் கிடைத்தன. யுத்தமும் சுனாமியை போன்றதுதான். யுத்தம் முடிவடையும் என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. தமிழ் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இடம் பெயர்ந்த மக்களுக்கு எம்மால் உதவ முடிந்தால் நல்லது. உதவ வேண்டும். இந்த வேலைத்திட்டம் மிகவும் நல்லது. சந்தோஷமாக உள்ளது. தொடர்ந்தும் பங்களிப்பேன்.

12. கே.கே.கமனி சந்திரிக்கா – 18, கந்த உடுகம வீதி, நாக்கியாதெனிய

1962.09.11 ஆம் திகதி பிறந்த கமனி சந்திரிக்கா குடும்பத்தில் நான்காவது பிள்ளை. திருமணம் செய்து இரு பிள்ளைகள் உள்ளனர். கணவர் அரச ஊழியர். உணவு தயாரிக்கும் சிறிய சுயதொழிலில் ஈடுபட்டுள்ளார். தாயின் மறைவால் மிகவும் அதிர்ச்சியடைந்து, தற்போது மருத்துவ சிகிச்சை பெற்று சுகமடைந்துள்ளார். கணவன் தன்னை மிகவும் நேசிப்பதால் சமூக சேவை வேலைகளில் ஈடுபடும் போது கணவனால் ஓரளவு தடைகள் ஏற்படுவதாக கூறுகின்றார்.

தனது பிரதேசத்தில் கணவரின் விருப்பத்துடன் சேவையாற்ற கிடைத்தால் அதனைப் பெரும் பாக்கியமாக கருதுவதாக கூறுகிறார். இந்தப் பயிற்சியின் பின் சிறந்த தலைமைத்துவத்துடன் தனது பிரதேசத்தின் அபிவிருத்தியை வழிநடத்துவது அவரின் நோக்கமாகும். சீக்கிரம் யுத்தம் முடிவடைவதே இவரின் எதிர்பார்ப்பு. குடும்பத்தில் உள்ள சமாதானம் நாட்டிலும் உருவாக வேண்டும் என எதிர்பார்க்கிறார்.

13. நந்தா கமகே - **193/2,** கெடகொட, உடுகம

66 வயது. குடுமபத்தில் ஐந்து உறுப்பினர்கள். கணவர் இராணுவத்தில் சேவை செய்து ஓய்வு பெற்றுள்ளார். திருமணத்தினால் உயர்தரம் படிக்க முடியாமல் போனது. கணவனின் தொழில் காரணமாக பல இடங்களில் வாழ நேரிட்டது. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட காணியில் வீடு கட்டப்பட்டுள்ளது. கணவன் தனக்கு நிறைய உதவி செய்வதாக கூறுகிறார்.

அவர் வாழும் பிரதேசத்தில் சில குடும்பங்களை ஒற்றுமைப்படுத்துவதற்காக செயல்பட்டதாக கூறுகிறார். அந்த குடும்பங்கள் சமாதானத்துடன் வாழ்வதனால் தான் எதை சொன்னாலும் கேட்கவும், ஏற்றுக் கொள்ளவும் செய்வார்கள் எனவும், அயலார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்திற்கு நல்ல கௌரவம் உள்ளது என்றும் கூறுகிறார். இவரின் லைகளின் போது கணவர் ஒத்துழைப்பதாகக் கூறுகிறார். சுனாமியின் மகன் திருகோணமலையில் இருந்தபடியால் அதை நினைத்தாலே க இருப்பதாகவும், யுத்தத்தால் எந்த நன்மையும் இல்லையெனவும், சமாதானத்தைப் பற்றி யோசிக்க வேண்டும் எனவும், தமிழ், சிங்கள பேதங்களை தவிர்த்து நாம் அனைவரும் இலங்கையர் என்பதே முக்கியம் எனவும் கூறுகிறார்.

14. யசா ஹேவாவித்தாரண - கெடகொட, உடுகம வடக்கு

யசாவின் வயது 58. ஆறு பேர் கொண்ட குடும்பத்தில் மூன்றாமவரான இவருக்கு திருமணமாகவில்லை. 2003 இல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு அவரை வேதனைக்குட்படுத்திய சம்பவமாகும். மக்களின் கூக்குரல் இன்றும் ஞாபகம் உள்ளதாகவும், உயரமான இடத்தில் வீடு இருந்ததால் மற்றவர்களுக்கு உணவு, உடை கொடுத்து உதவ முடிந்ததென்றும் கூறினார். அனைத்து இனங்களும் ஒன்றாக சமாதானத்துடன் வாழ்வதே பிடிக்கும் எனக் கூறுகிறார். ஆனால், இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ள யுத்தம் யுத்தத்தாலேயே முடிவடைய வேண்டும் எனத் தெரிவிக்கிறார். ஆனால் அது நிரந்தர தீர்வாக இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். குடும்பத்தில் அனைவரும் சமாதானத்துடன் வாழ்வதாகவும், உடுகம பிரதேசத்தில் சமூக சேவை வேலைகளில் முன்னனியில் நிற்பதாகவும் கூறுகிறார்.

14. ஜி.கே. இந்திராணி ஜயலக்ஷ்மி - நுவன் பியச, கெடகொட, உடுகம

இவருக்கு 45 வயது. திருமணமாகி நான்கு பிள்ளைகள் உள்ளனர். கணவன் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதுடன், வருமானமீட்டும் வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறார். அவருடைய சமூக சேவை நடவடிக்கைகளுக்கு கணவர் உதவி செய்கிறார். யுத்தத்தின் பயங்கரம் காரணமாக வீட்டில் இருந்து வெளியே செல்பவர்கள் மீண்டும் வீடு திரும்பும் வரை பயமாக உள்ளதென்றும் கூறுகிறார். யுத்தம் யுத்தத்தாலாவது முடிவடைந்தால் நல்லது எனக் கூறுகிறார். சமூகத்திற்கு நன்மை செய்வதே எதிர்கால நோக்கம் என இந்திராணி கூறினார்.

15. எம். கே. பத்மாவதி - உக்வத்த, கிங்கொட

இவருக்கு 53 வயது. நான்கு பிள்ளைகளுடன் குடும்பத்தில் மொத்தம் ஆறு பேர். கணவர் தச்சுத் தொழிலாளியாக வேலை செய்கிறார். சமூக சேவை வேலைகளுக்கு கணவர் ஒத்துழைப்புத் தருகிறார். சுனாமியால் அவர் குடும்பத்தார் எவருக்கும் ஆபத்து இல்லாவிட்டாலும், சொத்துக்கள் அழிவுற்றன. தனக்கு ஒரு மகன் இருந்தால் யுத்தத்திற்கு அனுப்புவதாகக் கூறுகிறார். தற்போது போராடும் இராணுவ வீரர்களை பற்றி கவலைப்படுகிறார். யுத்தத்தை விட பேச்சுவார்த்தை மூலம் கிடைக்கும் சமாதானத்தை விரும்புகிறார். தான் ஒரு நல்ல பிரஜையாக இருந்து வருவதனால் நாட்டிற்கு சமாதானம் மிகவும் தேவையென பத்மாவதி கூறுகிறார்.

17. யு.ஜி. சந்திராவதி - இல. 07, ஜஸ்டின் கந்த, காலி

56 வயதுடையவர். ஐந்து பிள்ளைகள் இருக்கின்றனர். கணவர் சுய தொழில் செய்கிறார். கணவர் சமூக சேவை வேலைகளில் அவருக்கு உதவி செய்கிறார். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனது அமைப்புக்கு ஊடாக உதவி செய்தார். போரினால் மக்கள் கொல்லப்படும் பொழுது நாங்கள் சுயநலத்துடன் செயல்பட முடியாது. அதிகாரத்தைப் பகிர்ந்து, சமாதானத்தை அடைவதே மிகவும் முக்கியமென சந்திரா நினைக்கிறார். விசேடமாக நாம் அனைவரும் இலங்கைப் பிரஜைகள் என்பதை மறக்கக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. பேணுக்கா வத்துகெதர - இல. 23, 1 ஆவது ஒழுங்கை, மடபாத்தல, காலி

39 வயது. இரண்டு பிள்ளைகள் உள்ளனர். மகனுக்கு 11 வயது. மகளுக்கு 06 வயது. கணவரின் சுய தொழில் முயற்சிக்கு உதவி செய்வதுடன், நிதி முகாமைத்துவ வேலைகளையும் செய்வதுண்டு. சிறு வயது முதல் சமூக சேவையில் ஈடுபாடுண்டு. உயர்தரம் வரை படித்துள்ளார்.

போர் பற்றிச் சொல்வதாயின் இது ஒரு அரசியல் வியாபாரம். தமிழ் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. தமிழ் மக்களுக்கு செவிமடுக்காமையினால் தான் இவ்வளவு பிரச்சினைகள். போருக்கான தீர்வு இராணுவத்தாருக்கு தான் தெரியும். சமாதானம் தான் ஒரே தீர்வு. இந்த வேலைத்திட்டம் மிகவும் நல்லது. தொடர்ந்தும் பங்குபற்றுவேன். மிக சந்தோஷம்.

19. ஈ.ஜி. ஆரியவதி – 187, கெட்டகொட சந்தி, உடுகம

59 வயது. திருமணமானவர். கணவர் பதிவாளராக வேலை செய்கிறார். நான்கு பிள்ளைகள். கிராம அபிவிருத்திச் சங்கத்தில் பொருளாளராகவும், சணச உறுப்பினராகவும், திடீர் அனர்த்த நிவாரண சங்கத்தில் உறுப்பினராகவும் இருக்கிறார். யுத்தம் பற்றி நினைக்கையிலேயே பயமாக உள்ளது. யுத்தத்தை வெற்றிகொள்ள வேண்டும். கூடிய சீக்கரம் வெற்றி பெற முடியும். இந்த பயிற்சியில் பெற்ற அறிவை ஏனைய பெண்களுக்கும் கொடுப்பேன். யுத்தம் முடிவடைந்து சமாதானத்தை எதிர்பாரக்கிறேன்.

20. டிரோமா வத்துகெதர, மடபாத்தல, 1 ஆவது ஒழுங்கை, காலி

தற்போது 36 வயது. குடும்பத்தில் ஆறு பேர். இவர் மூன்றாவது பிள்ளை. பொருளாதார நெருக்கடியின் மத்தியில் கல்வி கற்றிருக்கிறார். உயர் கல்வி கற்று வீட்டில் இருக்கும் காலத்தில் சுயதொழில் செய்வதற்கான தொழில்நுட்ப பயிற்சிகள் பல பெற்றுள்ளார். சுகாதார துறையில் ஒன்பது வருடங்கள் சேவையாற்றி உள்ளார். நவோதயா மன்றம் இவர்களாகவே உருவாக்கப்பட்டது.

நாங்கள் பல விடயங்களை அனுபவங்கள் மூலமே படித்தோம். வாழ்வில் சந்தித்த மிக துரதிர்ஷ்டவசமான சம்பவம் சுனாமியாகும். பலருக்கு கூடியளவு உதவி செய்தார். யுத்தத்தால் பிள்ளைகள் உட்பட பல அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதாகக் கூறுகிறார். அதிகாரப் பகிர்வின் மூலம் சமாதானத்தை பெற முடியும். நாம் சுயாதீனமான மனப்பாங்குடன செயல்பட்டால் சமாதானத்தைப் பெறலாம் என்கிறார். அதிக அளவில் பெண்கள் யுத்தத்தால் பாதிக்கப்படுகிறார்கள். பெண் என்ற ரீதியில் சமாதானத்திற்காக பல விடயங்களை செய்யலாம். எமது பொறுப்புகளை சரியாக தெரிந்து, இதற்காக பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பது டிரோமாவின் கருத்தாகும்.

21. சுஜீவா சமந்தி, 82/2, ரிச்மன்ட் கந்த பாதை, காலி

சமந்திக்கு 32 வயது. குடும்பத்தில் நான்கு உறுப்பினர்கள். கணவர் தங்க நகை தொழில் செய்கிறார். நவோதயா மன்றத்தை நிறுவ முன்நின்று செயல்பட்டவர். தற்போது அந்த அமைப்பின் காலி மாவட்ட தலைவராக இருக்கின்றார். சுனாமியால் தனக்கோ குடும்பத்தாருக்கோ எந்த ஒரு பாதிப்பும் இல்லாவிட்டாலும், பாதிக்கப்பட்ட பலருக்கு உதவி புரிந்தார். அவரின் கருத்துபடி சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது மிகவும் வலுவான நிலையில் இருக்கிறார்கள்.

யுத்தத்திற்கு யுத்தத்தால் அல்ல அதிகாரப் பகிர்வு மூலமே தீர்வு காணலாம் என்று கூறுகிறார். யுத்தத்தால் அப்பாவிப் பொது மக்கள் பாதிக்கப்படுவதுடன், எதிர்கால சந்ததியினர் பலர் பலியாவதால் ஏற்படும் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்கிறார். சமந்தியின் நோக்கம் எதிர்காலத்தில் அரசியலில் பிரவேசிப்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.பி.ஜி. துலாஞ்சலி லக்ஷிகா மதுஷானி, கட்டுகஹஹேன, மடபாத்த, அக்மீமண

துலாஞ்சலி 1991.09.06 ஆம் திகதி பிறந்துள்ளார். ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை. கல்வி பெறும் காலத்தில் தந்தை அரச ஊழியராக இருந்தபடியால் பொருளாதாரப் பிரச்சினை இருக்கவில்லை. கல்வியை விட தொழிலை விரும்பியதால் உயர் தரம் முழுமையடையும் முன் தொழில் செய்தார். சமூக சேவை அவருக்கு மிகவும் திருப்தியாக உள்ளதாம்.

யுத்தத்தை அனுமதிக்கவில்லை. சமாதானத்தை யுத்தத்தால் அல்ல பேச்சுவார்தை மூலம் எதிர்பார்கின்றார். யுத்தத்தால் பாதிக்கப்படுவது அப்பாவி பெண்கள் என கூறுகின்றார். கூடிய சீக்கிரம் யுத்தம் முடிய வேண்டும் என்பதே இவரின் பிரார்த்தனையாகும்.

களுத்துறை மாவட்டம்

01. மல்லிகா பத்திராஜ, பொரலஸ்ஸேகம

இவர் முன்பள்ளி ஆசிரியராவார். கிராமத்தில் பல சங்கங்களில் பதவி வகிக்கிறார். யுத்தம் சீக்கரம் முடிவடைந்து சமாதானம் வரவேண்டும் என்பதே இவரின் நோக்கமாகும். தனது சகோதரர் ஓமந்தையில் இருப்பதாலேயே யுத்தத்தின் பயங்கரம் நன்றாக புரிவதாக சொல்கிறார். சமாதானத்திற்கான பணியை தன் குடும்பத்திலிருந்து ஆரம்பித்துள்ளதாகவும், தன் பிள்ளைகள் சிறந்த விதத்தில் பெற்றோருக்கு கீழ்படியவும் செவிமடுக்கவும் செய்கிறார்கள் என்றும் மல்லிகா கூறுகின்றார்.

02. சுமாலி விதர்ஷிகா - மொரகொல்ல, பேருவல

சுமாலி சுனாமி பற்றிய அனுபவங்களைப் பெற்றுள்ள பெண்மணியாவார். குழந்தை பிறந்து ஆறு தினங்களின் பின் சுனாமியுடன் ஓடி வர முடியாத நிலையில் இருந்தும், சுமாலி வேகமாக ஓடி வந்து உயிரை காப்பாற்றிக் கொண்டார். ஆனால், சுனாமியின் அசுத்த நீரினால் நீண்ட காலம் துயரத்திற்கு உள்ளாக வேண்டியிருந்தது. அவரின் வீடு, கடல் மட்டத்தில் இருந்து 150 மீட்டர் தூரத்தில் இருந்தபடியால் வீடு மற்றும் பொருட்கள் அனைத்தையும் சுனாமியால் இழந்துவிட்டார். மன உளைச்சலுக்கு உட்பட்டிருந்த அவர் இன்றும் கூட அதைப் பற்றி கதைப்பதற்கு தயங்குகிறார். வாழ்க்கையில் அவருக்கு ஏற்பட்ட மிகப் பயங்கர அனுபவம் (பெண் என்ற ரீதியில்) இதுவாகும். அன்று மக்கள் ஒன்றினைந்து உணவு, நீர், உடைகள், மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொடுத்து, எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் மற்றவர்களுக்கு உதவினர். மக்களின் நற்குணங்களை வெளிக்காட்டுவதற்கும் சுனாமி ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது என்று அவர் கூறினார்.

03. சுமானாவதி சரங்குஹேவா – முன்பள்ளி மன்றம், களுத்துறை

க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் தேர்ச்சி பெற்ற அவர் பொல்கொல்ல கூட்டுறவு வித்தியாலயத்தில் விசேட சான்றிதழ் பெற்றுள்ளார். சுனாமியால் அவரினதும் அவரின் மகளினதும் வீடுகள் முற்றுமுழுதாக அழிவுற்றன. சுமனா மீண்டும் அவை அனைத்தையும் அவரின் முயற்சியால் அபிவிருத்தி செய்து கொண்டார். சமாதானதத்துக்காக பெண்கள் என்ற ரீதியில் நன்றாகச் செயல்பட வேண்டும் என்கிறார் அவர். உபதேசத்தை விட முன்மாதிரியே மேல் எனக் கூறுகிறார். தனது அமைதியான குணத்தினால் குடும்பத்திலும், பிரதேசத்திலும் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. மானெல் பெர்னான்டோ - திரிய பெண்கள் சிறுவர் மன்றம், களுத்துறை

ஒன்பது பேர் கொண்ட குடும்பத்தில் மூத்தவரான மானெல் சமாதானத்திற்குத் தேவையான செவிமடுத்தல் மற்றும் பொறுமையில் மிகவும் தேர்ச்சி பெற்றுள்ளார். பிரதேசத்தின் சமூக வேலைகளின் போது முன்நின்று செயல்படும் இவர் ஒரு பாசமிகு தாய். நல்ல மனைவியாவார். ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியில் வேலை செய்யக் கூடிய திறன் கொண்டவர்.

05. ஏ.வி.கே. கருணாதுங்க - முன் பள்ளி அபிவிருத்தி மன்றம்

காப்புறுதி பிரதிநிதியாகவும், ஆடைகள் தைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பவராகவும் வஜிராவை குறிப்பிடலாம். வீட்டில் பல பிரச்சினைகள் மத்தியில் வாழ்பவர். இந்த வேலைத்திட்டத்தின் மூலம் பல விடயங்களைக் கற்றுக் கொண்டதாகச் சொல்லும் அவர், நாட்டின் சமாதானத்தை நினைப்பதற்கு முன் தன் கணவன் பிள்ளைகளுடன் தொடர்ந்தும் சமாதானத்துடன் வாழ்வதைப் பற்றி சிந்திப்பதாகக் கூறுகின்றார்.

06. அனுஷ்கா சந்தமாலி சிறிவர்தன - முன் பள்ளி அபிவிருத்தி மன்றம்

இவர் குடும்பத்தின் கடைக்குட்டியாவார். முன்பள்ளியொன்றை நடத்தும் இவர் இது தனக்கும் தனது பெற்றோருக்கும் பெரும் சக்தியாக இருப்பதாக கூறுகிறார். இந்த வேலைத்திட்டத்தில் பங்குபற்றி பல துறைகள் குறித்த அறிவைப் பெற்றுக் கொண்டமையும், அனுபவங்ளை பகிர்ந்து கொண்டமையும் மிக முக்கியமான ஒரு சந்தர்ப்பம் எனக் கூறுகின்றார். குடும்பத்தில் அனைவருடனும் ஒற்றுமையாக வாழும் அனுஷ்கா முன்பள்ளி பிள்ளைகளை கவரக்கூடிய ஆசிரியராவார். சமூகத்திற்கு சேவை செய்ய கிடைத்தால் அதை மிகவும் உயர்வாகவும், சிறப்பாகவும் செய்வதே நோக்கம் எனவும் கூறுகின்றார். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ கிடைத்ததை பெரும் பாக்கியமாக கருதுகிறார்.

07. எம்.எம்.எம். திசாநாயக்க

விதவை, ஐந்து பிள்ளைகளின் தாய். சிறு பிராயத்தில் தெற்கில் வாழ்ந்தவர்கள். வெளிவாரிப் பட்டதாரியான அவர் கணவர் காணாமல் போன பின்னர் வாழ்க்கையை முன்னேற்றிக்கொள்ள முயற்சி எடுத்ததுடன், பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை பெற்றுக் கொடுத்தார். அவர் பிரதேச சபைக்கு போட்டியிட்டு வெற்றியீட்டினார். மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். அமைப்புகளில் பதவிகள் வகிக்கும் அவர் தமது உறுப்பினர் பதவியினூடாக பிரதேச மக்களுக்கு சேவை செய்வதற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். சமாதானத்தை உருவாக்குவதற்கும், பிரதேசத்தில் சமாதானத்தை பாதுகாத்துக் கொள்ளவும் அவர் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு செயற்படுகிறார். சமூக சேவையின் மூலம் அவர் நல்ல மனத் திருப்தியை பெறுபவர்.

08. சந்திரா களுஆரச்சி – தேசிய முன்பள்ளி அபிவிருத்தி மன்றம்.

சந்திரா ஒரு விதவை. மூன்று பிள்ளைகள் உள்ளனர். இரு பிள்ளைகள் தொழில் புரிகிறார்கள். ஒருவர் வெளிவாரி பட்டப்படிப்பு படித்து வருகிறார். கணவர் இறந்து நான்கு வருடமாகிறது. பிளளைகளை நல்ல வழியில் வாழ வைப்பதைத் தவிர வேறு விசேடமான குறிக்கோளெதுவும் அவருக்கில்லை.

09 ஜே.டீ. எஸ். பத்மலதா – திரிய பெண்கள் மன்றம்.

பத்து பேர் உள்ளடங்கிய குடும்பத்தில் ஏழாவது பிள்ளை. வீட்டில் கிடைக்கும் ஒத்துழைப்பு மற்றும் அவர் பெற்றுள்ள பயிற்சிகள் அவரின் வேலைகளை வெற்றிகரமாக செய்து கொள்ள உறுதுணையாக உள்ளது. போக்குவரத்து வசதிகள் குறைபாடு அவரின் வேலைகளுக்கு இடையூறாக இருந்து வருகின்றது. அதனால் நேரத்திற்கு வேலையை முடிக்க முடியாது என்பதே அவரின் கருத்து. இன்று அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...க்கரிக்கப்பட்ட, பிரதேசத்துக்கு அத்தயாவசியமான ஒரு சமூக சேவகியாக இருந்து வருகின்றார். குடும்பத்திலும் கிராமத்திலும் நல்ல நிலமையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டு வருகிறார்.

10. கே.கே. தனவதி – திரிய பெண்கள் சிறுவர் மன்றம்

ஆறு பேர் உள்ள குடும்பத்தில் மூத்தவர். திருமணமான அவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். இரு பிள்ளைகள் தொழில் புரிகிறார்கள். தனது வேலைகளுக்கு குடும்பத்திடமிருந்து நல்ல பங்களிப்புக் கிடைப்பதாக கூறுகிறார். சமூக சேவைகளில் அவர் தலைமை வகித்து செயற்படுகிறார். அவருடைய வேலைகளுக்கு குடும்பத்தாரின் ஒத்துழைப்பு மிகவும் பலமாக அமைவதுடன், நேரத்திற்கு வேலை செய்வதே அவரின் வெற்றிக்குக் காரணமாகும். சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவியாவதே இவரின் எதிர்பார்ப்பாகும்.

11. ஜே.ஏ. புஷ்பலதா

எனது கணவரிடமிருந்து என் வேலைகளுக்குப் பெரிய அளவிலான பங்களிப்புக் கிடைக்கின்றது. கற்றுக் கொண்ட அனைத்தையும் நான் என் கணவருக்கும் சொல்லிக் கொடுப்பேன். எமது நாட்டின் யுத்தம் குறித்து பயமாக இருக்கிறது. பஸ் வண்டியில் பயணம் செல்லும் போது மீண்டும் வீடு திரும்பும் வரை உயிருக்கும் உத்தரவாதமில்லை. யுத்தத்தை தவிர்த்து சமாதானத்தை நிலைநாட்ட எம்மால் செய்ய முடிந்த அனைத்தையும் கிராம மட்டத்தில் செய்வோம். மற்றவர்களின் தேவைகளுக்கு செவிமடுக்கும் அளவிற்கு பொறுமை இருந்தால் பிரச்சினைகள் இருக்காது.

12. மல்காந்தி குணதிலக்க - முன்பள்ளி அபிவிருத்தி மன்றம்

சூழல் ஆர்வலரான மல்காந்தி முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு கல்வியை பெற்றுத் தருகிறார். அதைத் தவிர தையல் வேலையிலும் ஈடுபடுகிறார். தகுதிக்கு ஏற்றவாறு ஒரு தொழில் கிடைக்காததால் கவலையுடன் இருக்கிறார். சமாதானம் வேண்டுமானால் இந்த யுத்தம் முடிவடைய வேண்டும். சமாதானத்திற்காக செய்ய வேண்டியதைச் செய்ய எதிர்பார்துள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய கிடைத்ததை எண்ணி சந்தோஷப்படுகிறார்.

13. தயா காந்தி சில்வா

யுத்தம் வேண்டாம். சமாதானமே வேண்டும். சமாதானத்திற்காக யுத்தம் செய்ய வேண்டுமானால் அதற்கும் மனம் உறுதியாக உள்ளது. இது போன்ற வேலைத்திட்டங்களை எல்லா இடங்களிலும் செய்ய முடிந்தால் நல்லது. காரணம் மக்களுக்குப் பல விடயங்கள் தெரியாததே. ஆனால், இந்த வேலைத்திட்டம் மூலம் எமது உள்ளத்திற்கு பேசப்படுகிறது. நாமே யோசித்து செயல்பட வைக்கின்ற விதம் மிகவும் நல்லது. நான் திருமணமாகாமல் இருக்க தீர்மானித்தேன். எனது சுயாதீன இயல்பினால் மக்களுக்கு நிறைய சேவைகளைச் செய்லாம்.

14. பீ.டி. காஞ்சனா ரசாங்கனி - முன்பள்ளி அபிவிருத்தி மன்றம்

ரசாங்கனி திருமணமானவர். தையல் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றார். கணவர் அலுமினியம் வேலைகள் செய்பவர். சமூக சேவை வேலைகளுக்கு கணவரின் ஒத்துழைப்பு மிகவும் பலமாக உள்ளது. சமூக சேவை வேலைகளில் இன்னும் நன்றாக முதிர்ச்சியடையவில்லை. இந்த வேலைத்திட்டம் மிகவும் உற்சாகமாக உள்ளது. சிறந்த தலைமைத்துவத்துடன் ஒரு சமூக சேவகியாக வருவதே எனது நோக்கமாகும். ஒரு வெற்றிகரமான தாயாகவும், மனைவியாகவும் ஏனைய பணிகளையும் நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. பத்மா ஆரியலத்தா விஜேசிங்க

எனது கணவர் ஒரு ஓய்வு பெற்ற STF அதிகாரியாவார். அவர் என் [illegible] வேலைகளுக்கும் பெரும் சக்தியாக இருந்து வருகிறார். சுனாமி எங்கள் சொத்துக்கள் அனைத்தையும் அழித்தாலும், எங்கள் சக்தியால் அனைத்தையும் மீண்டும் கட்டியெழுப்பிவிட்டோம். அந்தச் சந்தர்ப்பத்தில் எல்லோரும் எமக்கு உதவி செய்தது அவர்களுடைய மட்டுமன்றி எங்களுடைய மனிதாபிமானம் காரணமாகவே என நினைக்கின்றேன். சுனாமியைப் போன்ற ஓர் அனர்த்தத்தில் எங்கள் சொத்துக்கள் அனைத்தையும் இழக்க நேரிட்டதால் யுத்தம் பற்றி நினைக்கவே பயமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துரைகள்

- இனங்களை அடிப்படையாக கொண்டு மக்களை அரசியல் கட்சிகளில் கட்சிகளில் பிரிக்க வேண்டாம்.
- துன்பம் வரும் போது சுனாமியில் மக்கள் ஒன்றிணைந்த விதத்தை முன்மாதிரியாக கொள்ளுங்கள்.
- பெண்களின் திறமைகளை வீட்டுக்கு மட்டும் வரையறை செய்வது சமூகத்திற்கு நீங்கள் இழைக்கும் அநீதியாகும்.
- நம்பிக்கையை கட்டியெழுப்புவதில் மொழி மிக முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்து வரும்.
- வகுப்பறை பாடங்களை விட கள அனுபவங்கள் மூலம் அதிகளவு மாற்றத்தை ஏற்படுத்தலாம்.
- பிறவியிலேயே பெண்களுக்கு நம்பிக்கையை கட்டியெழுப்பும் திறன் உள்ளபடியால் சமாதானச் செயற்பாட்டில் அவர்களின் திறமையை சாதகமாக பயன்படுத்தவும், மேம்பாடு செய்யவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A project carried out by
Association of War Affected Women with the support of
Women Defining Peace (WDP).
WDP is a project funded by the Canadian International Development Agency (CIDA)
and
implemented by a consortium of
World University Service of Canada (WUSC),
Cowater International and Match International Centre.

Women Defining Peace

Canadian International Development Agency
Agence canadienne de développement international

DESIGNED & PRINTED BY - 081 4472048

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org